அபரோக்ஷ அனுபூதி

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது



ப்ரக்ஞன்

அபரோக்ஷ அனுபூதி

(ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)

தெளிவுரை

ப்ரக்ஞன்

நூல் விபரம்

நூலின் பெயர்	:	அபரோக்ஷ அனுபூதி
தெளிவுரை	:	ப்ரக்ஞன்
வகை	:	உபதேசம்
முதற்பதிப்பு	:	2019
வெளியீடு	:	பராபரம் – கோவை.
பக்கங்கள்	:	153
விலை	:	அக விழிப்பு

பதிப்பாளர்	:	ஓம் கிராபிக்ஸ் கோயமுத்தூர்.

ஓம் ஸ்ரீ குருப்யோ நம:

அபரோக்ஷ அனுபூதி

(ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)

முகவுரை

வேதாந்த சாஸ்திரத்தில் உள்ள பிரகரண கிரந்தத்தின் பல்வேறு ஆழமான நூல்களில் ஒன்றுதான் பகவான் ஸ்ரீ ஆதிசங்கராச்சாரியாரால் எழுதப்பட்ட இந்த **'அபரோக்ஷானுபூதி'** என்னும் நூல் ஆகும். இந்த நூல் ஒரு **பிரக்ரியா கிரந்தம்** ஆகும். அதாவது, சாஸ்திரங்களில் கொடுக்கப்பட்ட ஆழமான அரிய பல உண்மைகளை விளக்குவதற்கான வரையறை களின் தொகுப்பு இந்த நூல். இந்த உரை நடை நூல் பார்ப்பதற்கு எளிமையாகத் தோன்றலாம். ஆனால், மிக ஆன்மீகத்தை ஆழமாகத் தேடுபவர்களுக்கு இது ஒரு அரிய பொக்கிஷம் எனலாம். இந்த நூலில் உள்ள ஸ்லோகங்களின் ஆழமான உட்பொருளை ஒரு சாதகர் நன்கு உணர்ந்துக் கொண்டவுடன் அது அவருக்கு ஆழ்ந்த தியானத்திற்கு வழி வகுக்கும்.

வேதாந்தத்தில் மூன்று வார்த்தைகளைப் பயன் படுத்துகிறோம். **பிரத்யக்ஷா, பரோக்ஷா** மற்றும் **அபரோக்ஷா.**

புலன்கள் மூலம் நாம் எதைக் காண்கிறோமோ அதுவே பிரத்யக்ஷம். பரோக்ஷா என்பது மறைமுகமாக அல்லது 'வேறொருவரின் கண்கள் மூலம்' அறிவைப் பெறுவதாகும். மேலும், அபரோக்ஷா என்பது நேரடியான மற்றும் ஆழ்நிலை அனுபவமாகும். அதன்பிறகு சுயத்தின் உண்மையான தன்மை குறித்து எந்த சந்தேகமும் இருக்காது. அறியாமையால் பிறக்கும் நம் எல்லா தவறான எண்ணங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் நேரடி அனுபவம் இது.

இது வேதாந்த கோட்பாட்டுகளைப் பற்றிய விரிவான விளக்கத்திற்கு உண்டான நூல் அல்ல, சாதகனின் நேரடி அனுபவத்திற்கான நடைமுறைக்கு வருகின்ற வழிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் நூல் ஆகும். இது தன்னைத் தான் அறிய விரும்பும் ஆர்வமுள்ள உண்மை சாதகனுக்கு இது ஒரு உயரிய நூல் என்பதினால், இது சாதகர்களை அவர்களது சொரூபத்தில் நிற்கத்தூண்டும் நிதித்யாஸனத்திற்கான பிரம்ம நிஷ்டை எனும் சொரூப தியானத்திற்கான பல குறிப்புகளை வழங்குகிறது.

பொதுவாக, வேதாந்த நூல்கள் பலவாறாக இருந்தாலும், அதில் மிகவும் முக்கியமாக மூன்று நூல்களை எடுத்துக் கொண்டு, அவைகளைப் **"பிரஸ்தான திரையம்"** (प्रस्थानत्रयी) என்று அழைக்கப்படுகின்றன.

அதாவது, **பிரஸ்தான திரையம்** என்றால், மூன்று முக்கியமான நூல்கள் என்று அழைக்கப்படுகின்றன.

அவைகள், **உபநிஷதங்கள், பகவத் கீதை** மற்றும் **பிரம்ம சூத்திரம்** என்பனவாகும். அந்தவகையிலே இந்நூல்கள் சுருதி பிரஸ்தானம், ஸ்மிருதி பிரஸ்தானம், தர்க்கப் பிரஸ்தான அடிப்படையில் அமைந்துள்ளது.

ஸ்ரீ சங்கராச்சாரியார் இந்த மூன்று நூல்களுக்கும் **பாஷ்யம்** (விளக்கம்) எழுதியுள்ளார். இதனால், அவருக்கு **பாஷ்யக்காரர்** என்ற பெயரும் உண்டானது.

பாஷ்யம் மட்டுமன்றி ஸ்ரீ சங்கரர் எழுதிய பல நூல்களில் தற்பொழுது நாம் அறிந்துக் கொள்ள இருக்கின்ற "**அபரோக்ஷ அனுபூதி**" என்ற இந்த நூலும் ஒன்றாகும்.

பிரஸ்தான திரயத்தின் அடிப்படையில் சுயமாக இயற்றப்படும் நூல்களுக்கு "**பிரகரண கிரந்தங்கள்**" என்று பெயர்.

இவைகள் வேதாந்தத்தின் ஆரம்ப நிலையில் உள்ள சாதகர்களுக்காக இயற்றப்படுபவை.

அந்த வகையில், மூன்று வகையான பிரகரண கிரந்தங்கள் உள்ளன. அவைகள்,

1. முழு வேதாந்தத்தின் சாரத்தையும் தருவது.

உதாரணம்:– **தத்துவ போதம்**.

2. ஒரு தலைப்பை மட்டும் எடுத்துக் கொண்டு விளக்குவது.

உதாரணம்:– **பஞ்சதசி**.

இந்நூலின் ஒவ்வொரு அத்யாயமும் ஒரு தலைப்பை எடுத்துக் கொண்டு விளக்கும்.

3. முதலில் முழு வேதாந்தத்தையும் சுருக்கமாகச் சொல்லிவிட்டு, பிறகு ஒரு தலைப்பை மட்டும் எடுத்துக் கொண்டு விரிவாகப் பேசுவது.

உதாரணம்:– **அபரோக்ஷ அனுபூதி**.

அதாவது, நாம் பார்க்கவிருக்கும் **அபரோக்ஷ அனுபூதி** இந்த வகை நூல்களுக்கு உதாரணம்.

இந்த அபரோக்ஷ அனுபூதியில் விரிவாக விளக்கப்படும் தலைப்பு **நிதித்யாசனம்** அல்லது தியானம்.

அதாவது ஒரு நிதித்யாசகன் எவ்வாறு இந்த உலகம் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று விளக்கப்படுகிறது.

ஸ்ரீ வித்யாரண்யர் என்ற ஞானி இந்த அபரோக்ஷ அனுபூதிக்கு "**வித்யாரண்ய தீபிகா**" என்ற பெயரில் மிகவும் தெளிவாக விளக்க உரை எழுதியுள்ளார்.

அனுபூதி என்ற சொல்லுக்கு ஞானம், உணர்தல் அல்லது அனுபவித்தல் என்று பொருள்.

அனுபூதி என்றால், அனுபவம் என்றும், அபரோக்ஷம் என்றால் நேரடியாக என்றும் பொருள் கொண்டு "**நேரடி அனுபவம்**" என்று அழைக்கப்படுகின்றது.

அபரோக்ஷ அனுபூதி என்றால் சுயமாக பிரகாசிக்கின்ற அனுபவம். அல்லது ஆத்மாவை நேரிடையாக அனுபவித்தல் என்று பெயர்.

நம்முடைய ஒவ்வொரு அனுபவத்திலும் நமக்கு அறிவு ஏற்படுகிறது. அதுப்போல, ஒவ்வொரு அறிவிலும் ஒரு அனுபவமும் ஏற்படுகின்றது. பொதுவில் அடைந்த அறிவில் நிச்சயமாக ஒரு அனுபவ உண்டாகின்றது.

ஆனால், நாம் பெறும் அறிவு உடனே அனுபவத்தை தர வேண்டும் என்ற அவசியமில்லை.

அப்படியானால், **அது என்ன நேரடி அனுபவம்?**

நாம் இதுவரை பார்த்து அனுபவிக்கின்ற அனுபவங்கள் எல்லாம் நேரடி அனுபவங்கள் இல்லையா? ஏன்? இதை மட்டும் நேரடி அனுபவம் என்று கூறவேண்டும்?

இங்கு, எதை நேரடி அனுபவமாக அடைகின்றோம்?

உலகத்தில் உள்ள எத்தனையோ பொருட்களைப் பார்க்கின்றோம், கேட்கின்றோம், அனுபவிக்கிறோம். அவைகளும் நேரடி அனுபவங்கள்தானே, அதிலிருந்து இதுமட்டும் தனித்த நேரடி அனுபவமாக எப்படி ஆகும்?

அப்படிப்பட்ட அனுபவம் எது? என்றால், அதற்கான தெளிவை வேதாந்த சாஸ்திரம் கூறுகின்றது.

நாம் இந்த உலகத்தில் காணுகின்ற எதுவும் நேரடியாக அனுபவம் ஆகாது என்றும், இதற்கு **"மனம்"** என்ற கரணம் அவசியம் வேண்டும் என்றும் கூறுகின்றது.

அதாவது, நாம் எதை அறிந்து அனுபவமாக்க வேண்டு மானாலும், அதற்கு இடைப்பட்ட கருவியாக **மனம்** ஒன்று அவசியம் தேவை என்பதை தெளிவுபடுத்துகின்றது.

சிலர் சொல்வார்கள், நான் இந்த புலன்களின் வாயிலாக அனுபவப்படுகின்றேனே என்று, அதையும் ஏற்க முடியாது. அது எப்படியெனில், கண்கள் ஒரு பொருளை பார்த்தும் மனம் அதனை கவனிக்காமல் விட்டு விட்டு, வேறு சிந்தனையில் இருப்பின், அந்த பொருளை நம்மால் அனுபவப்பட முடியாது.

இதுப்போன்றே மற்ற புலன்களான காது, மூக்கு, நாக்கு என்று அனைத்துமே மனதைக் கொண்டே அனுபவிக்கின்றது. ஆதலால், மனம் அவற்றை கவனிக்காவிடில், அந்தப் பொருளைப் பற்றிய அறிவு உண்டாக வாய்ப்பு இல்லாமல் போகின்றது.

ஆகவே, பொதுவாக ஒன்றைப்பற்றிய ஞானம் ஒருவனுக்கு உண்டாக வேண்டுமானால், எதையாவது ஒன்றைச் சார்ந்தே அவனுக்கு ஞானம் உண்டாகின்றது. அது புலன்களினாலோ, மனதினாலோ மட்டுமே உண்டாக முடியும். அதாவது, எதையாவது ஒன்றைச் சார்ந்தே அந்த ஞானம் உண்டாகின்றது. அதுவே அவனுக்கு அனுபவமாகின்றது.

அப்படியானால், எதையும் சாராமல் ஒன்று அனுபவிக்கக் கூடிய வகையில் இருக்கின்றதா? என்றால், ஆம், இருக்கின்றது. அதுமட்டுமே இருக்கின்றது. அதுவே **"ஆத்மா"** என்று அழைக்கப்படுகின்றது.

அது எதையும் சார்ந்து இருப்பதில்லை. ஆனால், இருக்கக்கூடிய மற்றவைகள் அனைத்தும் அந்த ஆத்மாவைச் சார்ந்தே இருக்கின்றன. ஆத்மா இருக்கின்றது என்பது அனைவருக்கும் அனுபவ உண்மை!

எப்படி?

ஒருவன் **"நான் இருக்கின்றேன்"** என்று கூறுவதில் சந்தேகம் கொள்வானா?

ஒரு இருட்டு அறையில் இருக்கின்ற ஒருவனுக்கு எதையுமே, புலன்களாலும், மனதினாலும் அறிய முடியவில்லை என்றாலும், "**நான்**" இருக்கின்றேன் என்ற தன் உணர்வு அவனிடம் நிச்சயமாக காணப்படும்.

அந்த "**நான்**" என்பது எது?

வேதாந்த சாஸ்திரங்கள் அனைத்துமே முடிவில் இந்த "**நான் யார்?**" என்று அறிந்துக் கொள்வதற்காகவே இத்தனை உபதேசங்களையும் கூறுகின்றது.

அதாவது, சூரியன் எப்பொழுதுமே இருக்கின்றது, ஆனால், மேகம் மறைத்துக் கொள்ளும் போது, அதன் பிரகாசம் இல்லாமல் போவதாகத் தோன்றுகின்றது.

சூரியனை மறைத்துக் கொண்டிருக்கின்ற மேகம் நீங்கினால், சூரியன் பிரகாசமாகத் தெளிவாகத் தெரிவதுப் போன்று, ஆத்மாவை அறிய விடாமல் மறைத்துக் கொண்டிருக்கின்ற அறியாமை என்ற தவறான புரிதல் நீக்குவதன் வாயிலாக ஆத்மாவின் பிரகாசத்தை அறிந்து கொள்ள முடியும்.

சூரியனின் பிரகாசத்தை மறைத்துக் கொண்டுள்ள மேகம் காற்றினால் விலக்கப்படும் பொழுது, எவ்வாறு பிரகாசமாக வெளிச்சம் வெளிப்படுகின்றதோ? அதுப்போல, ஆத்மாவை மறைத்துக் கொண்டுள்ள அறியாமை **நான் யார்?** என்ற விசாரணை மூலமாக விலக்கப்படும் பொழுது, அங்கு

அறிவு **அனுபூதியாக** பிரகாசிக்கின்றது. அதாவது, இவ்வாறு **நான் யார்?** என்று விசாரித்து அறியும்போது, அறியாமை அகன்று, தன்னுடைய உண்மை சொரூபம் வெளிப்படுகின்றது.

இந்த ஆத்ம அனுபவம் உண்டாவதற்கு எந்தவித புற இந்திரியங்களின் உதவியோ, அல்லது அந்தக்கரணங்களின் உதவியோ இன்றி இயல்பிலேயே அதுவாகவே இருக்கின்றோம் என்பதை இந்த நூலின் வாயிலாக அதை அனுபவமாக அறிவதற்குத் தேவையான சாதனங்களையும், விளக்கங்களையும் "**அபரோக்ஷ அனுபூதி**" என்ற ஒரு நேரடி அனுபவமாக ஸ்ரீ சங்கராச்சாரியார் கொடுக்கின்றார்.

இந்த அபரோக்ஷ அனுபூதி என்ற நூலில் 144 ஸ்லோகங்களின் வாயிலாக விளக்கமாக கூறுகின்றார். ஆத்மா பற்றிய உபதேசத்தைக் கேட்டு அந்த அறிவு நம் மயமாகும் போது, நாம் பெற்ற அறிவு **அனுபூதியாக** மாறுகிறது.

இந்நூலில் நாம் பெற்ற ஞானத்தை அனுபூதியாக்கும் உபாயம் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு, நாம் பெற்ற ஞானம் ஞான நிஷ்டையடையும் போதுதான் ஞானத்தின் பலனான **மோக்ஷம்** கிட்டுகிறது.

ஆத்மா பற்றி நாம் அடையும் ஞானத்துக்குப் பகைவன் நமது சம்ஸ்காரங்களும், வாசனைகளும்தான் என்பதை அறிந்து, அந்த தடைகளை நீக்க நாமே முயற்சிக்க வேண்டும். முயற்சி தீவிரமாகும்போது **ஞான நிஷ்டை** எளிதில் சித்திக்கும்.

அனுபூதி என்பதற்குத் **தடையில்லாத ஞானம்** என்று பொருள்.

அபரோக்ஷம் என்ற சொல்லுக்கான விளக்கத்தைப் பார்ப்போம். **அக்ஷம்** என்ற சொல்லுக்குப் **புலன்கள்** என்று பொருள். **பரோக்ஷம்** என்பதற்குப் **புலன்கள் தாண்டி இருப்பது** என்றும், **ப்ரத்யக்ஷம்** என்பதற்குப் **புலன்களின் எல்லைக்குள் இருப்பது** என்றும் பொருள்.

ஆனால், அபரோக்ஷம் என்னும் சொல்லுக்கு புலன்களின் தேவையின்றி சுயமாக விளங்கும் ஒரு பொருளைக் குறிக்கிறது. பார்க்கப்படுவதும் அல்லாத, பார்க்க இயலாததும் அல்லாத பிரம்மத்தையே **அபரோக்ஷம்** என்ற சொல் குறிக்கிறது. அதுவே பிரம்மம் என்றும், இரண்டற்றது என்றும் அத்வைதம் என்றும் கூறப்படுகிறது. மேலும், பிருஹதாரண்யக உபநிஷத்தில் **அபரோக்ஷம்** என்ற சொல்லுக்கு **ஆத்மா** என்றும் பொருள் சொல்லப்படுகிறது.

அபரோக்ஷ அனுபூதி என்னும் இந்த நூலில் நூற்றி நாற்பத்து நான்கு ஸ்லோகங்கள் உள்ளன. அதில், முதலில் வருகின்ற பதினோரு ஸ்லோகங்கள் வேதாந்த அறிமுகத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதன்பிறகு, **த்வம்** பத விசாரமும், இந்த உலகத்தை **மித்யா** என்று புரிந்து கொள்வதும், **ராஜயோகம்** என்ற தலைப்பில் தியானமும் விளக்கப்படுகின்றன.

ஆத்ம ஞானத்தினுடைய தன்மையையும், ஞானி இந்த உலகத்தை எவ்வாறும் பார்ப்பான் என்பது பற்றியும் இதில் விளக்கப்படுகின்றன. முதலில் இந்த நூல் ஒரு பிரார்த்தனை ஸ்லோகத்துடன் துவங்குகிறது. நூலாசிரியர் தான் துவங்கிய இந்த நூல் நல்ல முறையில் இயற்றி முடிக்கப்பட வேண்டும் என்பதே பிரார்த்தனையினுடைய தலையாய நோக்கம் ஆகும்.

இதற்கு **கிரந்த சமாப்தி** என்று பெயர். பிரார்த்தனை ஒரு கர்மம் ஆதலால் நூல் இயற்றுவதில் ஏதேனும் தடைகள் இருப்பின் அவற்றை அது நீக்கும். அதே நேரம் இந்த நூலைப் பயிலும் மாணவர்களுக்கு, அவர்கள் வாழ்வில் எதைச் செய்தாலும் பிரார்த்தனையுடன் ஆரம்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்துவதற்காகவும் பிரார்த்தனை செய்யப்படுகிறது.

பிரார்த்தனையின் மூன்றாவது பலன் **படன சமாப்தி**. அதாவது, இதை பயிலும் மாணவர்கள் இந்நூலை நன்முறையில் பயின்று முடிக்க வேண்டும் என்பதாகும்.

பிரார்த்தனை மூன்று விதத்தில் செய்யப்படுகின்றது.

முதலில் சகுனப் பிரம்மமாகவுள்ள தனது இஷ்ட தேவதையை நோக்கியும், இரண்டாவது இந்த உலகின் முழுமையான காரணமாக சமஷ்டி தத்துவமாக உள்ள ஈஸ்வரனை நோக்கியும், இறுதியில் நமக்கு ஆத்ம தத்துவத்தை போதிக்கும் குருவை நோக்கியும் பிரார்த்தனை செய்யப்படுகிறது.

பிரார்த்தனை ஸ்லோகம்

ஸ்ரீஹரிம் பரமானந்தம் உபதேஷ்டார மீஸ்வரம்
வ்யாபகம் சர்வ லோகானாம் காரணம் தம் நமாம்யகம்

பொருள் விளக்கம்:

என் இஷ்ட தேவதையாகவும், சத்குருவாகவும், எங்கும் நிறைந்தவராகவும் உள்ளவரை வணங்குகிறேன். ஸ்ரீ என்ற சொல்லுக்கு லக்ஷ்மி என்று பொருள். ஆனால், லக்ஷ்மி என்றால், **செல்வம்** என்றே பெரும்பாலானவர்கள் கருதுகின்றனர்.

அஷ்ட லக்ஷ்மிகளில் அவரவருக்குத் தேவையானதை அடைவதே உண்மையில் பெரும் "**செல்வம்**" என்று பொருள்படும். ஆதலால், இங்கு செல்வம் என்று குறிப்பிடுவது வித்யாலக்ஷ்மியான **ஆத்ம வித்தையை** மட்டுமே குறிக்கின்றது.

மோக்ஷத்தை அடைய விரும்புபவர்களுக்கு இங்கு செல்வம் **ஆத்ம வித்யை** மட்டுமே ஆகும்.

ஹரி என்றால், அறியாமையை நீக்குபவர் என்றுதான் பொருள்.

"**பிரம்ம வித்யயா அஞ்ஞானம் ஹரதி இதி ஸ்ரீ ஹரி**"

அஞ்ஞானத்தை அழித்து பிரம்மஞானம் என்னும் செல்வத்தை வழங்குபவரே ஸ்ரீஹரி ஆவார். பரமானந்தம் என்றால் ஸ்ரீஹரியின் சொரூபமே **மேலான ஆனந்தம்** என்பது பொருள்.

உபதேஷ்டாரம் என்பது ஈஸ்வரனாகவே இருக்கும் குருவைக் குறிக்கிறது. குரு உபதேசிக்கும் வார்த்தைகளில் சிரத்தை வருவதற்காகவே குருவிடம் அளவற்ற மதிப்பு காட்டப்படுகிறது.

ஈஸ்வரம் என்ற சொல்லின் மூலம் இந்த உலகின் நிமித்த காரணமாக இருப்பவரும், வ்யாபகம் சர்வலோகானாம் என்ற சொற்றொடரின் மூலம், உலகின் உபாதான காரணமாக இருப்பவரும் "**ஈஸ்வரன்**" என்று குறிப்பிடப்படுகிறார்.

இனி, இந்த "**அபரோக்ஷ அனுபூதி**" என்ற இந்த நூலில் கொடுக்கப்பட்டுள்ள 144 சமஸ்கிருத மூல ஸ்லோகங்களை ஒவ்வொன்றாகப் படித்து, அதன் விளக்கமான பொருளை எளிய தமிழ் மொழியில் அறிந்து கொள்ளலாம்.

நன்றி!

என்றும் அன்புடன்,

ப்ரக்ஞன்.

தொகுப்புரை

ஸ்லோகங்களின் விளக்கங்கள்

01–01 மங்கல ஸ்லோகம்.

01–02 நூலினுடைய கருத்து, பலன், அதிகாரித்துவம் கூறப்படுகின்றது.

03–09 சாதன சதுஷ்டயம் விளக்கப்படுகின்றது.

10–11 விசாரம் செய்து நானே பிரம்மன் என்ற எண்ணத்தை அடைய வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றது.

12–16 வேதாந்த சாரம் சொல்லப்படுகின்றது.

17–40 ஆத்ம–அனாத்மா விசாரம், நான் தேகமல்ல என்றும், ஞான ஸ்வரூபம் விளக்கப்படுகின்றது.

41–88 ஜகத் மித்யா என்ற நிலை நாட்டப்படுகின்றது.

89–99 பிராரப்த கர்மபலன் ஞானிக்கு கிடையாது என்று விளக்கப்படுகின்றது.

100–134 நிதித்யாஸனம் விளக்கப்படுகின்றது.

135–138 காரிய–காரணம்விளக்கப்படுகின்றது.

139–144 நிதித்யாஸன சாதனங்களை பின்பற்றுபவர்களின் அதிகாரித்துவம் விளக்கப்படுகின்றது.

கடவுள் வாழ்த்து

ஸ்ரீஹரிம் பரமானந்தம் உபதேஷ்டார மீஸ்வரம் |
வ்யாபகம் சர்வலோகானாம் காரணம் தம் நமாம்யகம் || 1 ||

श्रीहरिं परमानन्दमुपदेष्टारमीश्वरम् ।
व्यापकं सर्वलोकानां कारणं तं नमाम्यहम् ॥ १॥

1. மோட்சத்தை விரும்புபவர்களுக்கு ஆத்ம வித்யாவை கொடுத்து அவித்யாவை நீக்குகின்றவர், புனிதமான ஆனந்த ஸ்வரூபமாக இருப்பவர், ஈஸ்வரனாக இருப்பவர், உலகத்தையே ஆள்பவர், ஜகத்தின் தோற்றத்திற்கு உபாதான, நிமித்த காரணமாக இருப்பவர், அனைத்து உலகங்களாகவும் வியாபித்து இருப்பவர். இத்தகைய பெருமை மிக்க ஸ்ரீ ஹரியை அதாவது, என்னுடைய அறியாமைகளை நீக்குபவரை நான் வணங்குகி றேன்.

அபரோக்ஷானுபூதிர் வை ப்ரோச்யதே மோக்ஷ சித்தயே |
சத்பிரேவ ப்ரயத்நேந வீக்ஷணீயா முஹுர் முஹு: || 2 ||

अपरोक्षानुभूतिर्वै प्रोच्यते मोक्षसिद्धये ।
सद्भिरेषा प्रयत्नेन वीक्षणीया मुहुर्मुहुः ॥ २॥

2. அபரோக்ஷ அனுபூதி என்ற இந்த நூலின் வாயிலாக மோக்ஷம் என்ற பலனை அடைவதற்காக இதை எழுதுகின்றேன் என்று ஸ்ரீ சங்கரர் கூறுகின்றார்.

மோக்ஷம் என்றவுடன் பெரும்பாலானவர்கள் இறந்தவுடன் அடையும் ஒரு இடம் என்று கருதுகின்றனர். ஆனால், சாஸ்திரம் மோக்ஷம் என்றால் வாழும் பொழுதே மன நிறைவுடன், அமைதியாகவும், ஆனந்தமாகவும் வாழ்தலை மட்டுமே "**மோக்ஷம்**" என்று கூறுகின்றது.

இவ்வாறு, வாழுகின்ற காலத்திலேயே முழு நிறைவான மனதுடன் ஆனந்தமாக வாழ்வதையே "**ஜீவன் முக்தி**" என்றும், அவ்வாறு வாழ்ந்து விட்டு, இந்த ஸ்தூல உடலை விட்டவுடன், மீண்டும் பிறக்காமல் இருப்பதை "**விதேக முக்தி**" என்றும் சாஸ்திரம் அழைக்கின்றது.

இவைகளையே **மோக்ஷம்** எனப்படும்.

அப்படிப்பட்ட மோக்ஷத்தை அடைவதற்குத் தகுதியானவர்கள் யார்?

மோக்ஷத்தை அடைய விரும்பி விசாரம் செய்வதற்கு தகுதியை உடையவர்கள் யார் என்றால், **சாதன சதுஷ்டய சம்பத்தி** என்ற நான்கு பண்புகளை உடையவர்கள் மட்டுமே இந்த மோக்ஷத்திற்கு தகுதியானவர்கள் என்று பகவான் ஸ்ரீ சங்கரர் குறிப்பிடுகின்றார்.

அதாவது, விசாரத்திற்கு தகுதி உடையவர்களால் மட்டுமே இதுபோன்ற சாஸ்திரத்தை புரிந்துக்கொள்ளவும் முடியும். அந்தத் தகுதியை அடையவும் முடியும்.

அந்த நான்கு பண்புகளை உடையவர்கள் இந்த நூலை எப்படிப் பயன் படுத்த வேண்டும்?

மனத்தூய்மையுடன் இருப்பவர்கள் **சத் புருஷர்கள்** எனப்படுவார்கள். இவர்களே சாதன சதுஷ்டய தகுதிகளை அடைந்திருப்பவர்கள் எனலாம்.

இத்தகைய தகுதியைக் கொண்ட இவர்களைப் போன்றவர்கள் ஆத்மாவை நேரிடையாக அனுபவிக்கும்

வழியாக இந்த நூலைப் படித்து நிலையான மோட்சத்தை அடைவதற்கு முழுமுயற்சியுடன் ஈடுபட வேண்டும்.

முழு முயற்சி என்பது, தக்க சத் குருவின் வாயிலாக, தன்னைப் பற்றியும் தீவிரமாக விசாரித்து அறியப்பட வேண்டும். இந்த நூலைப் படித்துப் புரிந்துக் கொள்ள வேண்டும்.

இந்த நூலை ஒரு முறை மட்டும் படித்தால் போதுமா? என்றால், முடியாது என்கின்றார் ஸ்ரீ சங்கரர்.

அவ்வாறு ஒருமுறைப் படிப்பது என்பது இதுபோன்ற ஆத்ம ஞான நூல்களுக்கு பொருந்தாது என்றும், இதுபோன்ற ஆத்மாவை அனுபவமாக அறியக்கூடிய நூலை மீண்டும், மீண்டும் இடைவிடாமல் படித்து விசாரம் செய்ய வேண்டும் என்றும் இந்த ஸ்லோகத்தின் மூலமாக கூறுகின்றார்.

ஸ்வ வர்ணாச்ரம தர்மேண தபஸா ஹரிதோஷ நாத் |
ஸாதநம் ப்ரபவேத் பும்ஸாம் வைராக்யாதி சதுஷ்டயம் || 3 ||

स्ववर्णाश्रमधर्मेण तपसा हरितोषणात् ।
साधनं प्रभवेत्पुंसां वैराग्यादि चतुष्टयम् ॥ ३॥

3. வேதத்தின் கர்ம காண்டமும், வேதத்தின் இறுதிப்பகுதியான வேதாந்தத்தின் உபநிஷதங்களும்

கூட சாதன சதுஷ்டய சம்பத்தி என்ற தகுதியைக் கொடுப்பதற்காகவே உபதேசிக்கப்படுகின்றது.

இந்த தகுதியை அடைந்தவர்களால் மட்டுமே விசாரத்தின் வாயிலாக ஞானத்தை அடைய முடியும்.

அந்த சாதன சதுஷ்டய சம்பத்தியை எப்படி அடைவது?

இந்த சாதனைகளை அறிந்துக் கொள்வதையே யோகம் என்று சாஸ்திரம் அழைக்கின்றது. கீதையில் கூட பகவான் கிருஷ்ணரும் இந்த சாதனைகளை வளர்த்துக் கொள்ளும் வழிமுறைகளை பல யோகங்களாகப் போதிக்கின்றார்.

இந்த சுலோகத்தில் சாதன சதுஷ்டய சம்பத்தியை எவ்வாறு அடைவது என்றும், அதற்கான தகுதிகள் என்ன என்பதையும் ஸ்ரீ சங்கரர் தெளிவுபடுத்துகின்றார்.

அந்தத் தகுதிகளை அடைவது எப்படி?

இறைவனை திருப்திப் படுத்துவதின் வாயிலாக மனிதன் ஞானயோகத் தகுதியை அடைந்து விடுகின்றான் என்று இந்த ஸ்லோகத்தில் கூறுகின்றார்.

சரி! இறைவன் என்பவன் யார்? என்ற சந்தேகம் உண்டானால், அதற்கு சாஸ்திரம் மிகவும் அற்புதமாக விளக்கம் அளிக்கின்றது.

இறைவன் என்பவன் இந்த ஜகத் காரணன். அதாவது இந்த உலகத்தைப் படைத்தவன். அதாவது, இந்த உலகமாகவே மாறியவன். அவனே எல்லா உயிர்களிலும் அந்தர்யாமியாக இருந்து இந்த உலகத்தை வழி நடத்துகின்றான்.

இப்படி கண்ணிற்குத் தெரியாத அந்தர்யாமியையே **"ஆத்மா"** என்று அழைக்கின்றோம். அப்படிப்பட்ட ஆத்மா ஒன்றே அனைத்துமாக வியாபித்து இருக்கின்றது என்றும், அதனையே நிர்குண பிரம்மம் அல்லது இறைவன் என்றும் சாஸ்திரம் விளக்கமளிக்கின்றது.

இறைவனைத் திருப்திப்படுத்துவது எவ்வாறு?

அதற்கும் இந்த ஸ்லோகத்திலேயே விடை அளிக்கின்றார். அதாவது, தர்மப்படி வாழ்வதாலும், தவத்தினாலும் மட்டுமே இறைவனைத் திருப்திப்படுத்த முடியும் என்கின்றார்.

தவம் என்றால் என்ன?

'தர்மப்படி வாழ்தலும், உலகில் வரும் துன்பங்களைப் பொறுத்தலும், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமையுமே தவம்' என்கின்றார்.

இதனையே திருவள்ளுவரும்,

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு.(அதிகாரம்:தவம் குறள் எண்:261)

தனக்கு நேரிட்ட துன்பத்தைத் தாங்கிக் கொள்ளுதலும், பிற உயிர்களுக்கு ஊறு செய்யாமையும் ஆகிய பண்பே தவம் என்பது இந்தக்குறளின் பொருள்.

இதுபோன்ற தவம் செய்வதினாலேயே இறைவனைத் திருப்திப்படுத்த முடியும்.

இந்த அடிப்படை பண்புகள் இன்றி, இறைவனின் அனுக்கிரஹம் பெறாமல், இங்கு கூறப்படுகின்ற நான்கு உயர் பண்புகள் உண்டாவது கடினம் என்கின்றார்.

பொதுவாக, உலகியல் வாழ்க்கையில் ஒருவனைத் திருப்திப் படுத்த வேண்டும் என்றால், அவனது சொற்களைக் கேட்டு நாம் நடக்க வேண்டும். அப்பொழுதுதான் அவன் திருப்தியடைந்து நமக்குத் தேவையானவற்றை செய்வான்.

உதாரணமாக, நாம் படிக்கச் செல்லும் பள்ளிக் கூடங்களில் ஆசிரியரின் சொற்படி கேட்டு நடந்து, அவரைத் திருப்திப் படுத்துவதும், வேலை செய்யும் அலுவலகத்தில், நமக்கு மேல் அதிகாரிகளின் சொற்படி நடந்து அவரைத் திருப்தி செய்வதுமாக, இவ்வாறு பலரை அனுசரித்து வாழ்கின்றோம் அல்லவா?

அதுப்போலவே, இறைவன் வேதத்தின் வாயிலாக தர்மத்தை அனைவருக்கும் உபதேசிக்கின்றார். அதுவே அவரது வேத வாக்கு.

ஆகவே, அவரது வாக்கை மீறாமல், அவர் கூறும் தர்மப்படி ஒருவன் வாழ்ந்தான் என்றால், அவன் நிச்சயமாக இறைவனைத் திருப்தி செய்து விடுபவன் ஆகின்றான் என்பதை எடுத்துக் கூறி, தர்மப்படி வாழ்வதே தவம் என்கின்றார்.

அடுத்து, எது தர்மம்?

அவரவர்கள் வர்ணாசிரம வாழ்க்கை நெறிகளின் படி வாழ்வதே தர்மம் என்று சாஸ்திரம் கூறுகின்றது.

வர்ணம் என்பது அவரவர் செய்யும் வேலையிலுள்ள பொறுப்புக்களைக் குறிக்கின்றது. ஆசிரமம் என்பது வாழ்க்கை முறை.

அதாவது, பிரம்மச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாஸம் என்ற ஆசிரம முறைகளில், அவரவர்கள் எந்த ஆசிரம நிலையில் தற்பொழுது இருக்கின்றார்களோ, அந்த அந்த நிலையில் அவர்கள் சரியாக வாழ்வதை மட்டுமே **"தர்மம்"** என்று சாஸ்திரம் அறிவுறுத்துகின்றது.

அடுத்து, வர்ணம் என்பதை அவரவர்கள் செய்கின்ற தொழிலின் அடிப்படையில் கடமைகளை சரியாகச் செய்ய வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றார்.

ஆனால், இன்று தர்மம் தடம் மாறிவிட்டது!

பிரம்மச்சாரி பிரம்ம வித்யாவைக் கற்பதற்கு பதிலாக, கலாச்சார சீர்கேடு கொண்ட கல்வியினால், கசடற கற்காமல், கண்டதைக் கற்று, திருமணத்திற்கு முன்பே தவறாக உறவு

வைத்துக் கொள்வதும் தற்பொழுது அதிகமாகக் காண முடிகின்றது.

இல்லறத்தில் இருப்பவர்கள் நேர்மையான முறையில் பொருள் ஈட்டாமல், தவறாக லஞ்சம், ஊழல் செய்து பொருட்களைச் சம்பாதிப்பதும், கருமிகளாக தான தர்மங்கள் செய்ய மறுப்பதும் நடைமுறையில் காண முடிகின்றது.

அடுத்து, வயது முதிர்வு ஆனதும் பொறுப்புகளைத் தன் வாரிசுகளுக்கு பகிந்து அளித்து விட்டு, சாஸ்திர சிரவணம் செய்து இறைவனை சிந்திக்காமல், கடைசி மூச்சு நிற்கும் வரையும், பொறுப்புக்களை எடுத்துக் கொண்டு, பீரோ சாவியை தன் வசம் மட்டுமே வைத்துக் கொண்டு வாரிசுகளுக்கு கொடுக்காமல் தானே கட்டிக்காப்பதும் நடைமுறையில் காண்கின்றோம்.

சாஸ்திரங்களை கற்று, சதா இறைவனை சிந்தித்து, எப்பொழுதும் ஆத்ம நிஷ்டையில் இருந்து, பிறவிப் பெருங்கடலைகடந்து கரைசேரப் பயன் படுத்தும் சந்நியாஸ வாழ்க்கை தர்மத்தை, உத்தம சந்நியாஸியாக வாழாமல், வயிற்றுப் பிழைப்புக்காக யாக யக்ஞுங்கள் செய்தும், அரசியல் பிரமுகர்களை சந்தித்து நன்கொடைகளைப் பெற்றும், அவர்களுக்கு தேவையான கர்மங்களில் உதவிகள் செய்தும்,

பல கர்ம காரியங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பொருள் ஈட்டுவதை தற்பொழுதைய சந்நியாஸ வாழ்க்கையாகமாற்றிக் கொண்ட பலர் இன்றைய நவீன தர்மமாக இவைகளை மேற்கொள்கின்றனர்.

ஆகவே, சாஸ்திரம் கூறுகின்ற தர்மப்படி சரியாக வாழ்பவன் இறைவனைத் திருப்திப்படுத்தி சாதன சதுஷ்டய சம்பத்தி என்ற சாதனைகளை அடைகின்றான்.

அவைகள், வைராக்கியம், விவேகம், சமாதிஷட்க சம்பத்தி, முமூக்ஷுத்வம்ஆகிய நான்கு வகையான சாதனங்கள் ஆகும். இதுவே, ஞானயோகத்திற்கான தகுதிகளாகஇந்த ஸ்லோகத்தில் கூறப்படுகிறது.

ப்ரஹ்மாதிஸ் தாவராந்தேஷு வைராக்யம் விஷயேஷ்வநு |
யதைவ காகவிஷ்டாயாம் வைராக்யம் தத்தி நிர்மலம் || 4 ||

ब्रह्मादिस्थावरान्तेषु वैराग्यं विषयेष्वनु ।
यथैव काकविष्ठायां वैराग्यं तद्धि निर्मलम् ॥ ४॥

4. இந்த ஸ்லோகத்தில் வைராக்கியத்திற்கு முன்னுரிமைக் கொடுக்கின்றார் ஸ்ரீ சங்கரார். காரணம், வைராக்கியம் இல்லாமல் எதையும் அடைய முடியாது

என்பதினால் இங்கு வைராக்கியம் முதலில் வருகின்றது.

சரி! வைராக்கியம் என்றால் என்ன?

இந்த வைராக்கியம் இரண்டு வகைப்படும். ஒன்று ஜிக்ஞாஸா வைராக்கியம். மற்றொன்று ஜிகாஸா வைராக்கியம் எனப்படும்.

ஜிக்ஞாஸா வைராக்கியம் என்பது, விவேகத்தினால் வருகின்ற வைராக்கியம். இது நிலையானதாக, திடமாக இருக்கும். இந்த வைராக்கியத்தை மாற்ற முடியாது. இதையே **"ஜிக்ஞாஸா வைராக்கியம்"** எனப்படுகின்றது.

அடுத்து, ஜிகாஸா வைராக்கியம் என்றால் வெறுப்பு, அல்லது விரக்தி மூலமாக வருவது என்று கூறப்படுகின்றது.
அதாவது, ஒருவர் தன்னை திட்டி விட்டால், அவரிடம் இனி பேசக்கூடாது என்ற வைராக்கியம் உண்டாகி, சில காலங்கள் பேசாமலேயே இருந்துவிட்டு, பிறகு பேசுவது.

அடுத்து, தன்னிடம் மிகுந்த பாசமாக இருந்தவர்களின் மரணம், இந்த உலகையே வெறுக்கச் செய்து, விரக்தியடையச்

செய்யும். இது கொஞ்ச காலம் இருந்து விட்டு, பிறகு எப்பொழுதும் போல இந்த உலகத்தை அனுபவிப்பது.

இதுப்போன்ற நிலையற்ற வைராக்கியத்தை "**ஜிகாஸா வைராக்கியம்**"எனப்படுகின்றது.

அதாவது, வைராக்கியம் என்பதை "**பற்றின்மை**" எனலாம். ஆனால், சிலர் வைராக்கியம் என்பதை குறிக்கோள் என்று நினைத்துக் கொள்கின்றனர்.

அதனால், ஒரு சிலர்தங்கள் வாழ்க்கையில் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற வைராக்கியம் கொண்டுள்ளேன் என்று கூறிக்கொண்டு, தங்கள் கடைகளில் இரண்டு கழுதைகள் உள்ள படத்தை வாங்கி வைத்து, தினமும் அந்த படத்திற்குப் பூ போட்டு, பூசை செய்து வழிபடுகின்றார்கள்.

காரணம் கேட்டால், "**என்னைப்பார் யோகம் வரும்**" என்று அந்த கழுதைகளின் கீழே எழுதியுள்ளதை நம்பி வாங்கி வந்ததாகவும், அந்த படத்தைக் கடையில் வைத்து வழிபட்டால் இலாபமாக அதிக பணம் வரும் என்றும் கருதி மூட நம்பிக்கையில் வியாபாரம் செய்கின்றனர்.

கழுதைப் படத்தை மாட்டி வைத்தால் பணம் கிடைக்கும் என்றால், மனிதன் கழுதையைக் கூட கும்பிடத் தயாராக இருக்கின்றான் என்கின்றார் சுவாமி குருபரானந்தா போன்றவர்கள்.

இத்தகைய மூடர்கள் பணத்திற்காக வைராக்கியத்தை மாற்றிப் புரிந்து கொண்டு, பொருளீட்டும் காரியத்தில் கண்ணாக இருக்கின்றார்கள்.

இவர்களைப் போன்ற மூடர்களுக்கு புரிய வைக்க இந்த சுலோகத்தில் ஸ்ரீ சங்கரர் ஒரு உதாரணம் கொடுக்கின்றார்.

ஒருவன் களைப்பின் மிகுதியால், சோர்ந்து ஒரு மரத்தின் அடியில் அமரும் போது, மரத்தின் மீது தங்கி இருந்தகாகா ஒன்று அவன் மீது, எச்சம் போட்டு விடுகின்றது எனில், அந்த எச்சத்தை வெறுப்பினால் அவன் உடனடியாக நீர் விட்டுக்கழுவியோ, அல்லது துணியினால் துடைத்துக் கொள்ளவோ முயற்சிக்கின்றான் அல்லவா?

அதுப்போல, இந்த உலகப் பொருட்களின் மீது உடனடியாக வெறுப்பு வர வேண்டும்என்கின்றார்.

அதுவும் அந்த வெறுப்பு அரைகுறையாக இல்லாமல், முழுமையாக வருவதையே"**வைராக்கியம்**"என்று ஶ்ரீ சங்கரர் குறிப்பிடுகின்றார்.

அதாவது,ஶ்ரீ சங்கரர் இந்த நூலில் வைராக்கியத்தை ஏன் முதலில் வைத்துள்ளார் என்பதற்கு, அவர் வழி வந்த மகான்களில் ஒருவரான **ஶ்ரீ வித்தியாரண்யர்** இதற்கு விளக்கம் கொடுக்கின்றார்.

ஒருவனுக்கு இந்த உலகப் பொருட்களின் மீது பற்று இருக்கின்றவரை தியானம் செய்ய அமரும் பொழுது எல்லாம், அவன் மனம் புறப் பொருட்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு இருக்கும் என்றும், அதற்காக முதலில் அவன் ஆசைப்படும் உலகப் பொருட்களின் மீது வெறுப்பு வைராக்கியமாக முதலில் வர வேண்டும் என்றும் கருதியே இதை ஆச்சாரியார் முதலில் கொடுத்துள்ளார் என்று விளக்கம் கொடுக்கின்றார்.

அதாவது, பார்க்கும் விஷயங்களிலும், கேட்கும் விஷயங்களிலும் வைராக்கியம் வர வேண்டும்.

வைராக்கியம் என்பது மனதில் இருக்க வேண்டிய புரிதலுடன் கூடிய பற்றற்ற பக்குவ நிலையாகும்.

இவ்வாறு பற்றற்ற வைராக்கியம்தான் முழுமையானது என்கின்றார். பொதுவாக, விவேகத்தின் மூலமாக அல்லவா வைராக்கியம் வரும்? என்றால், பெரும்பாலானவர்களுக்கு விவேகம் இருந்தும் வைராக்கியம் வருவதில்லை.

உதாரணமாக, **"அநித்யம் அசுகம் லோகம்"** என்ற சாஸ்திர வார்த்தையை நன்குப்படித்து அறிந்துக் கொண்ட பண்டிதர்கள் பலரும், அதனால், கிடைத்த விவேகத்தினால் வைராக்கியத்தை அடையாமல், மேலும், மேலும் இந்த உலகத்தை உண்மையென்றும், சுகம் என்றும் கருதி, அதன் பின்னால் பணத்தை தேடி அலைந்துக் கொண்டுள்ளதை இன்றுவரைக் கண்கூடாகக் காண முடிகின்றது.

இவர்களுக்கு விவேகம் இல்லாமல் இல்லை, ஆனால், வைராக்கியம் வரவில்லை என்பதே உண்மை.

அதுப்போலவே, '**கற்க கசடற**' என்ற குறளின் மூலமாக அடைந்த விவேகத்தைக் கொண்டு '**நிற்க அதற்குத் தக**'. என்று எத்தனைப் பேர் கற்றதன் படி நிற்கின்றார்கள் என்றால், மிக சிலரே எனலாம்.

மற்றவர்களுக்குகற்றதினால் அடைந்த விவேகம் எங்கு போனது?

இதை அறிந்தே ஸ்ரீ சங்கரர் இந்த ஸ்லோகத்தில் முதலாவதாக வைராக்கியம் என்பதை முக்கியத்துவம் கொடுத்து முதலில் வைத்துள்ளார்.

ஆகவே, வைராக்கியம் என்பது எந்தவிதமான இன்பத்தைக் கொடுக்கின்ற விசயங்களின் மீதும் விருப்பமில்லாத தன்மை எனப்படுகின்றது.

இந்த ஸ்லோகத்தில், அதீத இன்பத்தைக் கொடுக்கின்ற பிரம்மலோகம் போன்றவற்றிலிருந்தும், நாம் பார்த்து அனுபவித்துக் கொண்டிருக்கின்ற இந்த பூஉலகத்தில் இருந்தும், இன்பத்தை கொடுக்கின்ற போகப் பொருட்கள் மீதும் வெறுப்பு நிலை வருவதே"**வைராக்கியம்**" எனப்படுகின்றது.

நித்யமாத்மஸ்வரூபம் ஹி த்ருஷ்யம் தத்விபரீதகம் |
ஏவம்யோ நிஸ்சய: ஸம்யக் விவேகோ வஸ்துந: ஸ வை || 5 ||

नित्यमात्मस्वरूपं हि दृश्यं तद्विपरीतगम् ।
एवं यो निश्चयः सम्यग्विवेको वस्तुनः स वै ॥ ५॥

5. இந்த ஸ்லோகத்தில் விவேகம் பற்றி கூறுகின்றார். விவேகம் என்றால் "**அறிவு**" என்று பொருள்.
   அறிவு என்றால், எதைப்பற்றிய அறிவு?

சாஸ்திரம் அறிவு என்று எதைக் கூறுகின்றது என்றால், எதுநிலையானது? எது நிலையற்றது? என்பதைப் பற்றிய புரிதலையே இங்கு விவேகம் அல்லது அறிவு என்கின்றது. அதாவது, "**நித்ய அநித்ய வஸ்து விவேகம்**"என்கின்றது.

எது நிலையானது, எது நிலையற்றது என்பதில் அறிவு உண்டாக வேண்டும். இதனைப் பிரித்து அறிவதே விவேகம் எனப்படும்.

அதாவது, நிலையானது என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கின்ற இந்த உலகமும், உடலும் உண்மையில் நிலையாக அப்படியே இருக்கின்றதா?

அல்லது, நாம் காண முடியாத கண்ணிற்குத் தெரியாத சேதனம் (ஆத்மா) ஒன்று இருப்பதினாலேயே இந்த உலகமும், உடலும் இருக்கின்றதா? என்பதை விசாரித்துப் பிரித்து அறிந்து, அதில் ஒரு தெளிவான முடிவை அடைந்து விடுவதையே "**விவேகம்**" என்று சாஸ்திரம் அறிவுறுத்துகின்றது.

ஆனால், நடைமுறை எப்படி இருக்கின்றது என்றால், ஒருவன் அழியக்கூடிய இந்த உடலை "**நான்**", "**நான்**" என்று சதா நம்பிக்கொண்டிருக்கின்றான். அழியாத ஆத்மாவை அறிந்துக் கொள்ளாமல் இருக்கின்றான்.

எவன் ஒருவன் இந்த உலகமும், உடலும் அழிவிற்கு உட்பட்டது என்றும், அழியாத வஸ்து ஒன்று இருக்கின்றது என்றும் உறுதியாக அறிகின்றானோ? அவனே **விவேகி** என்று ஸ்ரீ சங்கரர் கூறுகின்றார்.

இதில் அனுபவத்திற்கு உடல் கண் முன்னே பிரத்யட்சமாக இருக்கின்றது. ஆனால், கண்ணிற்குப் புலனாகாத அனுபவப்பட முடியாத ஆத்மாவை எப்படி நித்யம் என்று நம்புவது?

இந்த சந்தேகத்தை நாம் எப்படித் தீர்ப்பது.

உதாரணமாக, நாம் உணவை வாய் வழியாக உட்கொள்கின்றோம். அந்த உணவானது உடலின் உள்ளே சென்றதும், அதில் இருந்து கிடைக்க வேண்டிய சத்துக்கள் உடலில் இரத்தமாகவும், மஜ்ஜையாகவும், சதையாகவும், எலும்பாகவும் மாறி, எஞ்சிய கழிவுகள் மலமாக ஆசனவாயில் வெளித்தள்ளும் செயல்களை யார் செய்கின்றார்கள் என்று யோசித்தோமானால், உண்மை விளங்கும்.

மேலும், ஐந்து புலன்கள் இருக்கின்ற உயிரற்ற உடலினால் ஏன் கண் இருந்தும் பார்க்க முடிவதில்லை. காது

இருந்தும் கேட்க முடிவதில்லை. வாய் இருந்தும் பேசவோ, உண்ணவோ முடிவதில்லை.

இதிலிருந்து, இந்த உடலை இயக்கும் இயக்குனராக ஏதோ ஒன்று இந்த உடலில் இருக்கின்றவரை இந்த உடல் செயல்படுகின்றது. அது வெளியேறிவிட்டால், இந்த உடல் ஜடம் ஆகின்றது என்ற உண்மை புரியும்.

இதிலிருந்து, நாம் அறிய வேண்டிய அரிய உண்மை என்னவெனில், நித்யமான வஸ்து ஒன்று உள்ளது. அதுவே, அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளது என்பதாகும்.

இதையே சாஸ்திரம் ஆத்மா, உயிர், அறிவு என்று பல பெயர்களில் அழைக்கின்றது. இதுவே நான் என்று கூறத் தகுதியுடையது. இது பிரகாசிக்காத இல்லாத ஜடம் **நான்** என்று கூற முடியாது.

ஆகவே, நான் என்ற சொல்லின் உண்மையான ஸ்வரூபமாக ஆத்மாதான் உள்ளது. அதுவே, நித்யமானது, நிலையானது. அதைவிடுத்து, அநித்யமான நிலையற்ற உடலைப் பார்த்துக் கொண்டு, அதை நித்யம் என்ற தவறான புரிதலில் **"நான்"** என்று அழைத்துக் கொண்டு, மாற்றத்திற்கு உட்பட்ட இந்த உலகத்தையும் உண்மை என்று நம்பிக்

கொண்டு இருக்கின்றவரை விவேகம் உண்டாகாது. இது ஆத்மாவுக்கு எதிரானது என்று இந்த ஸ்லோகம் கூறுகின்றது.

இவ்விதமாக ஆத்மா, உலகம் ஆகிய இவ்விரண்டில் எந்தவொன்று சரியானது என்று உறுதி செய்யப்படுகின்றதோ, அதுதான் **விவேகம்** என்று அழைக்கப்படுகிறது. இந்த விவேகத்தை சாத்வீகமான மனதால் மட்டுமே அடைய முடியும் என்கின்றார்.

சாத்வீகமான மனதை எப்படி அடைவது?

இதற்கு முதலில் உணவுப் பழக்கங்கள் மாற்றப்பட வேண்டும். உணவுப்பழக்கம் என்றவுடன் சைவம், அசைவம் என்று கிடையாது.

ஏனெனில், தாவரங்களுக்கும் உயிர் இருக்கின்றது. மிருகங்களுக்கும் உயிர் இருக்கின்றது. இதில் அனைத்தும் உயிர்களே.

இதில், பழங்கள், கீரைகள், காய்கறிகள், தானியங்கள் போன்ற நிலையான தாவர உயிர்களை உணவாக உட்கொள்வதினால் மனம் அங்கும், இங்கும் ஓடாமல், நிலையாக நிற்கின்ற **"சத்துவ குணம்"** உண்டாகின்றது.

இந்த சத்துவ குணத்தை அடைந்தவனே விவேகத்தை அடைய தகுதியுடையவன் ஆகின்றான்.

அதுவே, ஆடு, மாடு, கோழி போன்ற சதா அலைந்து திரிந்துக் கொண்டுள்ள உயிர்களை உணவாக உட்கொள்ளும் போது மனம் எப்பொழுதும் அந்த ஆடு, மாடு, கோழி போன்றே ஒரு இடத்தில் நிற்காமல் எப்பொழுதும் அசைந்துக் கொண்டே இருப்பதினால், அவனை சதா எதையாவது செய்யத் தூண்டி, எப்பொழுதும் செயல் செய்துக் கொண்டு இருக்கக்கூடிய "**ரஜோ குணம்**" உண்டாகின்றது.

அடுத்து, மந்தமாக காணப்படும் மிருகங்களை உண்பவர்களுக்கும், எருமையின் பாலை விரும்பி குடிப்பவர்களுக்கும், மனம் அவைகளைப் போன்றே மந்தமாக மாறி, சோம்பேறித் தனத்துடன் எதிலும் ஆர்வம் இன்றி, எப்பொழுதும் உறங்கிக்கொண்டே இருக்கின்ற "**தமோ குணம்**" உண்டாகின்றது.

இவ்வாறு மூன்று குணபேதங்களும் உணவினாலேயே உண்டாகின்றது. ஆகவே, உணவை தேர்ந்தெடுத்து சுத்தமானதாக உண்ண வேண்டும் எனப்படுகின்றது.

ஆனால், சுத்தம் என்பதை பெரும்பாலானவர்கள் Hygienic '**ஹைஜீனிக்**' என்று நினைத்துக் கொள்கின்றார்கள்.

உண்ணும் உணவு எப்படி குணத்தை மாற்றும்?

உணவுக்கும், குணத்துக்கும் சம்மந்தம் உண்டு என்பதை மகாபாரதத்தில் ஓர் நிகழ்வு அருமையாக விளக்குகிறது.

அது என்ன? என்று காணலாம்.

பீஷ்மர் அம்புப் படுக்கையில் வீற்றிருக்கிறார். அப்போது அவரிடம் தர்மநீதியைப் பற்றிப் பற்றிச் சொல்லுங்கள் என்று எல்லோரும் கேட்கின்றனர்.

'*மனிதர்கள் நடுநிலையாக இருக்க வேண்டும். தவறை யார் செய்தாலும் நடுநிலையோடு கண்டிக்க வேண்டும்*' என்றார் பீஷ்மர்.

அப்போது திரௌபதி கேட்கிறார்.

'இந்த நியாய எண்ணம் என்னை துகில் உரித்த போது ஏன் வரவில்லை?

பீஷ்மர் பொறுமையாக பதிலுரைத்தார்.

'அப்போது நான் துரியோதனனின் சாப்பாட்டை சாப்பிட்டு வளர்ந்தேன். அதனால், நடுநிலை தவறி நடந்து கொண்டேன். அநியாயங்களுக்கு துணை நின்றேன்.

இப்போது நான் அம்புப் படுக்கையில் படுத்திருப்பதால், அவன் உணவால் உருவான இரத்தம் அனைத்தும் வெளியேறி விட்டது.

இப்போது நான் என் சுய குணத்தோடு இருக்கிறேன். அதனால், என் பேச்சில் தர்மமும், நடுநிலையும் வெளிப்படுகிறது' என்று பீஷ்மர் விளக்கம் கொடுத்தார்.

ஆகவே, மிருக உணவை உண்பதினால் மிருககுணம் வருவதைப் போன்று, குணக்கேடு உடைய மனிதர்களின் சகவாசத்தால், அவர்கள் கையால் உணவு உண்ணுகின்ற பொழுதும், அவர்களது குணமும் உண்பவருக்கும் ஒட்டும் என்பதை அறிய முடிகின்றது.

அது எப்படி அவர்கள் கையில் உண்பதால் குணம் மாறும்?

இங்கு கவனிக்கப்பட வேண்டியது எண்ணங்களின் வலிமை. அதாவது, மனதில் உருவாகும் எண்ணங்கள் கண்ணிற்குத் தெரிகின்ற ஸ்தூலமானது கிடையாது. அது கண்ணுக்கு புலப்படாத சூக்ஷுமமானது.

ஆதலால், அது அருகே இருப்பவர்களுக்கு மன மாற்றத்தை உடனடியாக உண்டாக்கும் சக்தி படைத்தது. இதை அனுபவத்தில் அறியலாம். ஒரு துக்க வீட்டிற்கு செல்லும் பொழுது அங்கு இருக்கின்ற சோகமான சூழல் காரணமாக மனதில் தோன்றும் எண்ணங்களின் மாறுதல்களையும், ஒரு திருமண வீட்டிற்கோ அல்லது கோவிலுக்கோ செல்லும் பொழுது அங்கு இருக்கின்ற மகிழ்ச்சி சூழல் காரணமாக மனதில் தோன்றும் எண்ணங்களையும் வைத்து அறிய முடியும்.

இங்கு சுற்றுப்புறச் சூழல் என்பது மற்றவர்களின் மனதைச் சார்ந்த நிலை என்பதை அறிய வேண்டும்.

ஆகவே, உண்ணும் உணவைப் பொறுத்தே ஒவ்வொருவருடைய எண்ணங்கள் உருவாகின்றன.

தமோ குணங்களைத் தூண்டும் உணவு வகைகளால் சோம்பல், கீழான சிந்தனைகள், மூர்க்கத்தன்மை, வன்முறை போன்ற விலங்கு குணங்கள் உண்டாகின்றன.

ரஜோ குணத்தை தூண்டும் உணவு வகைகளை உண்பவர்கள் எச்செயலில் ஈடுபட்டாலும் ஆதாயம், இலாப நோக்கம் கருதியே ஈடுபடுவர். எப்போதும் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற எல்லையற்ற உணர்ச்சிக் கொந்தளிப்போடு இருப்பர். எதிர்பார்ப்பு இல்லாமல் எச்செயலிலும் இவ்வகை மனிதர்கள் ஈடுபட மாட்டார்கள்.

சத்துவ உணவு வகைகளான காய்கறிகள், கீரைகள், பழங்கள், தானியங்கள் போன்றவைகளை உண்டு வந்தால் எண்ணங்கள் குறைந்து மனம் அமைதியில் சத்துவ குணத்தில் நிலைப் பெறும்.

இவர்களாலேயே ஆன்மிக எண்ணங்கள், சத்சங்கம், ஆத்ம விசாரம், அன்பு, கருணை என சாந்தமாகவும், பிரியமாகவும் இருந்துக் கொண்டே நல்ல சிந்தனா சக்தியுடனும், கிரியா சக்தியுடனும் சத்வ குணத்தில் இருக்க முடியும்.

"**குண த்ரய விபாக யோகம்**" என்றே கீதையில் ஒரு அத்தியாயம் உள்ளது. அதிலே **ஸத்வ குணம், ரஜோ குணம், தமோ குணம்** ஒவ்வொன்றின் இயல்பும் எப்படிப்பட்டது என்று கூறுகின்றார்.

இதில் சத்வ குணம் கொண்டவர்களே இந்த மூன்று குணபேதங்களைக் கடந்து "**குணாதீதன்**" என்ற உயர் நிலைக்குப் போகவும் முடியும்.

கீதையில் பகவானும் த்ரிகுணங்களைப் பற்றி விஸ்தாரமாகச் சொல்லி அர்ஜுனனிடம் "**நிஸ்த்ரைகுண்யோ பவ**" – "மூன்று குணங்களும் இல்லாதவனாக, அவற்றுக்கும் மேலே போ" என்கின்றார்.

எனவே, உணவுதானே! எதையாவது உண்ணலாம், எப்படி வேண்டுமானாலும் உண்ணலாம் என்று சாதாரணமாக எண்ணாமல், உணவில் கவனத்துடன் உண்ண வேண்டும். தவறான உணவு பழக்கங்களினால் உண்டாகும் குண பேதங்களினால் மனிதன் மகத்தானவனாக மாற முடியாமல், மிருகம் போன்ற கீழான நிலைக்கு தள்ளப்படுவதை விசாரித்து அறிவதே "**விவேகம்**" எனப்படுகின்றது.

ஸதைவ வாஸநாத்யாக: சமோSய மிதி சப்தித: |
நிக்ரஹோ பாஹ்ய வ்ருத்தீநாம் தம இத்யபி தீயதே || 6 ||

सदैव वासनात्यागः शमोऽयमिति शब्दितः ।
निग्रहो बाह्यवृत्तीनां दम इत्यभिधीयते ॥ ६॥

6. இதுவரை சாதன சதுஷ்டய சம்பத்தி என்ற நான்கு சாதனங்களில் முதலில் வைராக்கியத்தையும், இரண்டாவதாக விவேகத்தையும் கூறுவிட்டு, மூன்றாவதாக **சமாதி சட்க சம்பத்தி** என்ற ஆறு நற் பண்புகளைப் பற்றி ஸ்ரீ சங்கரர் இனி கூற இருகின்றார்.

அவைகள், **சமஹ, தமஹ, உபரதி, திதிக்ஷா, சிரத்தை, சமாதானம்,** என்கின்ற ஆறு பண்புகளும் சேர்ந்து "**சமாதி சட்க சம்பத்தி**" எனப்படும்.

இதை தமிழில் கூறுவதாக இருந்தால்,

சமஹ என்றால், மன அடக்கம்.

தமஹ என்றால், புலன் அடக்கம்.

உபரதி என்றால், விடல் அல்லது தியாகம்.

திதிக்ஷா என்றால், சகித்தல் அல்லது பொறுத்துக் கொள்ளுதல்.

சிரத்தை என்றால், நம்பிக்கை.

சமாதானம் என்றால், ஒருமுகப்படுதல்.

இந்த ஆறும் சேர்ந்து "**சமாதி சட்க சம்பத்தி**" என்று அழைக்கப்படுகின்றது.

நான்காவதாக முக்தியை விரும்பும் "**முமுக்ஷுத்துவம்**" என்ற நான்கும் "**சாதன சதுஷ்டய சம்பத்தி**" என்ற சாதனங்களாகும்.

இந்த ஸ்லோகத்தில் சமஹ மற்றும் தமஹ என்பதைப் பற்றி விளக்கமளிக்கின்றார்.

சமஹ என்பது சாஸ்திரம் விதித்த விலக்கப்பட வேண்டிய விசயங்களை மனதால் நினைக்காமல் இருத்தல் என்பதாகும்.

ஒரு செயலைச் செய்யும் முன்னரே அதன் அவசியம் கருதி அவைகளை மனதிலிருந்து நீக்கிவிடுதல் வேண்டும்.

பயனற்ற விஷயங்களை சிந்திக்காமல் இருக்க மனதைப் பழக்கப்படுத்தி வைத்திருக்க வேண்டும். எல்லா காலங்களிலும் மனதில் உதிக்கும் தேவையற்ற எண்ணப் பதிவுகளை விசாரித்துத் துறக்க வேண்டும்.

ஏற்கனவே அனுபவித்த விசயங்கள், கேட்டவைகள் நம்முடைய மனதில் எந்த முயற்சியும் இன்றி எண்ணங்களாக பதிந்திருக்கும். அத்தகைய எண்ணங்களே எந்த நேரத்திலும் மனதில் எழுந்து, ஆசையைத் தூண்டி நம்மை செயலில் ஈடுபடுத்தும்.

சமத்தை அடைய உதவும் வழிகள்:

முதலில் வைராக்கியத்தை அடைய வேண்டும்.

நற்பண்புகளை நம்மிடையே வளர்த்துக் கொள்ள வேண்டும். தினசரி மன ஒருமைப்பாட்டிற்கான தாரணா பழக வேண்டும். அதன்மூலம், தியானம் செய்துப் பழக வேண்டும். இதனால், மனம் நாம் விரும்புவதை விசாரித்து சரியானதை நினைக்கும்.

தமம் என்பது புலனடக்கம்.

சாஸ்திரம் உபதேசித்த செய்யக்கூடாதவைகளை புலன்களினால் செய்யாதிருக்க வேண்டும். அதாவது தீய, பயனற்ற விஷயங்களின் புலன்களை பயன்படுத்தக் கூடாது. வெளியேயுள்ள பத்து புலன்களை நெறிப்படுத்துதல் தமம் என்று கூறப்படுகிறது. தமத்தை அடைவதற்கு சில வழிமுறைகள் கூறப்படுகிறது.

சில சூழ்நிலைகளால் இந்திரியங்களை கட்டுப்படுத்த முடியாமல் நாம் பாதிக்கப்படுவோம், நம் இந்திரியங்கள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலைகளிலிருந்து விலகியிருக்க வேண்டும்.

புலன்கள் சக்தியை பெறவும், கட்டுப்படுத்தக்கூடிய அல்லது முறைப்படுத்தக்கூடிய சூழ்நிலைகளில் எப்பொழுதும் இருக்க வேண்டும். எந்த விஷயங்களில் பலவீனமாக இருக்கின்றோமோ அதை விட்டு விலகி இருக்க வேண்டும்.

விசயேப்ய: பராவ்ருத்தி: பரமோ பரதிர்ஹி சா |
ஸஹநம் ஸர்வது:காநாம் திதிக்ஷா ஸா சுபா மதா || 7 ||

विषयेभ्यः परावृत्तिः परमोपरतिर्हि सा ।
सहनं सर्वदुःखानां तितिक्षा सा शुभा मता ॥ ७॥

7. உபரதி என்பது கர்ம தியாகம் எனக்கூறலாம். அதாவது, என்னால் மட்டுமே அனைத்தையும் சிறப்பாகச் செய்ய முடியும், என்னைப் போன்று மற்றவர்களால் சரியாகச் செய்ய முடியாது என்ற எண்ணத்தை விட்டு, விட்டு நம்முடைய பொறுப்புக்களை மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுத்து விடுதல்.

இதனால், அதிக நேரம் நாம் தொடர்ந்து சாஸ்திர சிரவணம் செய்து, அதன் மூலமாக ஞானயோகத்திற்கு வர வேண்டும்.

அதாவது, சமஹ, தமஹ என்ற பண்புகளான மன அமைதியையும், இந்திரியக் கட்டுப்பாடு போன்றவைகளை தொடர்ந்து கடைப்பிடித்து, அவைகளையே நம் சுபாவமாக மாற்றிக் கொள்ள வேண்டும். இதுவே **"உபரதி"** எனப்படுகின்றது.

அடுத்து, திதிக்ஷா என்றால் சகிப்புத்தன்மை.

எதை சகித்துக்கொள்ள வேண்டும்?

அனைத்து வகையான துன்பத்தையும், வருகின்ற கஷ்டத்தையும் சகித்துக் கொள்ளுதல் அல்லது பொறுத்துக்

கொள்ளுதல் இதுவே நன்மையை தரக்கூடிய "**திதிக்ஷா**" என்று கூறப்படுகிறது.

இது மங்கலத்தை தரக்கூடியது. இதையே பெரியவர்கள் "**பொறுமை கடலிலும் பெரிது**" என்று கூறுவார்கள்.

அதாவது, பதட்டமின்றி, வெறுப்பின்றி, அமைதியாக இருக்கும்போதுகூட நாம் விரும்பாமல் நம்மிடம் வருகின்ற துன்பங்களை ஏற்று சகித்துக் கொள்வதையே திதிக்ஷா என்று அறிய வேண்டும்.

அதேசமயம் வருகின்ற துன்பங்களை நீக்கக்கூடிய முயற்சியையும் மேற்கொள்ள வேண்டும். அதைவிடுத்து, எனக்கு வருகின்ற துன்பத்தை சாஸ்திரம் பொறுத்துக் கொள்ளச் சொல்கின்றது. ஆதலால், நான் துன்பத்தை தாங்கிக் கொள்கின்றேன் என்று சும்மா இருப்பது விவேகம் ஆகாது.

துன்பங்களை நீக்கிக் கொள்ள மேற்கொண்ட முயற்சி வெற்றி பெற்றால், சந்தோசம் அடையலாம். அதுவே செய்த முயற்சி தோல்வி அடைந்தால், அதை சகிப்புத்தன்மையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நிகமாச்சார்ய வாக்யேஷு பக்தி: ச்ரத்தேதி விஸ்ருதா |
சித்தைகாக்ரயம் து சல்லக்ஷ்யே சமாதாநமிதி ஸ்ம்ருதம் || 8 ||

निगमाचार्यवाक्येषु भक्तिः श्रद्धेति विश्रुता ।
चित्तैकाग्र्यं तु सल्लक्ष्ये समाधानमिति स्मृतम् ॥ ८॥

8. சாஸ்திரத்தின் மீதும், அந்த சாஸ்திரத்தை உபதேசிக்கும் குருவின் மீதும் உண்டாகின்ற நம்பிக்கையை இங்கு "**சிரத்தா**" எனப்படுகின்றது. அதாவது, வேதாந்தம் உபதேசிக்கின்ற வார்த்தைகளிலும், குருவின் உபதேசத்திலும் முழுநம்பிக்கை வைத்தலே சிரத்தை என்று அழைக்கப்படுகிறது.

அதாவது, சாஸ்திர பிரமாணத்தின் மீது நம்பிக்கை வருவதை **சிரத்தா** என்று கூறப்படுகின்றது. இதில் வேதாந்த சாஸ்திரம் முமுக்ஷுக்களுக்கு பிரமாணம் என்பதினால், வேதாந்த உபதேசங்களின் மீதும், அதை உபதேசிக்கின்ற குருவின் மீதும் நம்பிக்கை வருவதையே "**சிரத்தா**" என்று அழைக்கப்படுகின்றது.

நம்பிக்கை ஏன் தேவை?

ஒருவனுக்கு தெரிந்த விசயத்தில் நம்பிக்கை அவசியம் இல்லை. காரணம், அதைப்பற்றி அவன் ஏற்கனவே அறிவான்.

அதுவே தெரியாத ஒரு விசயத்தை ஒருவர் மூலமாக கூறக் கேட்டான் என்றால், அவர் உண்மையைத்தான் கூறுவார் என்றும், அவ்வாறு அவர் கூறும் விசயத்தின் மீதும் நம்பிக்கை வர வேண்டும். அப்பொழுதுதான் அதை அவனால் ஏற்க முடியும்.

அதுப்போலவே, ஒருவன் தன்னை அல்பமாக நினைத்துக் கொண்டிருக்கையில், அவனிடம் சென்று, நீ பிரம்மாகவே இருக்கின்றாய் என்று கூறும்போது, அந்த வார்த்தை அவன் அனுபவத்திற்கு முற்றிலும் விரோதமாகக் கூறப்படுவதால், அவனுக்கு அதன் மீது நம்பிக்கை பிறக்காவிடில் பயன் இல்லை.

எனவே, அவன் விசாரணை செய்துப் பார்த்து, வேதாந்த சாஸ்திரம் உபதேசிக்கும் கருத்து, அவன் **"நான்"** என்று நினைத்துக் கொண்டிருக்கும் இந்த உடலை பிரம்மம் என்று அவர் கூறவில்லை. அவனுள்ளேயும், வெளியேயும் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற ஆகாசம் போன்ற எல்லையற்றதான தூய அறிவாகிய பரப்பிரம்மத்தை கூறுகின்றது என்று புரிந்துக் கொண்டான் என்றால், அவனுக்கு வேதாந்த சாஸ்திரத்தின் மீதும், அதை உபதேசிக்கும் ஆச்சாரியரிடத்திலும் நம்பிக்கை வந்துவிடும்.

அப்பொழுது மட்டுமே அந்த உபநிஷத வார்த்தையைக் கூறும் சாஸ்திரத்தையும், குருவையும் அவனால் நம்பிக்கையுடன் ஏற்க முடியும். இதனையே "**சிரத்தா**" என்று கூறப்படுகின்றது.

சிரத்தை என்பது புண்ணியத்தின் பலன் என்று சாஸ்திரம் கூறுகின்றது. எனவே, சிரத்தையை வளர்த்துக் கொள்ள வேண்டுமானால், சாஸ்திரம் அறிவுறுத்துகின்ற தர்மப்படி வாழ வேண்டும். அப்படி தர்மப்படி வாழும்பொழுது, அந்த தர்மத்தின் பலனாக அது நமக்கு சரியான இடத்தில் நம்பிக்கையைக் கொடுக்கும்.

அதிக பாவம் செய்தவர்கள் யார் தன்னை முழுவதுமாக ஏமாற்றுகின்றார்களோ அவர்களையே முழுமையாக நம்பி, அவர்களிடம் மோசம் போவதைக் கண்கூடாகக் காணலாம். நல்லவர்கள் அவனை நம்பாதே என்று கூறினாலும், இவனது புத்தி அதை ஏற்காது. காரணம், அவனது பாவம் அதை ஏற்க விடாது.

'**சிரத்தாவான் லபதே ஞானம்**' என்பது கீதையில் வரும் ஒரு சொற்றொடர் உள்ளது. சிரத்தை உள்ளவருக்குத் தான் ஞானம் சித்திக்கும் என்பது இதன் பொருள்.

குருவின் மீதும் சாத்திர உண்மைகளின் மீதும் நம்பிக்கை வைத்து, முழு அக்கறையும் கவனமும் கொண்டு சிரத்தை உடையவனாகித் திரும்பத் திரும்பச் சிந்திப்பதன் மூலம் தான் ஞானம் நிலைபெறும்.

இந்த சிரத்தையை வளர்த்துக் கொள்வது எவ்வாறு?

இதற்கு முதலில் சந்தேக புத்தி நீக்கப்பட வேண்டும். எதற்கெடுத்தாலும் சந்தேகம் வருவதை ஒரு நோய் என்றே கூறலாம். ஒருவரது தவறான நட்பில் கிடைத்த அனுபவத்தை வைத்து அனைவருமே அவரைப் போன்று இருப்பார் என்று சந்தேகம் வருவது விவேகம் இல்லாத காரணத்தினால் உண்டாகின்றது.

எதையும் தீர விசாரித்து அறியாமல் எடுக்கின்ற தவறான முடிவுகள் துயரமான அனுபவத்தைக் கொடுத்து விடும். எனவே, எதிர்மறை எண்ணங்களை தவிர்த்து, நேர்மறை எண்ணங்களினால் நம்மை நாம் சுய விசாரணை செய்து, தவறு எங்கே என்பதைக் கண்டு பிடித்து, நாம் ஒருவரை நம்புவது போன்று, ஒருவர் நம் மீது வைத்த நம்பிக்கையை காப்பாற்றுவதும் மிகவும் முக்கியம்.

அழியாத பரப்பிரம்மத்தை அறிதல், உணர்தல் போன்ற இந்த முயற்சியிலேயே மனதை எப்பொழுதும் ஒருமுகப்படுத்தி வைத்திருத்தலே "**சமாதானம்**" என்று அழைக்கப்படும்.

அதாவது, சமாதானம் என்றால், எடுத்துக் கொண்ட இலட்சியத்தில் மனதை ஒரு நிலைப்படுத்தி இருத்தல் என்று பொருள்.

சிரவணப் பொருளைத்தானே சித்தஞ் சிந்திக்குமாறு
சரதமா வைக்குமித்தைச் சமாதானமென்பர் மேலோர்
பரம சற்குரு நூலன்பு பற்றுதலே சிரத்தையாகும்
வரமிகு சமாதி யாறுவகையின் சொற்பொருளிதாமே.

– கைவல்ய நவநீதம்.

வேதாந்த சாஸ்திரங்களைக் கேட்டு, அதன் பொருளை உள்ளம் சிந்திக்குமாறு, அதில் கூறப்பட்ட சத்தியத்தை உணர்ந்து அதில் ஒருமுகப்பட்டு இருப்பதையே சமாதானமென்பர் மேலோர். பரம சற்குருவாகிய இறைவனின் நூல் (வேத சாஸ்திரங்கள்) மீது அன்பு வைத்தலே சிரத்தையாகும். இப்படிப்பட்ட மேன்மை மிக்க பண்புகளே சமாதி என்ற ஆறு வகையின் விளக்கங்களாகும்.

அதாவது, பரப்பிரம்மத்தை அறிகின்ற முயற்சியில் மனதை எப்பொழுதும் ஒருமுகப்படுத்தி வைத்து இருப்பதையே இந்த ஸ்லோகத்தில் இலட்சியமாகக் கூறப்படுகின்றது.

இதைத்தான் பகவத்கீதையிலும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறும்போது, '**சிரத்தாவான் லபதே ஞானம்**' என்கின்றார். இதற்கென பகவத் கீதையில் ஒரு தனி அத்தியாயம் உள்ளது. அது ***சிரத்தா த்ரய விபாக யோகம்*** என்பதாகும்.

சிரத்தை என்ற சொல் தான் இங்கு சிரத்தா என்று சொல்லப்பட்டிருக்கிறது. சிரத்தை என்றால் நம்பிக்கையும், அக்கறையும் ஆகும். த்ரயம் என்ற சொல்லுக்கு மூன்று என்று பொருள். அதாவது, நம்மிடமுள்ள மூன்று குணபேதங்களினால், உண்டாகும் மாற்றங்கள் மூலம் மனம் அடையும் பக்குவமும், அதன் மூலம் கிடைக்கின்ற அக்கறையும், நம்பிக்கையும் கொண்டவருக்குத்தான் ஞானம் ஏற்படும்.

அதாவது சாஸ்திரங்கள் சொல்கின்ற உண்மைகளின் மீதும், அவற்றை எடுத்து போதிக்கின்ற குருவின் மீதும் நம்பிக்கை கொண்டு, அவ்வாறு உபதேசிக்கின்ற உயரிய விசயங்களை நன்கு உள்வாங்கிக் கொண்டு, நம்மைத் திருத்திக் கொள்ளும் உயர்வான ஞான நல்லுரைகளை நாம்

ஏற்று, கேட்டதோடு விட்டுவிடாமல், அக்கறையுடன் அவற்றை நமதாக்கி நம் வாழ்க்கையைச் செம்மையுற வாழ வேண்டும்.

இந்த சிரத்தை என்பது தெய்வீகமானது, தெய்வீகமல்லாதது, அரக்கத்தனமானது என மூன்று வகைப்படும்.

அக்கறையுடனும், நம்பிக்கையுடனும் நாம் கற்கின்ற சாத்திர அறிவு உடல் உபாதைகளிலிருந்து, மன உணர்ச்சிகளின் பிடியிலிருந்து, புத்தியின் சிக்கல்களிலிருந்து நம்மை விடுவிக்கிறது. இது தர்மம், இது அதர்மம் என நமக்குக் கற்பிக்கப்படுகின்ற நெறிமுறைகளே சாஸ்திர தர்மம் ஆகும். இதைத்தான் நாம் நமது கலாச்சாரம் என்று போற்றிப் பாதுகாத்து வருகிறோம்.

இராமாயணம், மகா பாரதம் போன்ற இதிகாசங்களிலும், புராணங்களிலும் இந்த தர்மநெறிகள் மிக விரிவாகவும், தெளிவாகவும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால், நாமோ அந்தக் கதைகளில் வருகின்ற முரணான கருத்துக்களில் மட்டும் கவனத்தைச் செலுத்திக் கொண்டு, வீண் விவாதங்கள் புரிந்துக் கொண்டிருக்கின்றோமே தவிர, அவ்வாறு சொல்லப்பட்டுள்ள தர்மநெறிகளை மனதில் பதித்துக்கொண்டு அதன்படி நடக்க முயல்வதில்லை.

இதைத்தான், "**படிப்பது இராமாயணம் இடிப்பது பெருமாள் கோயில்**" என்ற பழமொழி சுட்டிக் காட்டுகின்றது.

ஆகவே, ஆயிரம் புத்தகங்கள் படிப்பதால் பயனில்லை. படித்ததின் பயனாக உள்ளம் பண்பட வேண்டும். பக்குவப்பட்ட மனம்தான் தெய்வீகமாக மாறும், மலரும்.

அத்தகைய பக்குவத்தை மனம் அடைய அதற்கான நான்கு சாதனைகளில் மூன்றாவது சாதனையான "**சமாதி சட்க சம்பத்தி**" என்பதில் உள்ள ஆறு பண்புகளைத்தான் இதுவரை அறிந்துக் கொண்டோம்.

இதுவரை, "**சாதன சதுஷ்டய சம்பத்தி**" என்ற நான்கு சாதனைகளில் விவேகம், வைராக்கியம், சமாதி சட்க சம்பத்தி என்ற மூன்று சாதனைகளை பார்த்து முடித்துள்ளோம்.அடுத்து நான்காவது சாதனையான "**முமுக்ஷுத்துவம்**" என்பதை இனிக் காணலாம்.

ஸம்சார பந்தநிர் முக்தி: கதம் ஸ்யாத் மே தயாநிதே |
இதியா சுத்ருடாபுத்திர் வக்தவ்யா ஸா முமுக்ஷுதா || 9 ||

संसारबन्धनिर्मुक्तिः कथं स्यान्मे दयानिधे ।
इति या सुदृढा बुद्धिर्वक्तव्या सा मुमुक्षुता ॥ ९॥

9. பந்தத்திலிருந்து விடுபட்டு, மோக்ஷத்தை அடைய வேண்டும் என்கின்ற ஆசையே **"முமுக்ஷுத்வம்"** எனப்படுகின்றது.

எந்த ஒரு ஆசை முதலிடத்தில் இருக்கின்றதோ, அதை அடைய வேண்டிய ஒரே இலட்சியத்திற்காக மற்ற அனைத்து செயல்களும் அந்த ஒரு ஆசையை மையமாக வைத்தே நடைமுறையில் இருக்கும்.

இதுப்போல, மோக்ஷத்தை மையமாக வைத்த உண்டாகின்ற ஆசையையே இங்கு முமுக்ஷுத்வம் எனப்படுகின்றது. இந்த சுலோகத்தில் ஸ்ரீ சங்கரர் ஒரு பக்தன் இறைவனிடம் பிரார்த்தனை செய்வதுப் போல அமைத்துள்ளார். அவனது ஆசையை முக்கியத்துவம் கொடுத்து வழிபடுவது போன்று அமைந்துள்ளது.

இறைவா! சம்ஸாரம் என்று அழைக்கப்படுகின்ற மனதிலுள்ள நிறைவின்மை என்ற பந்தத்திலிருந்து முழுமையாகவும், உறுதியாகவும் விடுதலைப் பெருகின்ற வழி எனக்கு எப்படி, எப்பொழுது கிடைக்கும்? என்ற தீவிரமான வேண்டுதலான இந்த ஆசையையே முமுக்ஷுத்வம் எனப்படுகின்றது.

இவ்விதம் சாதன சதுஷ்டய சம்பத்தி என்ற நான்கு தகுதிகளை அடைந்தவர்கள் அதிலேயே மன நிறைவை அடைந்து நின்று விடாமல், விசாரம் என்ற அடுத்த நிலைக்குச் செல்ல வேண்டும் என்று இனி வர இருக்கின்ற இரண்டு ஸ்லோகங்களில் ஸ்ரீ சங்கரர் கூற இருக்கின்றார்.

உக்தஸாதந யுக்த்தேந விசார: புருஷேண ஹி |
கர்த்தவ்யோ ஞானசித்யர்த்த மாத்மந: சுபமிச்சதா || 10 ||

उक्तसाधनयुक्तेन विचारः पुरुषेण हि ।
कर्तव्यो ज्ञानसिद्ध्यर्थमात्मनः शुभमिच्छता ॥ १०॥

10. மோட்சத்தை அடைவதற்காக ஆசைப்படுகின்ற முமுக்ஷுவானவன் மேற்கூறிய நான்கு சாதனங்களுடன் மட்டும் நின்று விடாமல், ஆத்ம ஞானத்தை அடைய வேண்டிய விசாரமானது செய்யப்பட வேண்டும்.

நோத் பத்யதே விநா ஞாநம் விசாரேணாந்ய ஸாதநை: |
யதா பாதார்த்த பாநம் ஹி ப்ரகா ஷேந விநாக் வசித் || 11 ||

नोत्पद्यते विना ज्ञानं विचारेणान्यसाधनैः ।
यथा पदार्थभानं हि प्रकाशेन विना क्वचित् ॥ ११॥

11. ஆத்ம ஞானம் என்ற இலட்சியத்தை அடைவதற்கு விசாரம் என்கின்ற ஒரேயொரு பாதை மட்டுமே சரியான பலனைக் கொடுக்கும்.

வேறு எந்த விதமான கர்மத்தினாலோ, யோகத்தினாலோ ஆத்மாவை அறிய முடியாது. இருளிலுள்ள ஒருப் பொருளைப் பார்ப்பதற்கு, வெளிச்சத்தை தவிர வேறு எதுவும் எவ்வாறு பயன்படாதோ? அதுப்போல, விசாரத்தைத் தவிர வேறு எந்த சாதனைகளினாலும் ஆத்ம ஞானத்தை அடைய முடியாது.

கோऽஹம் கதமிதம் ஜாதம் கோ வை கர்த்தாऽஸ்ய வித்யதே |
உபாதாநம் கிமஸ்தீஹ விசார: ஸோऽய மீத்ருஸ: || 12 ||

कोऽहं कथमिदं जातं को वै कर्ताऽस्य विद्यते ।
उपादानं किमस्तीह विचारः सोऽयमीदृशः ॥ १२॥

12. உபநிஷதங்களும், குருவும் ஆத்ம ஞானத்தை அடைய உதவுகின்ற பிரமாணங்கள் எனப்படும். ஆகவே, சாஸ்திரங்களையும், தக்க சத்குருவையும் பிடித்துக் கொண்டு நான் யார்? என்று ஜீவனை பற்றியும், நாம் பார்த்து அனுபவித்துக் கொண்டிருக்கின்ற ஜகத் என்ற இந்த உலகம் எவ்வாறு தோன்றியது? என்றும், இந்த ஜகத்திற்குக் காரணமாக இருப்பவர் யார்? என்று

ஈஸ்வரனையும் ஆராய்ந்து, முடிவில் ஜீவன், ஜகத், ஈஸ்வரன் என்ற மூன்றிற்கும் ஆதாரமாக இருப்பது எது? என்ற கேள்விகளை தனக்குத்தானே கேட்டுக்கொண்டு அதற்கான பதிலைத் தேடி விடைக் காணுவதே ஆத்ம விசாரம் செய்ய வேண்டிய வழி முறையாகும்.

நாஹம் பூத கணோ தேஹோ நாஹம் சாக்ஷகணஸ் ததா |
ஏதத் விலக்ஷண: கச்சித் விசார: ஸோய மீத்ருஸ: || 13 ||

नाहं भूतगणो देहो नाहं चाक्षगणस्तथा ।
एतद्विलक्षणः कश्चिद्विचारः सोऽयमीदृशः ॥ १३॥

13. நான் இந்த ஸ்தூல உடல் அல்ல. இந்த உடலானது பஞ்சபூதங்களினால் ஆனது. இவைகளை **"நான்"** என்று சொல்வதற்கில்லை. அதனால், அவைகளின் சேர்க்கையிலான இந்த ஸ்தூல உடலும் உண்மையில் நானல்ல. அவ்விதமே ஐம்புலன்களும் நானல்ல. அந்தக்கரணமும் நானல்ல என்று விசாரித்து இவைகளுக்கு வேறாக ஏதோவொன்று இருக்க வேண்டும், அது எது? என்று விசாரணை செய்வதேயே இதற்கான வழிமுறை எனப்படுகின்றது.

அஞ்ஞாந ப்ரபவம் ஸர்வம் ஞாநேன ப்ரவிலீயதே |
சங்கல்போ விவித: கர்த்தா விசார: ஸோய மீத்ருஸ: || 14 ||

अज्ञानप्रभवं सर्वं ज्ञानेन प्रविलीयते ।
सङ्कल्पो विविधः कर्ता विचारः सोऽयमीदृशः ॥ १४॥

14. நாம் பார்த்து அனுபவிக்கின்ற உலகமானது மாயையிலிருந்து தோன்றியுள்ளது. அதாவது அறியாமையிலிருந்து தோன்றியுள்ளது. இந்த அறியாமையை, மாயையை ஞானத்தினால் மட்டுமே நீக்க முடியும். மேற்கூறிய அறியாமை, மாயையினால் ஏற்பட்டிருப்பதால் மாயையை அறிந்து, அதனை நீக்கினால் அறியாமையும் அகன்று விடும். இந்த உலகம் இப்படி இருப்பதற்கு காரணம் நம்முடைய மனதில் எழுகின்ற பலவிதமான எண்ண ஓட்டங்கள்தான் காரணம் என்ற முறையில்விசாரம் செய்யப்பட வேண்டும்.

ஏதயோர் யஹ்டு பாதா ந மேகம் சூக்ஷ்மம் ஸதவ்யயம் |
யதைவம் ருத் கடா தீநாம் விசார: ஸோய மீத்ருஸ: || 15 ||

एतयोर्यदुपादानमेकं सूक्ष्मं सदव्ययम् ।
यथैव मृद्घटादीनां विचारः सोऽयमीदृशः ॥ १५॥

15. அறியாமைக்கும், இந்த உலகம் உண்மை போன்று தெரிவதற்கும் எது ஆதாரமாக இருக்கின்றதோ அந்த ஒன்றுதான், எப்பொழுதும் மிகவும் சூட்சுமமாக இருக்கின்றது. அது பார்க்கக்கூடிய ஸ்தூலமானதாக இல்லை. அதுவே இருத்தல் என்ற ஸ்வரூபமுடையது. மாறாமல் அப்படியே இருக்கின்றது, மாற்றமடையாமல் இருப்பது. எவ்விதம் களிமண் பானைக்கு ஆதாரமாக இருக்கின்றதோ அதுபோல அது அனைத்திற்கும் ஆதாரமாக இருக்கின்றது. இவ்விதம் விசாரம் செய்ய வேண்டும்.

அஹமேகோடபி சூக்ஷ்மஸ்ச ஞ்ஞாதா ஸாக்ஷி ஸதவ்யய: |
ததஹம் நாத்ர ஸந்தேஹோ விசார: ஸோய மீத்ருஸ: || 16 ||

अहमेकोऽपि सूक्ष्मश्च ज्ञाता साक्षी सदव्ययः ।
तदहं नात्र सन्देहो विचारः सोऽयमीदृशः ॥ १६॥

16. நான் ஒருவன்தான் அதிசூட்சுமமாகவும், அறிவு ஸ்வரூபமாகவும், அனைத்தையும் அறிபவனாகவும், அனைத்தையும் பார்த்து கொண்டிருப்பவனாகவும், சாட்சி ஸ்வரூபமாகவும் இருக்கின்றேன். ஆகவே நான் அழியாத பிரம்மனாக இருக்கிறேன். இந்த விஷயத்தில் சிறிதும் சந்தேகமேயில்லை என்ற முறையில் விசாரம் செய்யப்பட வேண்டும்.

ஆத்மா விநிஷ் கலோ ஹ்யேகோ தேஹோ பஹுபிராவ்ருத: |
தயோரைக்யம் ப்ரபஸ்யந்தி கிமஞ்ஞான மத: பரம் || 17 ||

आत्मा विनिष्कलो ह्येको देहो बहुभिरावृतः ।
तयोरैक्यं प्रपश्यन्ति किमज्ञानमतः परम् ॥ १७॥

17. ஆத்மாவானது ஒன்றாகவும், பிளவுப்படாததாகவும் இருக்கின்றது. இந்த ஸ்தூல, சூட்சுமமான உடலானது, பலவகையான அவயவங்களின் சேர்க்கையாலானது. இவ்விரண்டையும் ஒன்று சேர்த்துப் பார்க்கின்றார்கள். இதற்குமேல் வேறென்ன அறியாமை இருக்க முடியும்.

ஆத்மா நியாமகஸ்சாந்தர் தேஹோ பாஹ்யோ நியம்யக: |
தயோரைக்யம் ப்ரபஸ்யந்தி கிமஞ்ஞான மத: பரம் || 18 ||

आत्मा नियामकश्चान्तर्देहो बाह्यो नियम्यकः ।
तयोरैक्यं प्रपश्यन्ति किमज्ञानमतः परम् ॥ १८॥

18. ஆத்மா அனைத்தையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது, அனைத்து உடலுக்குள்ளேயும் கண்ணிற்குத் தெரியாத அந்தர்யாமியாக உள்ளேயிருப்பது. தேகமானது வெளியே கண்ணிற்குத் தெரிவதாக இருப்பது, நம்மால் கட்டுப்படுத்தப்படுவதாக இருப்பது. இவ்வாறு இரண்டும் வெவ்வேறு ஸ்வரூபங்களை உடையதாக இருந்தாலும்

அவைகளை ஒன்று சேர்த்துப் பார்க்கின்றார்கள். இதற்கு மேல் வேறென்ன அறியாமை இருக்கும்.

ஆத்மாவின் இருப்பினால்தான் ஸ்தூல, சூட்சும சரீரங்கள் செயல்பட்டு கொண்டு இருக்கிறது. கயிற்றின் இருப்பினால்தான் பாம்பு தெரிகிறது. பாம்பு மறைந்தாலும் கயிறு இருந்துக் கொண்டிருப்பதை போல ஸ்தூல உடல் அழிந்தாலும் ஆத்மா இருந்து கொண்டிருக்கும்.

உள்ளேயிருப்பது என்பது "**நான்**" என்கின்ற எண்ணத்தை குறிப்பது. வெளியே இருத்தல் என்பது "**இது**" என்கின்ற எண்ணத்தையும் குறிக்கிறது. நான் இதை பார்க்கிறேன் என்ற வாக்கியத்தில் "**நான்**" என்பது ஆத்மாவையும், "**இது**" என்பது வெளியே இருக்கின்ற புறப்பொருட்களைக் குறிக்கின்றதாக புரிந்துக் கொள்ள வேண்டும்.

ஆத்மா ஞாந மய: புண்யோதேஹோ மாம்ஸமயோ (அ)சுசி: |
தயோரைக்யம் ப்ரபஸ்யந்தி கிமஞ்ஞான மத: பரம் || 19 ||

आत्मा ज्ञानमयः पुण्यो देहो मांसमयोऽशुचिः ।
तयोरैक्यं प्रपश्यन्ति किमज्ञानमतः परम् ॥ १९॥

19. ஆத்மா ஞான ஸ்வரூபமானது, தூய்மையானது. தேகமானது மாமிசத்தினாலான ஜட ஸ்வரூபமானது, தூய்மையற்றது. இப்படியிருக்கும்போது இவைகள் இரண்டையும் ஒன்று சேர்த்து பார்க்கின்றார்கள். இதற்கு மேல் வேறென்ன அறியாமை இருக்கப் போகின்றது.

ஆத்மா தூய்மையாக இருக்கிறது என்று சொல்வதற்கு காரணம் அது எந்தச் செயல்களையும் செய்வதில்லை. அதனால், அது செயல்களினால் வருகின்ற பாவ–புண்ணியங்களை அடையாமல் இருப்பதினால் தூய்மையானது என்று அழைக்கப்படுகின்றது.

ஆத்மா ப்ரகாசக: ஸ்வச்ச: தேஹஸ் தாமஸ உச்யதே |
தயோரைக்யம் ப்ரபஸ்யந்தி கிமஞ்ஞான மத: பரம் || 20 ||

आत्मा प्रकाशकः स्वच्छो देहस्तामस उच्यते ।
तयोरैक्यं प्रपश्यन्ति किमज्ञानमतः परम् ॥ २०॥

20. ஆத்மாவானது அனைத்தையும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. தேகமானது தானாகப் பிரகாசிக்காது. அது ஆத்மாவினால் மட்டுமே பிரகாசப்படுத்தப்படுகின்றது. ஆத்மா தூய்மையானது.

அதாவது, சூரியன் கங்கை நதியையும் பிரகாசப்படுத்துகின்றது. அதே சமயம் சாக்கடை நீரையும் பிரகாசப்படுத்துகின்றது. ஆனால், கங்கை நீரின் புனிதத் தன்மையோ, சாக்கடை நீரின் அசுத்தத் தன்மையோ சூரியனைப் பாதிப்பது இல்லை. அதுப்போல, ஆத்மா அனைத்தையும் பிரகாசப்படுத்துகின்றது. அதேசமயம் அவைகளின் குண நலக்கேடுகளினால் ஆத்மா பாதிக்கப் படுவதில்லை.

அதனால், அனாத்மாவான உடலின் நலக்கேடுகளினால் ஆத்மா பாதிக்கப்படுவது இல்லை. இதையே இங்கே தூய்மையானது என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றது. இவ்வாறு இந்த இரண்டும் ஒன்றுக் கொன்று வெவ்வேறானதாக இருக்கின்ற பொழுது அவைகளை ஒன்றாக பார்ப்பது அறியாமையாகும்.

ஆத்மா நித்யோ ஹி ஸத்ரூபோ தேஹோ(அ)நித்யோ ஹ்யஸந்மய: |
தயோரைக்யம் ப்ரபஸ்யந்தி கிமஞ்ஞான மத: பரம் || 21 ||

आत्मा नित्यो हि सद्रूपो देहोऽनित्यो ह्यसन्मयः ।
तयोरैक्यं प्रपश्यन्ति किमज्ञानमतः परम् ॥ २१॥

21. ஆத்மா என்கின்ற **"நான்"** நிலையானது. என்றென்றும் இருந்து கொண்டிருப்பது. அதனால் அதுசத்யமாக, இருத்தல் என்கின்ற தன்மையுடன் இருக்கின்றது. ஆனால், அனாத்மா என்கின்ற **"உடல்"** நிலையற்றது, அழியக்கூடியது. அசத்யமாக, இல்லாமை தன்மையுடன் கூடியது. எனவே மித்யாவாக கருதப்படுகிறது. ஆத்மா சத்யம், உடல் மித்யா என்பதினால், ஒன்றுக்கொன்று விரோதமான இரண்டையும் ஒன்றாக பார்ப்பது அறியாமையாகும்.

ஆத்மநஸ்தத் பிரகாஸத்வம் யத்பதார்த்தாவ பாஸநம் |
நாக்யாதி தீப்திவத் தீப்தி: பவத்யாந்த்யம் யதோ நிஸி || 22 ||

आत्मनस्तत्प्रकाशत्वं यत्पदार्थावभासनम् ।
नाग्यादिदीप्तिवद्दीप्तिर्भवत्यान्ध्यं यतो निशि ॥ २२॥

22. ஆத்மா சைதன்ய சொரூபம், ஞான சொரூபம் என்பதை விளக்கம் அளிக்க பிரகாசம் என்ற வார்த்தையை உதாரணமாகப் பயன்படுத்துவது வழக்கம்.

ஆத்மாவினிடத்திலிருக் சுயமாகபிரகாசிக்கின்ற தன்மையால் மட்டுமே அனைத்து பொருட்களும் பிரகாசிக்கின்றது. அக்னி, சூரியன் போன்ற ஒளிதரும் பொருட்களில் பிரகாசிக்கும் தன்மை ஆத்மாவிலிருந்து

வேறானது. ஒளிதரும் இவைகள் இல்லாதபோது இருள் இருக்கின்றது.

1) அனாத்மாவை பிரகாசிக்கின்ற தன்மை ஆத்மாவின் ஸ்வரூபமே தவிர அதன் செயல்பாடல்ல.

2) ஒளிதரும் தத்துவங்கள் இருளும், ஒளியுமான இருமைகளுடன் கூடியது. ஆத்மாவிடம் இந்த இருமைகள் கிடையாது.

3) அக்னி, சூரியன் மற்றவைகளைப் பிரகாசித்தாலும் அவைகளை பிரகாசிக்க வேறொன்று தேவைப்படுகிறது. ஆத்மா தானே சுயமாகப் பிரகாசித்துக் கொண்டு இருப்பதால் அது பிரகாசிக்க வேறொன்று அவசியமில்லை.

தேஹோऽஹமித்யயம் மூட: ம்ருத்வா திருஷ்டத்யஹோ ஜந: |
மமாய மித்யபி ஞாத்வா கட த்ரஷ்டேவ ஸர்வதா || 23 ||

देहोऽहमित्ययं मूढो मत्वा तिष्ठत्यहो जनः ।
ममायमित्यपि ज्ञात्वा घटद्रष्टेव सर्वदा ॥ २३॥

23. அறியாமையிலிருக்கும் மனிதர்கள் நானே இந்த தேகம் என்று உறுதியாக நினைத்துக்

கொண்டிருக்கிறார்கள். இவர்களே பானையை "**நான்**" என்று கூறமாட்டார்கள். என்னுடையது என்று கூறுவார்கள். பானையையும், மற்றப் பொருட்களையும் என்னுடையது என்று கூறும் இவர்கள் தன்னுடைய தேகம் என்று வரும்போது மட்டும் "**நான் தேகமல்ல**" என்று புரிந்து கொள்ளாமல் "**நான்**", "**நான்**"என்று இந்த தேகத்தை மட்டும் அறியாமையோடு சொல்லிக் கொண்டு இருக்கின்றார்கள்.

ப்ரஹ்மைவாஹம் ஸம ஸாந்த: சச்சிதாநந்த லக்ஷண: |
நாஹம் தேஹோ ஹ்யஸ்த்ருபோ ஞாநமித்யுச்சதே புதை: || 24 ||

ब्रह्मैवाहं समः शान्तः सच्चिदानन्दलक्षणः ।
नाहं देहो ह्यसद्रूपो ज्ञानमित्युच्यते बुधैः ॥ २४॥

24. இருத்தல், அறிவு, பூரணத்துவம் என்கின்ற லட்சணங்களோடு இருக்கின்ற நானே பரப்பிரம்மம்.

1) என்னுடைய லட்சணமும், பிரம்மத்தின் லட்சணமும் ஒன்றாக இருக்கின்றன.

2) அனைத்தையும் சமமாக பாவிக்கின்றேன். எல்லாவற்றிலும் இருத்தல் என்ற தன்மையுடன் சமமாக இருக்கின்றேன்.

நான் அமைதி ஸ்வரூபமாக இருக்கிறேன். எனக்குள் எந்தவிதமான சஞ்சலங்களும் இல்லை. அழியக்கூடிய தன்மையுடைய இந்த உடல் நானல்ல. உடல் மித்யா ஸ்வரூபமாக இருக்கின்றது. ஆத்மா அழிவற்றது. இதைத்தான் ஞானிகளால் "**ஞானம்**" என்று கூறப்படுகின்றது.

நிர்விகாரோ நிராகாரோ நிரவத்யோ (அ)ஹமவ்யய: |
நாஹம் தேஹோ ஹ்யஸ்த்ருபோ ஞாநமித்யுச்சதே புதை: || 25 ||

निर्विकारो निराकारो निरवद्योऽहमव्ययः ।
नाहं देहो ह्यसद्रूपो ज्ञानमित्युच्यते बुधैः ॥ २५॥

25. நம் அனுபவத்திற்கு மாறாக யாராவது உபதேசம் கூறினால் பொதுவாக யாரும் ஏற்றுக் கொள்ளவதில்லை. ஆனால் நான் எந்தவித மாற்றமும் இல்லாதவன், உருவமற்றவன், எந்தவிதமான குற்றம், குறைகளில்லாதவன், அழியக்கூடியவன் அல்ல. ஆதலால், அநித்யமான அழியக்கூடிய மித்யாவாக இருக்கின்ற இந்த உடல் "**நான்**" அல்ல என்ற ஞானம்

ஞானிகளால் போதிக்கப்படுகின்றது. இதைத்தான் "**ஆத்ம ஞானம்**" என்று கூறப்படுகின்றது.

நிராமயோ நிராபாஸோ நிர்விகல்போsஹ மாதத: |
நாஹம் தேஹோ ஹ்யஸ்த்ருபோ ஞாநமித்யுச்சதே புதை: || 26 ||

निरामयो निराभासो निर्विकल्पोऽहमाततः ।
नाहं देहो ह्यसद्रूपो ज्ञानमित्युच्यते बुधैः ॥ २६॥

26. சுக–துக்கங்கள் வரும்போது அவைகள் எனக்கு வந்ததல்ல. இந்த தேகத்தினுடையது என்ற உணர்வு இயல்பாக வரவேண்டும். நான் யாராலும் பார்க்கப்படு பவனுமல்ல, அனுபவிக்கப்படும் விஷயங்களுமில்லை, மாற்றத்திற்கு உட்படாதவன், யாராலும் புரிந்து கொள்ள முடியாதவன், அனைத்திலும் வியாபித்து இருப்பவன். எனவே, மித்யாவான **இந்த தேகம் நானல்ல** என்று அடையும் அறிவுதான் உண்மையான அறிவு என்று ஞானிகளால் சொல்லப்படுகின்றது.

நிர்குணோநிஷ்க்ரியோ நித்யோ நித்யமுக்தோsஹமச்யுத: |
நாஹம் தேஹோ ஹ்யஸ்த்ருபோ ஞாநமித்யுச்சதே புதை: || 27 ||

निर्गुणो निष्क्रियो नित्यो नित्यमुक्तोऽहमच्युतः ।
नाहं देहो ह्यसद्रूपो ज्ञानमित्युच्यते बुधैः ॥ २७॥

27. நான் மாயையின் முக்குணங்களை கடந்தவன். தர்ம–அதர்மங்களை கடந்தவன். நல்ல–தீய குணங்களற்றவன். செயல்கள் எதுவும் செய்யாதவன், பாவ–புண்ணியங்களற்றவன். எப்பொழுதும் இருந்து கொண்டிருப்பவன், சம்சாரத்தில் இருந்து விடுதலை அடைந்திருப்பவன், முக்தியடைந்தவன், எதிலேயும் வீழ்ச்சி அடையாதவன். மேலும், நான் மித்யாவான தேகமல்ல என்ற அறிவே உண்மையான அறிவு என்று ஞானிகள் சொல்கின்றார்கள்.

நிர்மலோ நிஸ்சலோ (அ)நந்த: சுத்தோ(அ)ஹ மஜரோ(அ)மர: |
நாஹம் தேஹோ ஹ்யஸத்ரூபோ ஞானமித்யுச்சதே புதை: || 28 ||

निर्मलो निश्चलोऽनन्तः शुद्धोऽहमजरोऽमरः ।
नाहं देहो ह्यसद्रूपो ज्ञानमित्युच्यते बुधैः ॥ २८॥

28. அசுத்தமற்றவன், அக்ஞானமென்ற அழுக்கில் லாதவன், அசைவற்றவன், மனசஞ்சலங்களற்றவன், எல்லையற்றவன், தூய்மையானவன், சரீர நிமித்த துக்கங்களற்றவன், வயோதிகமில்லாதவன், மரண மற்றவன், ஸ்தூல சரீரம் அற்றவன். ஆகவே நான் அழிவற்றவன். ஸ்தூல சரீரம் மித்யாவாக இருக்கிறது, அழிவுடையது என்ற இத்தகைய அறிவே

உண்மையான அறிவென்று ஞானிகளால் கூறப்படுகின்றது.

ஸ்வதேஹம் ஸோபநம் த்யக்த்வா புருஷாக்யம் ச ஸம்மதம் |
கிம்ருக சுந்யமாத்மாநம் தேஹாதீதம் கரோஷி போ: || 29 ||

स्वदेहं शोभनं त्यक्त्वा पुरुषाख्यं च संमतम् ।
किं मूर्ख शून्यमात्मानं देहातीतं करोषि भोः ॥ २९॥

29. உன்னுடைய உடலுக்குள் ஒளிர்ந்து கொண்டிருக்கின்ற, அந்தர்யாமியாக பிரகாசிக்கின்ற, உத்தம புருஷன் என்று உபநிஷத்துக்களால் நிச்சயிக்கப்பட்டுள்ள, தேகத்தை கடந்தும் இருக்கின்ற ஆத்மாவை ஒன்றுமில்லாத சூன்யமாக மூடர்கள்தான் கருதுகி றார்கள். சூன்யம் என்பது ஒன்றுமற்றது. ஆனால், ஆத்மா அறிவு சொரூபமானது. அது சத் என்ற இருப்பு கொண்டது.

ஸ்வாத்மாநம் ஸ்ருணு மூர்கத்வம் ஸ்ருத்யா யுக்த்யா ச பூருஷம் |
தேஹாதீதம் சதாகாரம் சுது தர்ஸம் பவாத்ருஸாம் || 30 ||

स्वात्मानं शृणु मूर्ख त्वं श्रुत्या युक्त्या च पूरुषम् ।
देहातीतं सदाकारं सुदुर्दर्शं भवादृशाम् ॥ ३०॥

30. ஹே மூடனே! உன்னைப்பற்றிய உண்மையை சொல்கிறேன் கேள். சிரவணத்தை செய்ய வேண்டும். உபநிஷத் மூலமாகவும், சுய சிந்தனையின் மூலமாகவும் ஆத்மாவை பற்றி கேட்க வேண்டும். இந்த ஆத்மாவானது தேகத்தை கடந்துள்ளது. இருத்தல் ஸ்வரூபமாக இருக்கின்றது. இதை உன்னைப் போன்றவர்களால் புரிந்துக் கொள்வது மிகக்கடினம். சாஸ்திரத்திலும், அதை உபதேசிக்கும் குருவின் மீதும் சிரத்தை இல்லாதவர்களுக்கு ஆத்மாவை புரிந்து கொள்வது கடினம்.

அஹம்ஸப்தேந விக்யாத ஏக ஏவ ஸ்தித: பர: |
ஸ்தூலஸ்த்வநேகதாம் ப்ராப்த: கதம் ஸ்யாத் தேஹக: புமாந் || 31 ||

अहंशब्देन विख्यात एक एव स्थितः परः ।
स्थूलस्त्वनेकतां प्राप्तः कथं स्याद्देहकः पुमान् ॥ ३१॥

31. நான் என்ற சப்தத்தின் மூலம் தெளிவாக அறியப்பட்டு கொண்டு இருக்கின்றது. நான் ஒருவனாகத்தான் இருக்கிறேன். உடலுக்கு வேறாக இருக்கிறேன். ஸ்தூலமான இந்த உடலானது பலவற்றினுடைய சேர்க்கையால் பிரிந்து இருக்கின்றது.

எனவே அழியக்கூடிய தேகமானது எப்படி ஆத்மாவாக இருக்க முடியும்.

அஹம் த்ரஷ்ட்ருதயா ஸித்தோ தேஹோ த்ருஸ்யதயா ஸ்தித: |
மமாயமிதி நிர்தேஸாத்கதம் ஸ்யாத் தேஹக: புமாந் || 32 ||

अहं द्रष्टृतया सिद्धो देहो दृश्यतया स्थितः ।
ममायमिति निर्देशात्कथं स्याद्देहकः पुमान् ॥ ३२॥

32. நான் அறிபவனாக நிலைநாட்டப்பட்டுள்ளேன். தேகமானது அறியப்படுபவையாக இருக்கிறது. மேலும் **"இது என்னுடையது"** என்று தேகத்தை காட்டுவதால் அது நானல்ல! என்று தெளிவாகிறது. இப்படி இருக்கும்போது ஸ்தூல உடல் எப்படி ஆத்மாவாக கூறமுடியும்.

அஹம் விகாரஹீனஸ்து தேஹோ நித்யம் விகாரவாந் |
இதி ப்ரதீயதே சாக்ஷாத் கதம் ஸ்யாத் தேஹக: புமாந் || 33 ||

अहं विकारहीनस्तु देहो नित्यं विकारवान् ।
इति प्रतीयते साक्षात्कथं स्याद्देहकः पुमान् ॥ ३३॥

33. நான் விகாரமற்றவன் ஆனால் தேகமானது எப்பொழுதும் மாறிக்கொண்டிருப்பது. இதை நேரிடையாக அனுபவிக்கிறோம் என்று தெரிகின்றது.

இப்படி இருக்கும் போது ஸ்தூலமான தேகத்தை எப்படி ஆத்மாவாக கூறமுடியும்.

யஸ்மாத் பரமிதி ஸ்ருத்யா தயா புருஷலக்ஷணம் |
விநிர்ணீதம் விசுத்தேந கதம் ஸ்யாத் தேஹக: புமாந் || 34 ||

यस्मात्परमिति श्रुत्या तया पुरुषलक्षणम् ।
विनिर्णीतं विशुद्धेन कथं स्याद्देहकः पुमान् ॥ ३४॥

34. எதனால் மேலானதாக என்று தொடங்கும் வேதாந்த வாக்கியத்தில் ஆத்மாவின் ஸ்வரூபமானது குரு உபதேசத்தின் மூலமாக தெளிவாக கூறப்பட்டுள்ளது. இப்படி இருக்கும்போது தேகம் எப்படி ஆத்மாவாக இருக்க முடியும்.

ஸர்வம் புருஷ ஏவேதி ஸூக்தே புருஷஸம்ஞிதே |
அப்யுச்யதே யத: ஸ்ருத்யா கதம் ஸ்யாத்தேஹக: புமாந் || 35 ||

सर्वं पुरुष एवेति सूक्ते पुरुषसंज्ञिते ।
अप्युच्यते यतः श्रुत्या कथं स्याद्देहकः पुमान् ॥ ३५॥

35. எல்லாமே ஆத்ம ஸ்வரூபம்தான் என்று புருஷனைப் பற்றி விளக்குகின்ற ஸூக்தத்தில்

கூறப்பட்டுள்ளது. இவ்வாறு கூறப்பட்டிருக்கும்போது தேகம் எப்படி ஆத்மாவாக இருக்க முடியும்.

அஸங்க: புருஷ: ப்ரோக்தோ ப்ருஹதாரண்யகே(அ)பி ச |
அநந்தமலஸம் ஸ்ருஷ்ட: கதம் ஸ்யாத் தேஹக: புமாந் || 36 ||

असङ्गः पुरुषः प्रोक्तो बृहदारण्यकेऽपि च ।
अनन्तमलसंसृष्टः कथं स्याद्देहकः पुमान् ॥ ३६॥

36. இந்த புருஷன் எதனோடும் சம்பந்தப்படாதது என்று பிருஹதாரண்ய உபநிஷத்தில் கூறப்பட்டுள்ளது. எண்ணற்ற அசுத்தங்களுடன் கூடிய தேகமானது எப்படி ஆத்மாவாக இருக்க முடியும்.

தத்ரைவ ச ஸமாக்யாத: ஸ்வயம் ஜ்யோதிர்ஹி புருஷ: |
ஜட: பரப்ரகாஸ்யோ (அ)யம் கதம் ஸ்யாத் தேஹக: புமாந் || 37 ||

तत्रैव च समाख्यातः स्वयंज्योतिर्हि पूरुषः ।
जडः परप्रकाश्योऽयं कथं स्याद्देहकः पुमान् ॥ ३७॥

37. மேலும் இதே உபநிஷத்தில் ஆத்மாவானது தானே பிரகாசித்துக் கொண்டிருப்பது என்றும், தேகமானது

தானே பிரகாசிப்பதில்லை என்று நன்கு கூறப்பட்டு இருக்கிறது. ஏனென்றால், இந்த தேகம் ஜடமானது, இது ஆன்மாவினால் மட்டுமே பிரகாசப்படுத்தப்படுகிறது. இப்படியிருக்கும் தேகமானது எப்படி ஆத்மாவாக முடியும்.

ப்ரோக்தோ(அ)பி கர்மகாண்டேந ஹ்யாத்மா தேஹாத் விலக்ஷண: |
நித்யஸ்ச தத்பலம் புங்க்த்தே தேஹபாதா தநந்தரம் || 38 ||

प्रोक्तोऽपि कर्मकाण्डेन ह्यात्मा देहाद्विलक्षणः ।
नित्यश्च तत्फलं भुङ्क्ते देहपातादनन्तरम् ॥ ३८॥

38. கர்ம காண்டத்தின் மூலம் ஸ்தூல சரீரத்திற்கும் வேறானது என்ற கருத்து அடையப்படுகிறது. இந்த சூட்சும சரீரம் என்றும் இருக்கிறது. ஸ்தூல உடல் அழிந்தாலும் அதன் மூலம் அடைந்த பாவ–புண்ணியங்களை சூட்சும சரீரம் வேறொரு உடலைக் கொண்டு அனுபவிக்கின்றது என்ற கருத்து கர்ம காண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

லிங்கம் சாநேக ஸம்யுக்தம் சலம் த்ருஸ்யம் விகாரி ச |
அவ்யாபகமஸத் ரூபம் தத்கதம் ஸ்யாத்புமாநயம் || 39 ||

लिङ्गं चानेकसंयुक्तं चलं दृश्यं विकारि च ।
अव्यापकमसद्रूपं तत्कथं स्यात्पुमानयम् ॥ ३९॥

39. சூட்சும சரீரம் பல அவயவங்களுடன் கூடியது, பல ஸ்தூல உடல்களை எடுக்க கூடியது. சஞ்சலத்துடன் இருப்பது, மனதை பிரதானமாக கொண்டது. நம்மாலே அறியக் கூடியதாகவும். மாறிக் கொண்டேயிருக்கின்ற தன்மை உடையதாகவும், வரையறுக்கப்பட்டதாகவும் (பரிச்சின்னம்) நிலையற்றதாகவும், மித்யாவாகவும் இருக்கின்ற இந்த சூட்சும சரீரம் எப்படி ஆத்மாவாகும்.

ஏவம் தேஹத் வயாதந்ய ஆத்மா புருஷ ஈஸ்வர: |
ஸர்வாத்மா ஸர்வரூபஸ்ச ஸர்வாதீதோsஹமவ்யய: || 40 ||

एवं देहद्वयादन्य आत्मा पुरुष ईश्वरः ।
सर्वात्मा सर्वरूपश्च सर्वातीतोऽहमव्ययः ॥ ४० ॥

40. இதுவரை சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் ஆத்மாவானது இரண்டு சரீரங்களுக்கும் வேறாக உள்ளது என்று புரிந்து கொள்ளலாம். ஆத்மா பூரணமானதாக இருக்கிறது. இந்த உலகத்துக்கு தலைவனாக, ஈஸ்வரனாக இருக்கும் அனைத்து சரீரத்திற்கும், ஆத்மாவாக இருக்கிறது. அனைத்துமாக இருக்கிறது. அனைத்தையும் கடந்தும் இருக்கிறது. அகங்காரத்திற்கு சாட்சியாக இருக்கிறது.

இத்யாத்ம தேஹ பேதேந ப்ரபஞ்சஸ்யைவ ஸத்யதா |
யதோக்தா தர்க ஸாஸ்த்ரேண தத: கிம் புருஷார்த்தா || 41 ||

इत्यात्मदेहभेदेन प्रपञ्चस्यैव सत्यता ।
यथोक्ता तर्कशास्त्रेण ततः किं पुरुषार्थता ॥ ४१॥

41. ஜகத் மித்யா என்ற அறிவுதான் நம்மை சம்சாரத்திலிருந்து விடுவித்து விடும். இதுவரை ஆத்மா தேகமல்ல என்ற விசாரத்தின் மூலம், இந்த பிரபஞ்சம் சத்யம் என்பதாக தர்க்கவாதிகளால் நிலைநாட்டப் பட்டிருக்கிறதே? ஆத்மாவை தேகத்திலிருந்து பிரிக்க வேண்டும் என்று விளக்கும் போது, நீங்களும் அதையேதான் சொல்வது போல் இருக்கிறது. அதனால் எனக்கு புருஷார்த்தம் எப்படி கிடைக்கும்? இருமைகள் எனும் சம்சாரம் கிடைக்கும் போது புருஷார்த்தமான மோட்சத்தை எப்படி அடைய முடியும்.

இத்யாத்ம தேஹ பேதேந தேஹாத் மத்வம் நிவாரிதம் |
இதாநீம் தேஹ பேதஸ்ய ஹ்யஸத்வம் ஸ்ருட முச்யதே || 42 ||

इत्यात्मदेहभेदेन देहात्मत्वं निवारितम् ।
इदानीं देहभेदस्य ह्यसत्त्वं स्फुटमुच्यते ॥ ४२॥

42. இவ்விதம் ஆத்மாவுக்கும், தேகத்துக்கும் இடையே உள்ள வேற்றுமையைக் கூறி, ஆத்மாவை

தேகத்திற்கும் வேறானது என்ற அறிவைக் கொடுத்து இந்த சரீரம்தான் நான் என்ற கருத்து நீக்கப்பட்டு விட்டது. இப்போது இந்த ஆத்மாவுக்கு வேறாக உள்ள தேகத்தினுடைய பொய்யான தன்மையை தெளிவாக, விரிவாக இனிமேல் கூறப்படுகிறது.

சைதந்ய ஸ்யைக ரூபத்வாத் பேதேதோ யுக்தோ ந கர்ஹிசித் |
ஜீவத்வம் ச ம்ருஷா ஞேயம் ரஜ்ஜவாம் ஸர்பக்ரஹோ யதா || 43 ||

चैतन्यस्यैकरूपत्वाद्भेदो युक्तो न कर्हिचित् ।
जीवत्वं च मृषा ज्ञेयं रज्ज्वां सर्पग्रहो यथा ॥ ४३॥

43. இதில் ஜீவனின் மித்யாத்வம் விளக்கப்படுகிறது. சைதன்யம் ஒன்றாக இருக்கின்ற காரணத்தினால் வேற்றுமையானது எப்போதும் பொருந்தாது. ஜீவனாக இருக்கும் தன்மை பொய்யென்றும், அதை மித்யா என்றும் அறிந்துக் கொள்ள வேண்டும். எப்படி கயிறானது பாம்பாக தோன்றி கொண்டு இருக்கிறதோ? அதுப்போல இந்த கருத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

ரஜ்ஜவஞாநாத் க்ஷணேநைவ யத்வத்ர ஜ்ஜீர்ஹி ஸர்பிநீ |
பாதி தத்வச்சிதி: சாக்ஷாத் விஸ்வாகாரேந கேவலா || 44 ||

रज्ज्वज्ञानात्क्षणेनैव यद्वद्रज्जुर्हि सर्पिणी ।
भाति तद्वच्चितिः साक्षाद्विश्वाकारेण केवला ॥ ४४॥

44. இது கயிறு என்ற அறியாமையிலிருக்கும் போது, எவ்வாறு அதிலே பாம்பு தோன்றுகின்றது. அதுப்போல, நிர்குணமான சைதன்யத்தை அறியாமல் இருக்கும் போது, இந்த ஜகத் சத்யமாக காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது.

உபாதாநம் ப்ரபஞ்சஸ்ய ப்ரஹ்மநோ(அ)ந்யந்த வித்யதே |
தஸ்மாத் ஸர்வ ப்ரபஞ்சோ (அ)யம் ப்ரஹ்மைவாஸ்திஸ் ந சேதரத் || 45 ||

उपादानं प्रपञ्चस्य ब्रह्मणोऽन्यन्न विद्यते ।
तस्मात्सर्वप्रपञ्चोऽयं ब्रह्मैवास्ति न चेतरत् ॥ ४५॥

45. இந்த உலகத்திற்கு உபாதான காரணமாக இருப்பது பிரம்மன். அதற்கு வேறாக எதுவும் கிடையாது. ஆகவே, இந்த அனைத்து பிரபஞ்சமும் பிரம்மனாகவே இருக்கின்றது. அதைத் தவிர வேறெதுவும் கிடையாது.

நிமித்த காரணம், உபாதான காரணம் என்று இரண்டு உண்டு. ஒரு பானை இருந்தால் அது உண்டாவதற்கு மண் என்று ஒரு வஸ்து இருக்க வேண்டும். மண்தான் பானைக்கு உபாதான காரணம். ஆனால், மண் எப்படிப் பானையாக ஆகும்? தானே அது ஒன்று சேர்ந்து பானையாகுமா? அது முடியாது. ஆகவே, குயவன்தான் மண்ணைப் பானையாகச் செய்ய வேண்டியிருக்கிறது. மண்ணினால் ஒரு பானை உண்டாக வேண்டுமானால், அதற்குக் குயவன் என்ற காரணமும் வேண்டியிருக்கிறது. குயவன்தான் நிமித்த காரணம்.

அணுக்களை உபாதான காரணமாகக் கொண்டு ஈச்வரன் என்கிற நிமித்த காரணம் ஜகத்தைப் பண்ணியிருக்கிறது என்பது நியாய – வைசேஷிகக் கொள்கை.

மண்ணைப் பானையாக்குவதற்குக் குயவன் அவசியம் வேண்டும். அவன் இல்லாவிட்டால் மண்ணிலே பானை இல்லை. இல்லாத பானை என்ற விளைவை மண்ணிலிருந்து குயவன் உண்டாக்குகிறான் என்று சொல்வார்கள். இதற்கு ஆரம்பவாதம் என்றும், **அஸத்–கார்ய–வாதம்** என்றும் பெயர்.

'**ஸத்**' என்றால் இருப்பது. '**அஸத்**' இல்லாதது. வெறும் மண்ணிலே பானை இல்லை. இல்லாத பானை அதிலிருந்து விளைந்தது. இப்படித்தான் ஈச்வரன் அணுக்களைக் கொண்டே அணுக்களில் இல்லாத சிருஷ்டியைப் பண்ணியிருக்கிறான் என்கிறார்கள். இது நியாயம் என்பவர்களின் கொள்கை.

ஸாங்கியர்களுக்குக் கடவுளே கிடையாது. காரணம் அவர்கள் பிரகிருதி என்ற இயற்கையே ஜகத்தாகப் பரிணமித்தது என்பார்கள். இது இந்தக் காலத்து நாஸ்திகர்கள் சொல்வது போன்று நினைத்துக் கொள்ளக் கூடாது.

ஏன் என்றால், (நிர்குண பிரம்மத்தின் ஸ்தானத்தில் இருக்கப்பட்ட) சுத்த ஞான ஸ்வரூபமான '**புருஷன்**' என்பவனையும் ஸாங்கியர்கள் கூறுவதால், ஜடமான இந்த ப்ரகிருதி இத்தனை ஒழுங்காக இயங்குவதற்கு புருஷனின் ஸாந்நித்தியமே காரணம் என்பார்கள்.

ஸாந்நித்தியம்தான் காரணம், புருஷனே நேராக ஈடுபட்டு ஸ்ருஷ்டியைச் செய்யவில்லை என்கிறார்கள்.

ஸூரிய வெளிச்சத்தில் தானாக பயிர் முளைக்கிறது, நீர் வற்றுகிறது, துணி காய்கிறது, இவைகள் அனைத்தும் அந்த சூரியனின் விசேஷத்தாலேயே நடக்கின்றன.

சூரியன் இங்கே உள்ள இன்ன பயிரை முளைக்க பண்ண வேண்டும், குட்டையிலுள்ள நீரை வற்றச் செய்ய வேண்டும் என்று நினைத்தா இவைகள் நடக்கின்றன?

ஆக, இவ்வாறுதான் புருஷன் இந்த ப்ரக்ருதிக்கு சம்பந்தம் இல்லாமல் இருக்கின்றான். இருப்பினும், புருஷனிடமிருந்து பெற்ற சக்தியாலேயே பிரகிருதி இத்தனையையும் **தன்னிலிருந்து தானே உண்டாக்கிக் கொள்கிறது.**

நிமித்த காரணம் என்பதாக ஈச்வரன் என்ற ஒருவன் இந்த உலகத்தை உண்டு பண்ணவில்லை. பிரகிருதியே இப்படி ஸ்ருஷ்டியாகப் பரிணமித்திருக்கிறது என்பது ஸாங்கியர் கொள்கை.

இதற்குப் **பரிணாமவாதம்** என்று பேர்.

நியாயவாதிகளின் அஸத்–கார்ய–வாதத்திற்கு மாறாக ஸாங்கியர்கள் ஸத்–கார்ய–வாதத்தைச் சொல்கிறார்கள்.

உபாதான காரணமான மண்ணிலே இல்லாத பானையை நிமித்த காரணமான குயவன் பண்ணினான் என்று அஸத்–கார்ய–வாதிகள் சொல்கிறார்களல்லவா?

அதாவது, ஸத் கார்யவாதிகளான ஸாங்கியர்கள் "மண்ணுக்குள்ளே பானை முதலிலேயே இருக்கத்தான் செய்தது. எள்ளுக்குள்ளேயே இருக்கிற எண்ணெயைத்தானே செக்கிலே ஆட்டி வெளிக்கொண்டு வர முடியும்? அதுப்போல மண்ணில் மறைமுகமாக இருக்கிற பானைதான் பிறகு காரியத்தால் வெளியிலேயும் பானையாக வருகிறது.

மண்ணை உபயோகித்தால்தானே பானை வருகிறது?

எள்ளை வைத்துப் பானை பண்ணை பண்ண முடியுமா? அல்லது மண்ணைப் பிழிந்து எண்ணெய் எடுக்க முடியுமா? பானையிலே இருப்பதனைத்தும் மண்ணின் அணுக்கள்தான். அந்த அணுக்களின் ரூபத்தை இப்படி ஒழுங்கு செய்ததால் பானை என்ற ஒன்று உண்டாயிருக்கிறது" என்பார்கள்.

ஆனால், பகவான் ஸ்ரீ சங்கரர் அவர்கள் கூறும்போது, "ஆரம்ப வாதமுமில்லை. பரிணாம வாதமும் இல்லை. பிரம்மம்தான் மாயா சக்தியால் இத்தனை ஸ்ருஷ்டி மாதிரி வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறது. பரமாத்மக் குயவனுக்கு வேறாக ஒரு மண்ணே இல்லை. அதனால் ஆரம்பவாதம் சரியல்ல.

அதாவது, பரமாத்மா ஜகத்தாகப் பரிணமித்தது – பால் தயிராகப் பரிணமித்த மாதிரி என்றாலும் தவறுதான். அப்படிச் சொன்னால் பால் தயிரானபின் தயிர் தான் இருக்குமே தவிர பால் இருக்காது.

இதுப்போன்று பரமாத்மா ஜகத்து பரிணமித்தபின் இல்லாமல் போய் விட்டார் என்றால், அது மிகப்பெரிய தவறாகப் போய்விடும். அதனால் பரிணாமமும் இல்லை.

அந்த பரமாத்மா தான் தானாக சுத்த ஞான ஸ்வரூபமாக ஒரு பக்கம் இருந்துகொண்டே இன்னொரு பக்கம் தன்னுடைய மாயா சக்தியால் இந்த ஜீவ–ஜகத்துக்களாகத் தோன்றுகிறார்.

எனவே, இதெல்லாம் ஒரே ஸத்வஸ்துவின் தோற்றம்தான், வேஷம்தான்!

அதாவது, ஒருத்தன் ஒரு வேஷம் போட்டுக் கொள்கிறான் என்றால், அப்பொழுது அவன் அவனாக இல்லாமல் போய் விடுகிறானா என்ன?

அப்படித்தான் இத்தனையும் வேஷம், கண்கட்டு வித்தை!

இத்தனையாலும் பாதிக்கப்படாமல் ஸத்வஸ்து ஏகமாக அப்படியே இருந்துகொண்டேயிருக்கிறது" என்று ஒரே அடியாக அடித்துவிட்டார். இதற்கு "**விவர்த்த வாதம்**" என்று பெயர்.

ஒரு கயிறானது பாம்பு மாதிரித் தோன்றுவது விவர்த்தம். கயிறு என்ற உபாதான காரணத்தை வேறு ஒரு நிமித்த காரணம் பாம்பாக மாற்றவில்லை. எனவே, இது ஆரம்ப வாதம் இல்லை. கயிறு பாம்பாகப் பரிணமிக்கவுமில்லை.

அதாவது, கயிறு பாம்பாக மாறிவிடவில்லை. கயிறு கயிறாகவே தான் இருக்கிறது. ஆனால் நம்முடைய அறியாமையினால், அது பாம்பு மாதிரித் தோன்றுகிறது.

ஆகவே, பகவான் ஸ்ரீ சங்கரர் கூறுவதுபோன்று, இந்த உண்மையை உணர்வதற்கு மனதிற்கு யுக்தி பூர்வமான விசாரணை தேவைப்படுகின்றது.

யுத்தியால் படைக்கப்பட்ட பதார்த்தங்களைத் தெரிந்துக் கொண்டு, அதிலிருந்து வைராக்யம் பெற்று, சுகதுக்கங்கள் இல்லாத வெறுமையான துக்கம் என்பதே இல்லாத **அபவர்க்கம்** என்ற ஸ்தானத்துக்குப் போவதோடு நியாயம் – வைசேஷிகம் நிறுத்தி கொள்கின்றது. காரணம், த்வைதத்தில் இதற்குமேல் போக முடியாது.

மனமானது நினைப்பு என்ற வேலையில்லாமலும், சரீரம் ஓடியாடிச் செய்யும் வேலையில்லாமலும் தூங்குகிறபோது அல்லது ஸமாதி நிலையிலிருக்கும்போது ஜீவன் அந்த ஆத்மாவாகவே இருக்கிறான் என்பதினால், அது இருக்கிற நிலையைத்தான் அபவர்க்கம் என்கின்றோம்.

எப்போது, மனஸும் உடம்பும் வந்தவிட்டதோ, உடனே அந்த '**இருக்கிற**' நிலை போய், '**செய்கிற**' நிலை வந்து விடுகிறது.

இவை இல்லாதபோது ஆத்மா ஏதாவது செய்ததா? இல்லை. எதுவுமே செய்யவில்லை. வெறுமனே இருந்து கொண்டு மட்டும் இருக்கிறது.

இதைத்தான் 'கேவல ஸ்திதி' என்பது. "கேவலம்" என்றால் மட்டமானது என்று அர்த்தமில்லை. ஒன்று என்ற அர்த்தம். அதாவது, இன்னொன்றின் கலப்பில்லாமல், தன்னந்தனியாக தூய்மையாக இருப்பது என்பதே.

இப்படி "கேவல"மாக ஆத்மாவைப் பிரித்து, அதிலேயே நிலைத்திருக்கும் அநுபவம்தான் "கைவல்யம்."

கைவல்ய பதவி, கைவல்ய மோக்ஷம் என்று கேள்விப்படிட்டிருப்பீர்கள். அப்படியென்றால், மனதின் பந்தமும் அதனால் ஏற்படும் ஸம்ஸார பந்தமும் இல்லாமல் விடுபட்டுத் "**தான்**" மட்டும் கலப்பற்று நிற்கிற சாஸ்வதாநுபவம் என்று அர்த்தம்.

மோக்ஷம் என்பதை ஒவ்வொரு ஸித்தாந்தம் ஒவ்வொரு பெயரில் சொல்லியிருக்கும்.

அத்வைதிகள் அதை ஆத்ம ஸாக்ஷாத்காரம் அல்லது ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் என்கிறோம்.

சைவர்களும், வைஷ்ணவர்களும் சிவ ஸாயுஜ்யம், விஷ்ணு ஸாயுஜ்யம் என்பார்கள்.

புத்தர் ஒரு தீபம் அணைந்து போய்விட்டாற்போல ஸகலமும் அழிந்து போய்விட்ட "நிர்வாணம்" என்கிறார்.

ந்யாய – வைசேஷிக ஸித்தாந்திகள் துக்கம் என்பதே இல்லாததான "**அபவர்க்கம்**" என்பார்கள்.

ஜைன மதத்திலும், யோக சாஸ்த்ரத்திலும் "கேவல ஸ்திதி", கைவல்யம்" என்றே மோக்ஷத்தைச் சொல்லியிருக்கிறது.

ஆக, ஆத்மாவாக இப்படி சும்மா "இருந்துக் கொண்டு மட்டும் இருக்கிற நிலை" போய், மனது முளைத்து, செயல்கள் "செய்கிற நிலை" ஏற்பட்டு விட்டால், உடனே மனம் புற விசய, புற்றீசல் போலப் புறப்பட்டு விடுகின்றன.

ஆகவே, அத்வைதமாக ஒரே ஸத்தைப் பிடித்து அதுவே நாம் என்கிற போதுதான் நிறைந்த நிறைவான மோக்ஷம் கிடைக்கிறது. ஆனாலும் இப்போதிருக்கிற உலக வாழ்வோடு திருப்திப்படாமல் இதற்கு மேலே ஒரு அபவர்க்கத்துக்குப் போக நியாயம் தூண்டி விடுகிறது என்பதே விசேஷந்தான்.

இந்த சாஸ்திரத்தின் இன்னொரு பெருமை, அது எத்தனை தினுசான யுக்தி உண்டோ அத்தனையையும் கொண்டு வாதம் பண்ணி, பௌத்தர்கள், ஸாங்கியர்கள், சார்வாகர்கள் (எனப்படும் லோகாயதர்கள்) ஆகியோருடைய கொள்கைகளை ஆக்ஷேபித்து ஈச்வரன் என்ற கர்த்தா உண்டு என்று நிலை நாட்டியிருப்பதாகும்.

வ்யாப்யவ்யா பகதா மித்யா ஸர்வமாத்மேதி ஸாஸநாத் |
இதி ஞாதே பரே தத்வே பேதஸ்யாவ ஸர: குத: || 46 ||

व्याप्यव्यापकता मिथ्या सर्वमात्मेति शासनात् ।
इति ज्ञाते परे तत्त्वे भेदस्यावसरः कुतः ॥ ४६॥

46. வியாபிப்பது, வியாபிக்கப்படுவது என்ற நியாயப்படி இந்த ஜகத் மித்யா என்று புரிந்துக் கொள்ள வேண்டும். அனைத்துமே ஆத்மாதான் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இதுவே, இறுதியாக அடைய வேண்டிய உயர்ந்த அறிவாகும். இந்த அறிவை அடைந்த பிறகு, அங்கு இருமைக்கு இடமேயில்லை.

ஸ்ருத்யா நிவாரிதம் நூநம் நாநாத்வம் ஸ்வமுகேந ஹி |
கதம் பாஸோ பவேதந்ய: ஸ்திதே சாத்வய காரணே || 47 ||

श्रुत्या निवारितं नूनं नानात्वं स्वमुखेन हि ।
कथं भासो भवेदन्यः स्थिते चाद्वयकारणे ॥ ४७॥

47. உபநிஷத் உபதேசத்தினால் நேரிடையாக இருமைகளானது, சந்தேகமில்லாமல் உறுதியாக நீக்கப்பட்டுள்ளது. எப்படி வேறொன்று (ஆத்மாவைத்தவிர) விளங்கிக் கொண்டிருக்கும், தன்னுடைய உபதேசமாக அத்வைதமே இருக்கும் போது எப்படி வேறொன்று விளங்கிக் கொண்டிருக்கும்.

தோஷோ(அ)பி விஹித: ஸ்ருத்யா மருத்யோர் ம்ருத்யும் ச கச்சதி |
இஹ பஸ்யதி நாநாத்வம் மாயயா வஞ்சிதோ நர: || 48 ||

दोषोऽपि विहितः श्रुत्या मृत्योर्मृत्युं स गच्छति ।
इह पश्यति नानात्वं मायया वञ्चितो नरः ॥ ४८॥

48. இந்த உலகத்தை சத்யம் என்ற நினைப்பதில் குறையிருக்கின்றது என்று உபநிஷத் கூறுகின்றது. இப்படி நினைப்பவன் மரணத்திலிருந்து மரணத்திற்கு செல்கின்ற சம்சாரம் என்கின்ற துயரத்தை குற்றமாக சொல்லியிருக்கிறது. யார் இங்கு இருமைகளை பார்க்கின்றார்களோ அவர்கள் இந்த சம்சாரத்திலே இருந்து கொண்டிருப்பார்கள். மாயையினால் ஏமாற்றப்பட்டு கொண்டு இருக்கின்ற மனிதர்கள் ஜகத்தை சத்யமாக நினைக்கிறார்கள்.

ப்ரஹ்மண: ஸர்வபூதாநி ஜாயந்தே பரமாத்மந: |
தஸ்மாதேதாநி ப்ரஹ்மைவ பவந்தீத்யவ தாரயேத் || 49 ||

ब्रह्मणः सर्वभूतानि जायन्ते परमात्मनः ।
तस्मादेतानि ब्रह्मैव भवन्तीत्यवधारयेत् ॥ ४९॥

49. பரமாத்மாவான பிரம்மத்திடமிருந்துதான் எல்லா ஜீவராசிகளும் தோன்றி இருக்கிறது. இந்த அனைத்து உலகத்திற்கும் பிரம்மனே உபாதான காரணமாக இருப்பதால் அவைகள் அனைத்தும் பிரம்மனாக இருக்கிறது என்று மனதில் உறுதியாக நினைக்க வேண்டும்.

ப்ரஹ்மைவ ஸர்வநாமநி ரூபாணி விவிதாநி ச |
கர்மாண்யபி ஸமக்ராணி விபர்தீதி ஸ்ருதிர்ஜகௌ || 50 ||

ब्रह्मैव सर्वनामानि रूपाणि विविधानि च ।
कर्माण्यपि समग्राणि बिभर्तीति श्रुतिर्जगौ ॥ ५०॥

50. இந்த ஜகத்தானது நாம, ரூபம், செயல்பாடுகள் இவை மூன்றும் சேர்ந்ததுதான். எல்லா விதவிதமான நாம–ரூபங்களும் பிரம்மத்தையே குறிக்கின்றது. மேலும் எல்லா பயன்பாடுகளும், செயல்களும் பிரம்மனையே சார்ந்து இருக்கின்றது என்று உபநிஷத் கூறியுள்ளது.

ஸுவர்ணாஜ் ஜாயமாநஸ்ய ஸ்வர்ணத்வம் ச ஸாஸ்வதம் |
ப்ரஹ் மணோ ஜாயமாநஸ்ய ப்ரஹ்மத்வம் ச ததா பவேத் || 51 ||

सुवर्णाज्जायमानस्य सुवर्णत्वं च शाश्वतम् ।
ब्रह्मणो जायमानस्य ब्रह्मत्वं च तथा भवेत् ॥ ५१॥

51. தங்கத்திலிருந்து செய்யப்பட்ட விதவிதமான ஆபரணங்களிடத்தில் தங்கம்தான் உண்மையாக இருக்கிறது. அதேபோல பிரம்மத்தில் இருந்து தோன்றும் நாம ரூபங்கள், பயன்பாடுகள் அனைத்திலும் பிரம்மன்தான் நிலையாக, உண்மையாக இருக்கிறது.

ஸ்வல்ப மப்யந்தரம் க்ருத்வா ஜீவாத்ம பரமாத்மநோ: |
யோ (அ)வதிஸ்டதி மூடாத்மா பயம் தஸ்யாபி பாஷிதம் || 52 ||

स्वल्पमप्यन्तरं कृत्वा जीवात्मपरमात्मनोः ।
योऽवतिष्ठति मूढात्मा भयं तस्याभिभाषितम् ॥ ५२॥

52. ஜீவாத்மா, பரமாத்மா இவர்களுக்குமிடையே சிறிதளவு வேற்றுமைகளை பார்க்கின்ற அக்ஞானத்துடன் கூடிய மனிதனுக்கு பயம் இருப்பதாக உபநிஷத் கூறுகின்றது. எல்லா பயமும் பொய்யிலிருந்துதான் வருகின்றது.

யத்ரா ஞாநாத் பவேத் த்வைத மிதர ஸ்தத்ர பஸ்யதி |
ஆத்மத்வேந யதா ஸர்வம் நேதரஸ் தத்ர சாண்வபி || 53 ||

यत्राज्ञानाद्भवेद्द्वैतमितरस्तत्र पश्यति ।
आत्मत्वेन यदा सर्वं नेतरस्तत्र चाण्वपि ॥ ५३॥

53. பிரம்ம ஸ்வரூபத்திற்கு நேர்மாறானதாக உள்ள ஜகத்தை எப்படி சத்யமாக பார்க்க முடிகின்றது. ஜீவனுக்கு ஞான அவஸ்தை அக்ஞான அவஸ்தை என்ற இரண்டு நிலைகள் உள்ளது. இந்த அக்ஞான அவஸ்தையில் இருக்கும்போதுதான் இருமைகளை பார்த்துக் கொண்டிருக்கிறான். எப்பொழுது அக்ஞானம் நீங்கிய நிலையில் இருமைகளைக் கடந்து,

அனைத்திலும் தன்னையே பார்க்கிறான்னோ? அப்போதே அனைத்தும் ஆத்மாவாக மாறி விடுகின்றது. அப்படி அனைத்திலும் தன்னை பார்க்கின்றவன் அவைகளுக்கு வேறாக தன்னை சிறிதளவுக்கூட பார்ப்பதில்லை.

யஸ்மிந் ஸர்வாணி பூதாநி ஹியாத் மத்வேந விஜாநத: |
ந வை தஸ்ய பவேந்மோஹோ ந ச ஸோகோ(அ)த்விதீயத: || 54 ||

यस्मिन्सर्वाणि भूतानि ह्यात्मत्वेन विजानतः ।
न वै तस्य भवेन्मोहो न च शोकोऽद्वितीयतः ॥ ५४॥

54. எப்பொழுது (ஞான நிலையில்) அனைத்து ஜீவராசிகளையும் தானாகவே இருப்பதாக பார்க்கின்றானோ, தானேயென்று அறிகின்றானோ அப்பொழுது கண்டிப்பாக அவனிடத்தில் மோகமும், சோகமும் இருப்பதில்லை. நான் இரண்டற்றவன் என்கின்ற ஞானத்தினால் இந்த நிலையை அடைந்திருக்கின்றான்.

அயமாத்மா ஹி ப்ரஹ்மைவ ஸர்வாத் மகதயா ஸ்தித: |
இதி நிர்த்தாரிதம் ஸ்ருத்யா ப்ருஹதாரண்ய ஸம்ஸ்தயா || 55 ||

अयमात्मा हि ब्रह्मैव सर्वात्मकतया स्थितः ।
इति निर्धारितं श्रुत्या बृहदारण्यसंस्थया ॥ ५५॥

55. எல்லாமுமாக இருக்கின்ற ஆத்மாவே பிரம்ம னாகவே இருக்கிறது. இது ப்ருஹதாரண்யகம் என்ற உபநிஷத்தில் நிலை நாட்டப்பட்டுள்ளது.

அநுபூதோ(அ)ப்யயம் லோகோ வ்யவஹார க்ஷமோ(அ)பி ஸந் |
அஸத்ரூபோ யதா ஸ்வப்ந உத்தர க்ஷணபாதத: || 56 ||

अनुभूतोऽप्ययं लोको व्यवहारक्षमोऽपि सन् ।
असद्रूपो यथा स्वप्न उत्तरक्षणबाधतः ॥ ५६॥

56. ஒரு பொருளின் இருத்தலை இரண்டு முறையில் நிரூபிக்கலாம். அனுபவிக்கும் விஷயம் இருத்தலை உறுதி செய்கிறது. எது நமக்கு பயனுள்ளதாக இருக்கிறதோ? அதற்கும் இருத்தலை கொடுத்து விடுகிறோம். பயனற்ற பொருட்களுக்கு இருத்தலை நாம் கொடுப்பதில்லை. இல்லாமைக்கு சமமாக பாவிக்கப்படுகிறது.

அன்யதா ஸித்தஹ – எதனால் அது இருந்தாலும், இல்லையென்றாலும் ஒரு பயனும் இல்லாததாக இருக்கிறதோ அதை இவ்வாறு கூறப்படுகிறது. இந்த உலகம் அன்யத ஸித்தவாக மாறும்போது நாம் முக்தனாக இருக்கிறோம் என்பதை உறுதிபடுக்கிக் கொள்ளலாம்.

வ்யவஹார க்ஷமஹ பயன்தரும் பொருட்கள் இவ்வாறு அழைக்கப்படுகிறது. ஜாக்ரத் பிரபஞ்சம் அனுபவத்திற்கும் இருக்கிறது. பயனுள்ளதாகவும் இருப்பதால் அது சத்யமாக தோன்றிக் கொண்டிருக்கிறது.

அனுபவித்துக் கொண்டு இருக்கின்ற உலகமானது அனுபவிக்கப்பட்டுக் கொண்டிருந்தாலும், பயனை அளிக்கக் கூடியதாக இருந்தாலும் எவ்வாறு கனவில் காண்கின்ற பொருட்களைப் போல் மித்யாவாக இருக்கின்றதோ? அதுப்போல அது மித்யா ஸ்வரூபமாகத்தான் இருக்கிறது.

கனவில் காணப்படும் பொருட்கள் அனுபவிக்கப் படுவதாக இருக்கும். பயனைக் கொடுப்பதாகவும் இருந்தாலும் அவைகள் பொய்யென்று புரிந்துக் கொண்டிருக்கின்றோம். கனவில் காண்பவைகள் விழித்ததும் பொய்யென்று நீக்கி விடுகின்றோம்.

ஸ்வப்நோ ஜாகரணே஽லீக: ஸ்வப்நே஽பி ஜாகரோ ந ஹி |
த்வயமேவ லயே நாஸ்தி லயோ஽பி ஹ்யுபயோர்ந ச || 57 ||

स्वप्नो जागरणेऽलीकः स्वप्नेऽपि जागरो न हि ।
द्वयमेव लये नास्ति लयोऽपि ह्युभयोर्न च ॥ ५७॥

57. கனவில் காண்கின்ற அனைத்தும் விழிப்பு நிலையில் இல்லை. அதேப்போல விழிப்பு நிலையில் பார்க்கின்றவைகள் கனவு நிலையில் இருப்பதில்லை. ஆழ்ந்த உறக்கத்தில் இந்த இரண்டு நிலைகளும் கிடையாது.

த்ரயமேவம் பவேந்மித்யா குணத்ரய விநிர்மிதம் |
அஸ்ய த்ரஷ்டா குணாதீதோ நித்யோ ஹ்யேகஸ்சி தாத்மக: || 58 ||

त्रयमेवं भवेन्मिथ्या गुणत्रयविनिर्मितम् ।
अस्य द्रष्टा गुणातीतो नित्यो ह्येकश्चिदात्मकः ॥ ५८॥

58. இவ்விதம் யுக்தியை பயன்படுத்தி விசாரம் செய்யும்போது மூன்று நிலைகளிலும் இருக்கின்ற அனைத்தும் மித்யாவாகின்றது. இந்த உலகமானது மூன்று குணங்களினால் மாயையினால் நன்கு தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, இது மித்யாவாகின்றது.

இதை மித்யாவாக பார்ப்பவன் குணங்களை கடந்தவன், என்றும் இருப்பவன், ஒன்றாகவே இருப்பவன், அனைத்து உடல்களுக்கும் அறிவு ஸ்வரூபமாக இருப்பவன். மூன்று அவஸ்தைகளிலும் தொடர்ந்து இருப்பவன் என்றும் கூறப்படுகிறது.

யத்வந்ம்ருதி கடப்ராந்திம் சுக்தௌ வா ரஜதஸ்திதிம் |
தத்வத் ப்ரஹ்மணி ஜீவத்வம் ப்ராந்த்யா பஸ்யதி ந ஸ்வத:

यद्वन्मृदि घटभ्रान्तिं शुक्तौ वा रजतस्थितिम् ।
तद्वद्ब्रह्मणि जीवत्वं भ्रान्त्या पश्यति न स्वतः ॥ ५९॥

59. எவ்விதம் களிமண்ணால் உருவாக்கப்பட்ட பொய்யான பானை என்கின்ற உருவத்தையும் கிளிஞ்சலில் தோன்றுகின்ற வெள்ளி என்கின்ற பொய்யான தோற்றத்தையும் பார்க்கின்றோமோ? அதுப்போல பிரம்மனிடத்தில் ஜீவனைப் பார்க்கின்றோம். அதிஷ்டானத்தை தெளிவாகப் பார்க்கு போது, அதில் ஏற்றி வைத்திருக்கும் ஜீவனைப் பார்ப்பதில்லை.

யதா ம்ருதி கடோ நாம கநகே குண்டலாபிதா |
சுக்தௌ ஹி ரஜ தக்யாதிர் ஜீவ ஸப்தஸ்ததா பரே || 60 ||

यथा मृदि घटो नाम कनके कुण्डलाभिधा ।
शुक्तौ हि रजतख्यातिर्जीवशब्दस्तथा परे ॥ ६०॥

60. எவ்விதம் களிமண்ணுக்கு பானை என்ற பெயரும், தங்கத்திற்கு மோதிரம் என்ற பெயரும், கிளிஞ்சலுக்கு வெள்ளி என்ற பெயரும் வந்ததோ அதுப்போல

பிரம்மத்திற்கு ஜீவன் என்ற சப்தம் ஏற்றி வைக்கப் பட்டிருக்கிறது.

யதைவ வ்யோம்நி நீலத்வம் யதா நீரம் மருஸ்தலே |
புருஷத்வம் யதா ஸ்தாணௌ தத்வத் விஸ்வம் சிதாத்மநி || 61 ||

यथैव व्योम्नि नीलत्वं यथा नीरं मरुस्थले ।
पुरुषत्वं यथा स्थाणौ तद्वद्विश्वं चिदात्मनि ॥ ६१॥

61. எவ்வாறு ஆகாசத்தில் நீல நிற வர்ணமும், பாலைவனத்தில் தோன்றும் கானல் நீரும், கம்பத்தில் மனிதனையும் தவறாக பார்க்கப்படுகின்றதோ? அதுப்போல அறிவு ஸ்வரூபமான பிரம்மத்தில் ஜகத்தும் பார்க்கப்படுகின்றது.

யதைவ ஸூந்யே வேதாலோ கந்தர்வாணாம் புரம் யதா |
யதாகாஸே த்விசந்ரத்வம் தத்வத் சத்யே ஜகத் ஸ்திதி: || 62 ||

यथैव शून्ये वेतालो गन्धर्वाणां पुरं यथा ।
यथाकाशे द्विचन्द्रत्वं तद्वत्सत्ये जगत्स्थितिः ॥ ६२॥

62. எவ்வாறு யாருமில்லாத இடத்தில் பிசாசை கற்பனை செய்கின்றோமோ, மேகங்களில் கந்தர்வ

கோட்டையை கற்பனை செய்துப் பார்க்கின்றோமோ, ஆகாசத்தில் இரண்டு சந்திரனைப் பார்க்கின்றோமோ அதுப்போல, சத்யமாகவும், நித்யமாகவும், ஒன்றாகவும் இருக்கின்ற பிரம்மனிடத்தில் பொய்யான ஜகத் அறியாமையால் பார்க்கப்படுகின்றது.

யதா தரங்ககல்லோ லைர் ஜலமேவ ஸ்புரத்யலம் |
பாத்ரூபேண தாம்ரம் ஹி ப்ரஹ்மாண்டௌ கைஸ்ததாத்மதா || 63 ||

यथा तरङ्गकल्लोलैर्जलमेव स्फुरत्यलम् ।
पात्ररूपेण ताम्रं हि ब्रह्माण्डौघैस्तथाऽऽत्मता ॥ ६३॥

63. எவ்விதம் கடலில் தோன்றுகின்ற அலைகளில் நீர் மட்டும்தான் இருக்கின்றதோ, நீர்தான் அலைகளாக காட்சியளிக்கின்றதோ, செம்பு உலோகம் எப்படி பாத்திரங்களாக காட்சியளிக்கின்றதோ அவ்விதமே பிரம்மனே உலகமாக காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது.

கடநாம்நா யதா ப்ருத்வீ படநாம்நா ஹி தந்தவ: |
ஜகத் நாம்நா சிதாபாதி ஞேயம் தத்தத பாவத: || 64 ||

घटनाम्ना यथा पृथ्वी पटनाम्ना हि तन्तवः ।
जगन्नाम्ना चिदाभाति ज्ञेयं तत्तदभावतः ॥ ६४॥

64. எவ்விதம் களிமண் பானை என்ற பெயருள்ளதாக தோன்றுகின்றதோ, நூலானது துணியென்ற பெயருடன் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றதோ அவ்விதமே அறிவு ஸ்வரூபமான பிரம்மனே ஜகத் என்ற பெயரில் தோன்றிக் கொண்டு இருக்கிறது. எனவே பிரம்மத்தை அது காட்சியளிக்கின்ற பெயரை விட்டு விட்டு பார்க்க வேண்டும் என்று புரிந் கொள்ள வேண்டும்.

ஸர்வோ(அ)பி வ்யவஹாரஸ்து ப்ரஹ்மணா க்ரியதே ஜனை: |
அஞ்ஞா நாந்ந விஜாநந்தி ம்ருதேவ ஹி கடாதிகம் || 65 ||

सर्वोऽपि व्यवहारस्तु ब्रह्मणा क्रियते जनैः ।
अज्ञानान्न विजानन्ति मृदेव हि घटादिकम् ॥ ६५॥

65. அனைத்து உலக விவகாரங்களும் மனிதர்களால் பிரம்மத்துடன்தான் செய்யப்படுகிறது. ஆனால் ஆத்ம ஞானத்தை அடையாதவர்களால், இதை அறிய முடிவதில்லை. எப்படி களிமண்ணால் செய்யப்பட்ட பொருட்களை பயன்படுத்தும் போதும் களிமண்ணைத்தான் பயன்படுத்தி அந்த பொருளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்ற உணர்வு இல்லாமல் பயன் படுத்துகின்றோம்.

கார்ய காரணதா நித்ய மாஸ்தே கடம்ருதோர் யதா |
ததைவ ஸ்ருதி யுக்திப்யாம் ப்ரபஞ்ச ப்ரஹ்மணோரிஹ || 66 ||

कार्यकारणता नित्यमास्ते घटमृदोर्यथा ।
तथैव श्रुतियुक्तिभ्यां प्रपञ्चब्रह्मणोरिह ॥ ६६॥

66. பானைக்கும், களிமண்ணுக்கும் காரிய–காரண சம்பந்தம் என்றென்றும் உள்ளது. அதுப்போல ஜகத்துக்கும், பிரம்மத்திற்கும் இதே சம்பந்தம் ஸ்ருதியில் யுக்தி மூலமாக நிலைநாட்டப்பட்டிருக்கிறது. இதிலிருந்து காரணம்தான் காரியத்தில் இருக்கும் என்ற விதிப்படி ஜகத்தாக பிரம்மம்தான் காட்சியளிக்கிறது.

க்ருஹ்யமாணே கடே யத்வந் ம்ருத்திகாபாதி வை பலாத் |
வீக்ஷ்யமாணே ப்ரபஞ்சே(அ)பி ப்ரஹ்மைவா பாதி பாஸுரம் || 67 ||

गृह्यमाणे घटे यद्वन्मृत्तिकाऽऽभाति वै बलात् ।
वीक्ष्यमाणे प्रपञ्चेऽपि ब्रह्मैवाभाति भासुरम् ॥ ६७॥

67. பானையை கையாளும்போது கண்டிப்பாக அதனுடன் சேர்ந்து களிமண்ணைத்தான் கையாள்கின்றோம். அதுபோல இந்த பிரபஞ்சத்தை பார்க்கும்போது ஸ்வயம் பிரகாசமான பிரம்மம்தான் எந்த பிரமாணத்தின் உதவியில்லாமல் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

ஸதைவாத்மா விசுத்தோ(அ)பி ஹ்யசுத்தோ பாதி வை ஸதா|
யதைவ த்விவிதா ரஜ்ஜுர் ஞாநிந(அ)ஞாநிநோ நிஸி || 68 ||

सदैवात्मा विशुद्धोऽपि ह्यशुद्धो भाति वै सदा ।
यथैव द्विविधा रज्जुर्ज्ञानिनोऽज्ञानिनो निशि ॥ ६८॥

68. எவ்விதம் கயிறானது பாம்பாகவும், கயிறாகவும் இரண்டு விதமாக இரண்டு பேர்களால் பார்க்கப் படுகின்றதோ? அதேப்போல பிரம்மனானது தூய்மை யானதாகவும், தூய்மையற்றதாகவும் காட்சி யளிக்கின்றது. இந்த வேற்றுமை பார்ப்பவனின் அறிவைப் பொறுத்து அமைகின்றது. ஆத்ம ஞானத்தை உடையவனுக்கு தூய்மை உள்ளதாகவும், அறியாமை யிலிருக்கின்றவனுக்கு தூய்மையற்றதாகவுமிருக்கிறது.

யதைவ ம்ருந்மய: கும்பஸ்தத்வத் தேஹோ(அ)பி சிந்மய: |
ஆத்மாநாத் மவி பா கோ(அ)யம் முதைவ க்ரியதே புதை: || 69 ||

यथैव मृण्मयः कुंभस्तद्वद्देहोऽपि चिन्मयः ।
आत्मानात्मविभागोऽयं मुधैव क्रियते बुधैः ॥ ६९॥

69. எவ்விதம் பானையானது களிமண் ஸ்வரூபமாகவே உள்ளதோ அவ்விதமே இந்த உடலும் சைதன்ய ஸ்வரூபமாகத்தான் உள்ளது. உடல் என்பது வெறும் பெயர்தான், உருவம்தான் என்று உணர வேண்டும். இது அனாத்மா, இது ஆத்மா என்று பிரித்துப்

பார்க்கின்ற அத்வைத தத்துவத்தைப் பற்றி அறியாதவர்களால், இந்த விசாரத்தில் ஈடுபடுவது பயனற்றதாகும்.

ஸர்பத்வேந யதா ரஜ்ஜு ரஜதத்வேந சுக்திகா |
விநிர்ணீதா விமூடேந தேஹத்வேந ததாத்மதா || 70 ||

सर्पत्वेन यथा रज्जू रजतत्वेन शुक्तिका ।
विनिर्णीता विमूढेन देहत्वेन तथाऽऽत्मता ॥ ७० ॥

70. எவ்விதம் கயிறானது பாம்பாக தவறாக பார்க்கப்படுகிறதோ, கிளிஞ்சலில் வெள்ளிக் காசாக பார்க்கப்படுகிறதோ, அவ்விதமே மூடர்களால் தேகமானது தவறாக ஆத்மாவாக பார்க்கப்படுகிறது

கடத்வேந யதா ப்ருத்வீ படத்வே நைவ தந்தவ: |
விநிர்ணீதா விமூடேந தேஹத்வேந ததாத்மதா || 71 ||

घटत्वेन यथा पृथ्वी पटत्वेनैव तन्तवः ।
विनिर्णीता विमूढेन देहत्वेन तथाऽऽत्मता ॥ ७१ ॥

71. எவ்விதம் களிமண் பானையாக பார்க்கப்படுகிறதோ, நூலானது துணியாக பார்க்கபடுகின்றதோ அதுப்போல அஞ்ஞானிகளால் தேகமானது ஆத்மாவாக தவறாக பார்க்கப்படுகின்றது.

கநகம் குண்டலத்வேந தரங்கத்வேந வை ஜலம் |
விநிர்ணீதா விமூடேந தேஹத்வேந ததாத்மதா || 72 ||

कनकं कुण्डलत्वेन तरङ्गत्वेन वै जलम् ।
विनिर्णीता विमूढेन देहत्वेन तथाऽऽत्मता ॥ ७२॥

72. தங்கமே காது குண்டலமாகவும், அலைகளே கடல்களாகவும் தவறாக பார்க்கப்படுவதுப் போல தேகத்தையே ஆத்மாவாக பார்க்கிறான் அஞ்ஞானி.

புருஷத்வேந வை ஸ்தாணுர் ஜலத்வேந மரீசிகா |
விநிர்ணீதா விமூடேந தேஹத்வேந ததாத்மதா || 73 ||

पुरुषत्वेन वै स्थाणुर्जलत्वेन मरीचिका ।
विनिर्णीता विमूढेन देहत्वेन तथाऽऽत्मता ॥ ७३॥

73. தூணை மனிதனாகவும், வறண்ட நிலத்தை கானல் நீராகவும், தவறாக பார்க்கப்படுவதுப் போல தேகத்தையே ஆத்மாவாக பார்க்கிறான் அஞ்ஞானி.

க்ருஹத்வேனைவ காஷ்டாநி கடகத்வேநைவ லோஹதா |
விநிர்ணீதா விமூடேந தேஹத்வேந ததாத்மதா || 74 ||

गृहत्वेनैव काष्ठानि खड्गत्वेनैव लोहता ।
विनिर्णीता विमूढेन देहत्वेन तथाऽऽत्मता ॥ ७४॥

74. பலமரக்கட்டைகள் ஒன்று சேர்ந்து வீடாகவும், இரும்பானது கத்தியாகவும் தவறாக பார்க்கப்படுவது போல தேகத்தையே ஆத்மாவாக பார்க்கிறான் அஞ்ஞானி.

யதா வ்ருக்ஷ விபார்யாசோ ஜலாத்பவதி கஸ்யசித் |
தத்வதாத்மநி தேஹத்வம் பஸ்யத் யஞ்ஞாந யோகத: || 75 ||

यथा वृक्षविपर्यासो जलाद्भवति कस्यचित् ।
तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः ॥ ७५॥

75. ஆத்மா அஞ்ஞானத்துடன் இருப்பதனால் ஆத்மாவிடத்தில் சரீரத்தின் தன்மையைப் பார்க்கிறான். எவ்விதம் தண்ணீரில் காணப்படும் மரத்தின் பிரதிபிம்பங்கள் தலைகீழாக தெரிகின்றதோ அவ்விதம் ஆத்ம தர்மத்தை தவறாக சரீர தர்மமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

போதேந கச்சத: பும்ஸ: ஸர்வம் பாதீவ சஞ்சலம் |
தத்வதாத்மநி தேஹத்வம் பஸ்யத் யஞ்ஞாந யோகத: || 76 ||

पोतेन गच्छतः पुंसः सर्वं भातीव चञ्चलम् ।
तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः ॥ ७६॥

76. படகில் பயணம் செய்து கொண்டிருப்பவர்களுக்கு பார்ப்பவைகளெல்லாம் நகர்வது போல தோன்றும்.

அதுபோல அகர்த்தவான ஆத்மா செயல் செய்வதாக தவறாக நினைக்கிறார்கள்.

பீதத்வம் ஹி யதா சுப்ரே தோஷாத் பவதி கஸ்யசித் |
யத்வதாத்மநி தேஹத்வம் பஸ்யத் யஞ்ஞாந யோகத: || 77 ||

पीतत्वं हि यथा शुभ्रे दोषाद्भवति कस्यचित् ।
तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः ॥ ७७॥

77. மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டவன் கண்களால் பார்க்கப்படும் அனைத்தும் மஞ்சள் நிறத்தோடு தெரிவது போல சரீர தர்மத்தை தவறாக ஆத்ம தர்மமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சக்ஷுர்ப்யாம் ப்ரமஸீலாப்யாம் ஸர்வம் பாதி ப்ரமாத்மகம் |
தத்வதாத்மநி தேஹத்வம் பஸ்யத் யஞ்ஞாந யோகத: || 78 ||

चक्षुर्भ्यां भ्रमशीलाभ्यां सर्वं भाति भ्रमात्मकम् ।
तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः ॥ ७८॥

78. கண்களில் குறையுள்ளவனால் பார்க்கப்படும் பொருட்கள் அனைத்தும் குறை உள்ளதாக தெரிவது போல சரீர தர்மத்தை தவறாக ஆத்ம தர்மமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அலாதம் ப்ரமணே நைவ வர்துலம் பாதி சூர்யவத் |
தத்வதாத்மநி தேஹத்வம் பஸ்யத் யஞ்ஞாந யோகத: || 79 ||

अलातं भ्रमणेनैव वर्तुलं भाति सूर्यवत् ।
तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः ॥ ७९॥

79. தீப்பந்தத்தை வேகமாக சுழற்றும்போது சூரியனைப் போல பிரகாசமான ஒளிவட்டம் தோன்றுவது போல சரீர தர்மத்தை தவறாக ஆத்ம தர்மமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மஹத்வே ஸர்வ வஸ்தூநா மணுத்வம் ஹ்யதி தூரத: |
தத்வதாத்மநி தேஹத்வம் பஸ்யத் யஞ்ஞாந யோகத: || 80 ||

महत्त्वे सर्ववस्तूनामणुत्वं ह्यतिदूरतः ।
तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः ॥ ८०॥

80. உருவில் பெரியதாக இருக்கும் பொருட்கள் மிக தொலைவிலிருந்து பார்க்கும் போது சிறியதாக தோன்றுவது போல சரீர தர்மத்தை தவறாக ஆத்ம தர்மமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஸுக்ஷ்மத்வே ஸர்வ வஸ்துநாம் ஸ்தூலத்வம் சோப நேத்ரத: |
தத்வதாத்மநி தேஹத்வம் பஸ்யத் யஞ்ஞாந யோகத: || 81 ||

सूक्ष्मत्वे सर्ववस्तूनां स्थूलत्वं चोपनेत्रतः ।
तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः ॥ ८१॥

81. உருவில் மிக சிறியதாக இருக்கின்ற பொருட்கள் பூதக்கண்ணாடியின் வழியே பார்க்கும்போது பெரியதாக தெரிவது போல சரீர தர்மத்தை தவறாக ஆத்ம தர்மமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

காச பூமௌ ஜலத்வம் வா ஜலபூமௌ ஹி காசதா |
தத்வதாத்மநி தேஹத்வம் பஸ்யத் யஞ்ஞாந யோகத: || 82 ||

काचभूमौ जलत्वं वा जलभूमौ हि काचता ।
तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः ॥ ८२॥

82. கண்ணாடியில் மேற்பரப்பு நீர்பரப்பை போலவும், நீரின் மேற்பரப்பானது கண்ணாடியின் மேற்பரப்பாக தெரிவதுப்போல சரீர தர்மத்தை தவறாக ஆத்ம தர்மமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

யத்வ தக்னௌ மணித்வம் ஹி மணௌ வா வஹ்நிதா புமாந் |
தத்வதாத்மநி தேஹத்வம் பஸ்யத் யஞ்ஞாந யோகத: || 83 ||

यद्वदग्नौ मणित्वं हि मणौ वा वह्निता पुमान् ।
तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः ॥ ८३॥

83. சிறிய நெருப்புத்துண்டு மணி போலவும், மணியானது நெருப்புத் துண்டு போலவும் சரீர தர்மத்தை தவறாக ஆத்ம தர்மமாக நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

அப்ரேஷு ஸத்சுதாவத்சு தாவந்நிவ யதா சாக்ஷி|
தத்வதாத்மநி தேஹத்வம் பஸ்யத் யஞ்ஞாந யோகத: || 84 ||

अभ्रेषु सत्सु धावत्सु धावन्निव यथा शशी ।
तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः ॥ ८४॥

84. மேகங்கள் நகர்ந்து செல்லும்போது சந்திரனும் நகர்வதைப்போல தெரிகிறது அதுபோல அகர்த்தாவாக இருக்கின்ற ஆத்மாவிடம் கர்த்தாவாக இருக்கின்ற தேகத்தின் தர்மத்தை தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

யதைவ திக்விபர்யாஸோ மோஹாத் பவதி கஸ்யசித் |
தத்வதாத்மநி தேஹத்வம் பஸ்யத் யஞ்ஞாந யோகத: || 85 ||

यथैव दिग्विपर्यासो मोहाद्भवति कस्यचित् ।
तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः ॥ ८५॥

85. தவறாக திசைகளை புரிந்துகொள்ளுதல், சில பேருக்கு அறியாமையினால் மோகத்தால் ஏற்படுவது போல சரீர தர்மத்தை தவறாக ஆத்ம தர்மமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

யதா சாக்ஷி ஜலே பாதி சஞ்சலத்வேந கஸ்யசித் |
தத்வதாத்மநி தேஹத்வம் பஸ்யத் யஞ்ஞாந யோகத: || 86 ||

यथा शशी जले भाति चञ्चलत्वेन कस्यचित् ।
तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः ॥ ८६॥

86. நீரில் தெரிகின்ற நிலவின் பிரதிபிம்பம் அசைந்து கொண்டு இருப்பதாக தவறாக தோன்றுவது போல சரீர தர்மத்தை தவறாக ஆத்ம தர்மமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஏவமாத்மந்ய வித்யாதோ தேஹாத்யாஸோ ஹி ஜாயதே |
ஸ ஏவாத்ம பரிஞ்ஞாநால்லீயதே ச பராத்மநி || 87 ||

एवमात्मन्यविद्यातो देहाध्यासो हि जायते ।
स एवात्मपरिज्ञानाल्लीयते च परात्मनि ॥ ८७॥

87. இதுவரை நாம் பார்த்த உதாரணங்களின் மூலமாக அறியாமையின் காரணமாக ஆத்மாவினிடத்தில் தேகத்தை ஏற்றி வைத்துள்ளோம் என்று புரிந்துக் கொள்ளலாம்.

பிரபஞ்சத்தை பிரம்மனிடத்தில் ஏற்றி வைத்துள்ளோம். இந்த அத்யாஸமானது ஆத்மாவைப் பற்றிய முழுமையான அறிவை அடையும் போது மறைந்து விடுகிறது. அந்த பரப்பிரம்மனிடத்தில் லயமடைந்து விடுகிறது.

ஸர்வமாத்மதயா ஞாதம் ஜகத் ஸ்தாவர ஜங்கமம் |
அபாவாத் ஸர்வ பாவாநாம் தேஹதா சாத்மந: குத: ‖ 88 ‖

सर्वमात्मतया ज्ञातं जगत्स्थावरजङ्गमम् ।
अभावात्सर्वभावानां देहता चात्मनः कुतः ॥ ८८॥

88. இந்த அசைகின்றதும், அசையாதாகவும் உள்ள அகில பிரபஞ்சமும் ஆத்மாவாக, மித்யாவாக அறியப்பட்டு விட்டது. எல்லாப் பொருட்களும் இல்லாததாகிவிட்ட காரணத்தினால் இந்த உடலுக்கு ஆத்மா என்ற தன்மை எப்படி இருக்க முடியும். அசேதனமான தேகம் ஆத்மாவல்ல என்றும், சேதனமான ஆத்மா ஒன்று மட்டுமே இருக்கின்றது என்றும் புரிந்து கொள்ள முடிகின்றது.

ஆத்மாநம் ஸததம் ஜாநந் காலம் நய மஹாமதே |
ப்ராரப்த மகிலம் புஞ்ஜந்நோத் வேகம் கர்துமர்ஹஸி ‖ 89 ‖

आत्मानां सततं जानन्कालं नय महामते ।
प्रारब्धमखिलं भुञ्जन्नोद्वेगं कर्तुमर्हसि ॥ ८९॥

89. ஆத்மாவான உன்னுடைய உண்மையான ஸ்வரூபத்தை உணர்ந்து கொண்டு காலத்தை கழித்துக்கொண்டு வாழ்வாயாக. பெரிய அறிவாளியே! அறிவொளியுடன் இருக்கின்றவனே! முழுமையாக பிராரப்த காலத்தை அனுபவித்துக் கொண்டு

இருக்கும்போது வரும் கஷ்டங்களை நினைத்து துயரப்படாதே! அவைகளைப் பொருட்படுத்தாமல் அனுபவித்துக் கொண்டிரு.

உத்பந்நே(அ)ப்யாத்ம விஞ்ஞாநே ப்ராரப்தம் நைவ முஞ்சதி |
இதி யச்சரூயதே ஸாஸ்த்ரே தந்நிராக்ரியதே(அ)துநா || ௯0 ||

उत्पन्नेऽप्यात्मविज्ञाने प्रारब्धं नैव मुञ्चति ।
इति यच्छ्रूयते शास्त्रे तन्निराक्रियतेऽधुना ॥ ९०॥

90. ஆத்ம ஞானத்தை அடைந்த பிறகு பிராரப்த கர்மபலன் ஞானியையும் விடுவதில்லை. இவ்வாறு வேதாந்த சாஸ்திரத்தில் கேட்ட கருத்தானது. இனிவரும் ஸ்லோகங்களில் நீக்கப்படுகிறது.

தத்வஞ்ஞாநோதயா தூர்த்வம் ப்ராரப்தம் நைவ வித்யதே|
தேஹாதீ நாம ஸத்வாத்து யதா ஸ்வப்நோ ப்ரபோதத: || 91 ||

तत्त्वज्ञानोदयादूर्ध्वं प्रारब्धं नैव विद्यते ।
देहादीनामसत्यत्वात् यथा स्वप्नः प्रबोधतः ॥ ९१॥

91. ஆத்ம ஞானத்தை அடைந்த பிறகு அவரிடத்தில் பிராரப்த கர்மமானது கிடையாது. ஸ்தூல, சூட்சும சரீரங்கள் போன்றவைகள் இல்லாததாகி விட்டதால் எவ்விதம் சுக–துக்கங்களால் பாதிக்கபட முடியும். கனவில் அனுபவிக்கின்ற சுக–துக்கங்கள் அனைத்தும்

அந்த நிலையில் இருக்கின்ற சரீரத்தினால்தான், விழித்ததும் அவைகள் இல்லாததினால் எதனாலும் பாதிக்கப்படமாட்டான். அதுபோல, விழிப்பு நிலையில் இருக்கும் போதும் சரீரம் இல்லாததாகி விட்டதால் அவைகளுக்கு வரும் சுக–துக்கங்களால் பாதிக்கப்பட மாட்டான்.

கர்ம ஜந்மாந்தரீயம் யத் ப்ராரப்த மிதி கீர்திதம் |
தத்து ஜந்மாந்தரா பாவாத் பும்ஸோ நைவாஸ்தி கர்ஹிசித் || 92 ||

कर्म जन्मान्तरीयं यत्प्रारब्धमिति कीर्तितम् ।
तत्तु जन्मान्तराभावात्पुंसो नैवास्ति कर्हिचित् ॥ ९२॥

92. முற்பிறவியில் செய்த கர்மத்தால்தான் இந்த பிறவியில் பிராரப்த கர்மமாக வந்து இருக்கிறது. ஆத்ம ஞானத்தை அடைந்தவுடன் ஞானிக்கு பிறப்பு கிடையாததாகி விடுவதால், முற்பிறவி என்றும் இல்லாது போய் விடுவதால் பிராரப்த கர்மமென்பதே இருக்காது.

ஸ்வப்ந தேஹோ யதாத்யஸ்தஸ் ததைவாயம் ஹி தேஹக: |
அத்யஸ்தஸ்ய குதோ ஜந்ம ஜந்மாபாவே ஸ்திதி: குத: || 93 ||

स्वप्नदेहो यथाध्यस्तस्तथैवायं हि देहकः ।
अध्यस्तस्य कुतो जन्म जन्माभावे स्थितिः कुतः ॥ ९३॥

93. கனவில் காணும் தேகங்கள் கற்பனையாக உருவாக்கப்பட்டவை. எனவே அவைகள் பிறந்திருக்கின்றது என்று சொல்ல முடியாது. அதேபோல இந்த விழிப்பு நிலை தேகமும் கற்பனையாக உருவாக்கப்பட்டது என்று நினைப்பதால் அதற்கு பிறப்பு என்பதே கிடையாது. எனவே பிறப்பற்ற ஒன்றில் எப்படி பிராரப்தம் இருக்க முடியும்?

உபாதானம் ப்ரபஞ்சஸ்ய ம்ருத் பாண்டஸ்யேவ கத்யதே |
அஞ்ஞாநம் சைவ வேதாந்ததைஸ் தஸ்மிந் நஷ்டே க்வ விஸ்வதா || 94 ||

उपादानं प्रपञ्चस्य मृद्भाण्डस्येव कथ्यते ।
अज्ञानं चैव वेदान्तैस्तस्मिन्नष्टे क्व विश्वता ॥ ९४॥

94. இந்த பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கு உபாதான காரணமாக இருப்பதை ஞானி அழித்து விட்டான்.

பானைக்கு களிமண் உபாதான காரணமாக இருப்பதை போன்ற உபாதான காரணத்தை அழித்துவிட்டால் காரியமான பிரபஞ்சமும் இல்லாது போய் விடும். ஆத்மாவை பற்றிய அறியாமையே இந்த உபாதான காரணம் என்று வேதாந்திகளால் மட்டுமே உரக்க சொல்லப்படுகின்றது.

அந்த அக்ஞானம் அழிந்துவிட்டால் உலகமும் அழிந்து விடும். ஜகத்திற்கு உபாதான காரணமாக பிரம்மம் இல்லை. ஆனால், அக்ஞானம் இருக்கிறது. பானை செய்வதற்கு முன் இருக்கின்ற உருண்டை செய்யப்பட களிமண்தான் அக்ஞானம். அதுதான் ஜகத் தோற்றத்துக்கு காரணம் என்று ஒப்பிட்டு புரிந்துக் கொள்ள வேண்டும். மாயை மாறுகின்ற உபாதான காரணம், பிரம்மன் மாறாத உபாதான காரணமாக இருக்கிறது.

யதா ரஜ்ஜும் பரித் யஞ்ய ஸர்பம் க்ருஹ்ணாதி வை ப்ரமாத் |
தத்வத் ஸத்ய மவிஞ்ஞாய ஜகத் பஸ்யதி மூடதீ: || 95 ||

यथा रज्जुं परित्यज्य सर्पं गृह्णाति वै भ्रमात् ।
तद्वत्सत्यमविज्ञाय जगत्पश्यति मूढधीः ॥ ९५॥

95. எவ்விதம் கயிற்றை விட்டுவிட்டு மதிமயக்கத்தினால் பாம்பைப் பார்க்கிறானோ அதுப்போல, சத்தியமாக உள்ள பிரம்மத்தை அறிந்து கொள்ளாமல் மோகத்தை அடைந்த புத்தியோடு கூடியவன் இந்த உலகத்தை சத்தியமாக பார்க்கிறான்.

ரஜ்ஜுரூபே பரிஞ்ஞாதே ஸர்ப ப்ராந்திர்ன திஷ்டதி |
அதிர்ஷ்டாநே ததா ஞாதே ப்ரபஞ்ச: சூன்யதாம் வ்ரஜேத் || 96 ||

रज्जुरूपे परिज्ञाते सर्पभ्रान्तिर्न तिष्ठति ।
अधिष्ठाने तथा ज्ञाते प्रपञ्चः शून्यतां व्रजेत् ॥ ९६॥

96. கயிற்றின் தன்மையை முழுமையாக புரிந்து கொள்ளும்போது பாம்பினுடைய தோற்றம் அதில் இருக்காது. அதுபோல ஜகத்திற்கு ஆதாரமாக உள்ளதை அறியும் போது ஜகத் முழுமையாக இல்லாமல் போய்விடும்.

தேஹஸ்யாபி பிரபஞ்சத்வாத் ப்ராரப்தா வஸ்திதி: குத: |
அஞ்ஞாநி ஜநபோ தார்தம் ப்ராரப்தம் வக்தி வை ஸ்ருதி: || 97 ||

देहस्यापि प्रपञ्चत्वात्प्रारब्धावस्थितिः कुतः ।
अज्ञानिजनबोधार्थं प्रारब्धं वक्ति वै श्रुतिः ॥ ९७॥

97. இந்த தேகமும் உலகத்தினுடைய அங்கமாக இருப்பதால் அதுவும் பொய்யென்று ஆகிவிடுகிறது. பிராரப்தம் உடலுக்கு வருவதால், தேகமே இல்லாத போது பிராரப்தம் எப்படி செயல்பட முடியும்? ஆகையால் அக்ஞானிகள் புரிந்து கொள்வதற்காக வேதாந்தம் பிராரப்தத்தைப்பற்றி பேசுகிறது.

க்ஷூயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே |
பஹுத்வம் தந்நிஷேதார்தம் ஸ்ருத்யா கீதம் ச யத்ஸ்புடம் || 98 ||

क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन्दृष्टे परावरे ।
बहुत्वं तन्निषेधार्थं श्रुत्या गीतं च यत्स्फुटम् ॥ ९८॥

98. இந்த ஞானியினுடைய அனைத்து கர்மபலன்களும் அந்த பிரம்ம ஞானத்தை அடைந்தவுடன் நாசமடைகிறது. இங்கு கர்மபலன்கள் என்று குறிப்பிடுவதால் பிராரப்த கர்மபலனும் அழிந்து விடுகின்றது என்று உபநிஷத்தினால் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

உச்யதே(அ)ஞ்ஞைர் பலாச்சை தத்ததாநர் தத்வயாகம: |
வேதாந்த மதஹாநம் ச யதோ ஞாநமிதி ஸ்ருதி: || 99 ||

उच्यतेऽज्ञैर्बलाच्चैतत्तदानर्थद्वयागमः ।
वेदान्तमतहानं च यतो ज्ञानमिति श्रुतिः ॥ ९९॥

99. ஆத்ம ஞானத்தை அடைந்தாலும் பிராரப்தத்தின் பிடியிலிருந்து விடுபட முடியாது என்று உறுதியாகக் கருதினால் மூன்று குறைகள் வந்து விடும். உபநிஷத்தின் அத்வைத உபதேசமும் பயனற்றதாகி விடும்.

அந்த மூன்று குறைகளானது

1. ஞானத்திற்கு கர்மபலன்களை அழிக்க முடியாதாகி விடுமானால், அதை அடைய வேண்டிய அவசியமில்லை,

2. குரு–சிஷ்ய பரம்பரையும் இல்லாமல் போய்விடும்.

3. வேதாந்தத்தின் மையக்கருத்தான அத்வைதம் என்பது பயனற்றதாகி விடும்.

த்ரி பஞ்சாங்காந்யதோ வக்ஷ்யே பூர்வோக் தஸ்யைவ ஸித்தயே |
தைஸ்ச ஸர்வை: ஸதா கார்யம் நிதித்யாஸநமேவது || 100 ||

त्रिपञ्चाङ्गान्यतो वक्ष्ये पूर्वोक्तस्यैव सिद्धये ।
तैश्च सर्वैः सदा कार्यं निदिध्यासनमेव तु ॥ १००॥

100. இப்பொழுது பதினைந்து விதமான சாதனங்களை சொல்லப்படுகிறது. ஞானத்தில் நிஷ்டை அடைவதற்காக இவைகளைப் பயன்படுத்தி **"நிதித்யாஸனம்"** என்ற இந்த தியானத்தை மட்டும் இடைவிடாமல் செய்துவர வேண்டும்.

நித்யாப்யா ஸாத்ருதே ப்ராப்திர்ந பவேத் ஸச்சிதாத்மந: |
தஸ்மாத் ப்ரஹ்ம நிதித்யாஸே ஜிஞ்ஞாஸு: ஸ்ரேயஸே சிரம் || 101 ||

नित्याभ्यासादृते प्राप्तिर्न भवेत्सच्चिदात्मनः ।
तस्माद्ब्रह्म निदिध्यासेज्जिज्ञासुः श्रेयसे चिरम् ॥ १०१॥

101. நிதித்யாஸன சாதனத்தை தொடர்ந்து செய்யவில்லையென்றால் ஸத், சித் ஸ்வரூபமாக இருக்கின்ற பூரணமான பிரம்மனாக இருக்க முடியாது. ஆகவே, நிதித்யாஸனத்தை தொடர்ந்து செய்யப்பட

வேண்டும். பிரம்மத்தை தியானிக்க வேண்டும். ஞானத்தை அடைந்து அதில் நிலைபெற விரும்புவன், மோட்ச நிலையை அடைய விரும்புபவன் அதிக காலம் செய்ய வேண்டும்.

யமோ ஹி நியமஸ்த்யாகோ மௌநம் தேஸஸ்ச காலத: |
ஆஸநம் முலபந்தஸ்ச தேஹ ஸாம்யம் ச த்ருக் ஸ்திதி: || 102 ||

यमो हि नियमस्त्यागो मौनं देशश्च कालतः ।
आसनं मूलबन्धश्च देहसाम्यं च दृक्स्थितिः ॥ १०२॥

102. பதினைந்து சாதனங்களில் முதல் பத்து சாதனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

102.1. யமஹ – புலனடக்கம் (அஹிம்சை, சத்யம் அஸ்தேயம், பிரம்மச்சர்யம், அபரிக்ரஹம்.

102.2. நியமஹ – மனவடக்கம் (தூய்மை, சந்தோஷம், தவம், ஸ்வாத்யாயம், ஈஸ்வர பிரணிதானம்).

102.3. தியாகஹ – துறத்தல்.

102.4. மௌனம் – பேசாதிருத்தல்.

102.5. தேஹ – இடம் (தியானம் செய்வதற்கேற்ற சூழ்நிலையுள்ள இடம்).

102.6. கால – காலம் (தியான செய்ய வேண்டிய நேரம், எவ்வளவு காலம் செய்ய வேண்டும்.)

102.7. ஆஸனம் – அமர வேண்டிய நிலை.

102.8. மூலப3ந்த4ஹ – பந்தத்தின் மூலக்காரணத்தை நீக்குதல்.

102.9. தே3ஹஸாம்யம்– உடலை நேராக வைத்தல், அசையாது இருத்தல்.

102.10. த்3ருக் ஸ்தி2தஹ – நேர்பார்வை (தியானத்தின் போது பார்வை எப்படி வைத்திருக்க வேண்டும் என்ற முறை).

ப்ராண ஸம்யமநம் சைவ ப்ரத்யாஹாரஸ்ச தாரணா |
ஆத்மத்யாநம் ஸமாதிஸ்ச ப்ரோக்தா ந்யங்கா நிவைக்ரமாத் || 103 ||

प्राणसंयमनं चैव प्रत्याहारश्च धारणा ।
आत्मध्यानं समाधिश्च प्रोक्तान्यङ्गानि वै क्रमात् ॥ १०३॥

103. கடைசி ஐந்து சாதனங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

103.1. ப்ராண ஸம்யமனம் – பிராணாயமம்.

03.2. ப்ரத்யாஹாரம் – மனம் புலன்களின் வழியே வெளியே செல்லாமல் நெறிபடுத்தி வைத்திருத்தல்.

103.3. தா4ரணா – மனதை ஒரு விஷயத்தில் குவித்து வைத்திருத்தல்.

103.4. ஆத்ம த்3யானம் – ஆத்மாவை மட்டும் தியானித்தல்.

103.5. ஸமாதி4 –ஆத்ம தியானித்தல் நிலைத்திருத்தல்.

ஸர்வம் ப்ரஹமேதி விஞ்ஞாநாதிந்திரியக்ராமஸம் யம: |
யமோ(அ)யமிதி ஸம்ப்ரோக்தோ (அ)ப்யஸநீயோ முஹிர் முஹீ: || 104 ||

सर्वं ब्रह्मेति विज्ञानादिन्द्रियग्रामसंयमः ।
यमोऽयमिति सम्प्रोक्तोऽभ्यसनीयो मुहुर्मुहुः ॥ १०४॥

104. யமஹ – புலனுகர் போகப்பொருட்களிலிருந்து புலன்களை விலக்கிவைத்தல். புலன்களை அமைதியாக வைத்திருத்தல்.

சாதாரண மனிதனின் புலன்கள் சக்தி குறைந்திருந்தாலும், வைராக்கியம் இருந்து விட்டால் அவைகள் அமைதியாக வைத்திருக்க முடியும். அதனால், ஆத்ம ஞானத்தை அடைந்தவனால் புலன்களை அமைதியாக வைத்திருக்க முடியும். அனைத்தும் பிரம்ம ஸ்வரூபம் என்ற இந்த விசேஷமான அறிவால் புலன்களின் கூட்டங்களை அமைதிப்படுத்த வேண்டும். இதுவே யமம் என்று கூறப்படுகிறது. இதை திரும்ப திரும்ப பயிற்சி செய்து அடைய வேண்டும்.

ஸஜாதீய ப்ரவாஹஸ்ச விஜாதீய திரஸ் க்ருதி: |
நியமோ ஹி பராநந்தோ நியமாத் க்ரியதே புதை: || 105 ||

सजातीयप्रवाहश्च विजातीयतिरस्कृतिः ।
नियमो हि परानन्दो नियमात्क्रियते बुधैः ॥ १०५॥

105. ஒரே எண்ணமே தொடர்ந்து இருத்தலே "**ஸஜாதீய வ்ருத்தி**" என்பதாகும். இந்த எண்ணங்களுக்கு வேறானவைகளாக தோன்றுவது "**விஜாதீய வ்ருத்தி**" ஆகும்.

ஒரு பொருளைக் குறிக்கின்ற எண்ணமே தொடர்ந்து இருக்க வைத்து அதற்கு வேறான எண்ணங்களை விட்டு விடுதல் என்பதே "**நியமம்**" என்று கூறப்படுகிறது.

இது மேலான ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியது. எனவே, ஞான நிஷ்டை விரும்புபவர்கள் நிதித்யாஸனத்தை இடைவிடாமல் தொடர்ந்து செய்ய வேண்டும்.

த்யாக: ப்ரபஞ்சரூபஸ்ய சிதாத்மத்வாவ லோகநாத் |
த்யாகோ ஹி மஹதாம் பூஜ்ய: ஸத்யோ மோக்ஷமயோ யத: || 106 ||

त्यागः प्रपञ्चरूपस्य चिदात्मत्वावलोकनात् ।
त्यागो हि महतां पूज्यः सद्यो मोक्षमयो यतः ॥ १०६ ॥

106. த்யாகம் – எது நமக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகின்றோமோ, அதிகமாக விரும்புகின்றோமோ அதை மற்றவர்களுக்கு விட்டுக் கொடுத்தலே "**தியாகம்**" என்று அழைக்கப்படுகிறது.

இங்கு இந்த உலகத்தை துறந்து விடுதலை குறிக்கிறது. அறிவு ஸ்வ்ரூபமான பிரம்மன் என்ற ஞானத்தால் ஜகத்தினுடைய தோற்றத்தை துறந்து விடுகின்ற தியாகமானது மகான்களால் போற்றப்படுகின்றது. இந்த தியாகமானது உடனடியாக மோட்சத்தைக் கொடுக்கிறது.

யதோ வாசோ நிவர்தந்தே அப்ராப்ய மநஸா சஹ |
யந்மௌநம் யோகிபிர்கம்யம் தத்பஜேத்சர்வதா புத: || 107 ||

यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह ।
यन्मौनं योगिभिर्गम्यं तद्भजेत्सर्वदा बुधः ॥ १०७॥

107. அப்ராப்ய – அடையமுடியாமல், நிவர்தந்தே – திரும்பி வந்து விடுதல், க3ம்யம் – அடையக் கூடியது, ஸர்வதா3 பவேதி – எப்போதும் அடையப்படுகிறது.

பிரம்மத்தையே மௌன ஸ்வரூபமாக இங்கே குறிப்பிடப்படுகிறது. பிரம்மத்திற்கு அவயவங்களற்றதாக இருப்பதாலும், அது மட்டுமே இருப்பதாலும் அதனால் பேச முடியாது. அந்த பிரம்மத்தை விளக்க முடியாமல் வாக்கானது திரும்பி வந்து விடுகிறது. எண்ணங்களும் திரும்பி வந்து விடுகிறது. மனதுடன் சேர்ந்து எண்ணத்தாலும் பிரம்மத்தை கிரகிக்க முடியாது. எனவே பிரம்மம் மௌனம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நிலையானது ஞானயோகத்தினால் அறிவை அடைந்த ஞானிகளால் மட்டும் அடையக் கூடியது. புலன்களனைத்தும் பிரம்மம் என்ற உணர்வுடன் இருக்க வேண்டும்.

வாசோ யஸ்மாந்திவர்தந்தே தத்வக்தும் கேந சக்யதே |
ப்ரபஞ்சோ யதி வக்தவ்ய: ஸோ(அ)பி ஸப்தவிவர்ஜித: || 108 ||

वाचो यस्मान्निवर्तन्ते तद्वक्तुं केन शक्यते ।
प्रपञ्चो यदि वक्तव्यः सोऽपि शब्दविवर्जितः ॥ १०८॥

108. எந்த பிரம்மத்திடமிருந்து வாக்கும், மனமும் திரும்பி வருகின்றதோ அந்த பிரம்மத்தை யாரால் உபதேசித்து விளக்கிவிட முடியும். இந்த உலகத்தை பற்றியும் பேசி புரிய வைக்க முடியாது.

இதி வா தத்பவேந்மௌனம் ஸதாம் ஸஹஜ ஸஞ்ஞிதம் |
கிரா மௌனம் து பாலாநாம் ப்ரயுக்தம் ப்ரஹ்மவாதிபி: || 109 ||

इति वा तद्भवेन्मौनं सतां सहजसंज्ञितम् ।
गिरां मौनं तु बालानां प्रयुक्तं ब्रह्मवादिभिः ॥ १०९॥

109. இந்த எண்ணத்தினாலே அடையப்படும். அறிவே மௌனமாகும். ஞானிகளுக்கு இயல்பாக இருக்கின்ற நிலையே மௌனமாகும். ஆரம்ப நிலையில் உள்ள சாதகனுக்கு வாயிலிருந்து எந்த பேச்சும் வராமலிருக்கும் நிலையே மௌன நிலை என்று பிரம்ம ஞானிகளால் கூறப்பட்டுள்ளது.

ஆதாவந்தே ச மத்யே ச ஜனோ யஸ்மிந்ந வித்யதே |
யேநேதம் ஸததம் வ்யாப்தம் ஸ தேஸோ விஜந: ஸ்ம்ருத: || 110 ||

आदावन्ते च मध्ये च जनो यस्मिन्न विद्यते ।
येनेदं सततं व्याप्तं स देशो विजनः स्मृतः ॥ ११०॥

110. ஆரம்பத்திலும், கடைசியிலும், இடையிலும் என்று குறிப்பிடுகின்ற மூன்று காலங்களிலும் மக்கள் இல்லை, ஆனால் பிரம்மம் எல்லா விடத்திலும், எல்லா காலங்களிலும் வியாபித்திருக்கிறார். மனிதர்கள் இல்லாத இடத்திலும் இருப்பது பிரம்மமே என்று சொல்லப்படுகிறது.

கலநாத் ஸர்வ பூதாநாம் ப்ரஹமாதீநாம் நிமேஷத: |
காலஸப்தேந நிர்திஷ்டோ ஹ்யகண்டாநந்தகோ(அ)த்வய: || 111 ||

कलनात् सर्वभूतानां ब्रह्मादीनां निमेषतः ।
कालशब्देन निर्दिष्टो ह्यखण्डानन्दकोऽद्वयः ॥ १११॥

111. எப்படி நிதித்யாஸனத்திற்கு தேசம் கிடையாது என்று சொல்லப்படுகிறதோ. அதேபோல காலமும் கிடையாது என்று சங்கராச்சாரியர் கூறியிருக்கிறார். புல்பூண்டுகள் எனும் தாவரங்களில் தொடங்கி பிரம்மா வரை எல்லைகள் எதுவும் இல்லாமல், தோற்றத்திற்கு வெளிக்கொண்டு வந்ததும் ஆதாரமாகவும் இருப்பதுமான காலம் என்ற சொல்லப்படுகின்ற

பூரணமான, ஆனந்த ஸ்வரூபமாக இருக்கின்ற பிரம்மம் தான் அது என்று கூறப்படுகிறது.

சுகேநைவ பவேத்ய ஸ்மிந்ந ஜஸ்ரம் ப்ரஹ்ம சிந்தநம் |
ஆஸநம் தத்விஜாநீயாந் நேதரத் சுக நாஸநம் || 112 ||

सुखेनैव भवेद्यस्मिन्नजस्रं ब्रह्मचिन्तनम् ।
आसनं तद्विजानीयान्नेतरत्सुखनाशनम् ॥ ११२॥

112. ஆசனம் என்பது அமர்கின்ற இருக்கையையும், அமர்கின்ற நிலையையும் குறிக்கின்றது. இங்கே எப்படி அமர்ந்து தியானம் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. பிரம்மத்தை பற்றிய சிந்தனையை மேற்கொள்ளும் போது மிகவும் சுகமாக தடையில்லாமல் அதிக காலம் அமர முடியுமோ அதுவே சிறந்த ஆசனமாகும். உடலுக்கு கஷ்டத்தை கொடுக்க கூடிய மற்ற அனைத்து ஆசனங்களும் ஆசனங்களல்ல.

ஸித்தம் யத் ஸர்வ பூதாதி விஸ்வாதிஷ்டாந மவ்யயம் |
யஸ்மிந் ஸித்தாஸமா விஷ்டாஸ்தத்வை ஸித்தாஸநம் விது: || 113 ||

सिद्धं यत्सर्वभूतादि विश्वाधिष्ठानमव्ययम् ।
यस्मिन्सिद्धाः समाविष्टास्तद्वै सिद्धासनं विदुः ॥ ११३॥

113. எது ஏற்கனவே உருவாக்கப்பட்டதாக, செய்யப் பட்டதாக, அடையப்பட்டதாக இருக்கின்றதோ, அதுவே

தோன்றிய அனைத்தும் ஒடுங்குகின்ற இடமாக இருக்கின்றது. அதுவே ஜகத்திற்கு ஆதாரமாகவும், என்றும் அழியாதாகவும் இருக்கிறது. எந்த இடத்தில் ஞானிகளெல்லாம் சென்று ஒடுங்குகிறார்களோ பிரம்மனான அதுவே **"ஸித்தாசனம்"** என்று கூறப்படுகிறது.

யந்லம் ஸர்வ பூதாநாம் யந்மூலம் சித்த பந்தநம் |
மூல பந்த: ஸதா ஸேவ்யோ யோக்யோ(அ)ஸௌராஜயோகிநாம் || 114 ||

यन्मूलं सर्वभूतानां यन्मूलं चित्तबन्धनम् ।
मूलबन्धः सदा सेव्यो योग्योऽसौ राजयोगिनाम् ॥ ११४॥

114. எல்லா ஜீவராசிகளுக்கும் காரணமாக இருப்பதும், எது மனதை அமைதிப்படுத்துவதற்கும், கட்டுப் படுத்துவதற்கும் காரணமாகவும், எப்பொழுதும் இருப்பது மாக இருக்கின்றதோ, அதுவே பிரம்மமாகும். இதையே **மூலபந்தம்** என்று கூறப்படுகிறது. இந்த பிரம்மத்திடம் தன்னை ஒப்படைத்தவர்கள் எப்பொழுதும் அதனிடத்தே இருப்பார்கள்.

அங்காநாம் ஸமதாம் வித்யாத் ஸமே ப்ரஹ்மணி லீநதாம் |
நோ சேந்நைவ ஸமாநத்வ ம்ருஜுத்வம் ஸுஷ்க வ்ருக்ஷவத் || 115 ||

अङ्गानां समतां विद्यात्समे ब्रह्मणि लीनताम् ।
नो चेन्नैव समानत्वमृजुत्वं शुष्कवृक्षवत् ॥ ११५॥

115. காய்ந்த மரக்கட்டைப்போல இருத்தல், எல்லோரிடத்திலும் சமமாக விவகாரம் செய்தல், நிதித்யாஸனம் செய்யும் சாதகன் தனது எல்லா அங்கங்களையும், புலன்களையும், மனதையும், சமமாக வைத்திருத்தல், அளவுடன் விவகாரத்தில் ஈடுபடுதல்.

எல்லா அவயவங்களையும், புலன்களையும், மனதையும், புத்தியையும் சமமாக அளவாக விவகாரத்தில் ஈடுபட்டுள்ளவனாகவும், இவைகளனைத்தும் பிரம்மத்தில் ஒடுங்கியுள்ளதாகவும் இருக்கின்றது.

அப்படியில்லையென்றால், ஆசனத்தில் இருக்கின்றேன் என்று கூறிக்கொண்டு, காய்ந்த மரக்கட்டைப்போல் நேராக உடலை வைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால், பயன் இல்லை. இடத்திற்கு தகுந்தாற்போல் வளைந்து கொடுத்து அவயவங்களை சமநிலையில் வைத்துக் கொள்ளமுடியாது.

த்ருஷ்டம் ஞ்ஞாநமயீம் க்ருத்வா பஸ்யேத் ப்ரஹ்ம மயம் ஜகத் |
ஸா த்ருஷ்டி: ப்ரமோதாரா ந நாஸாக்ராவலோகிநீ || 116 ||

दृष्टिं ज्ञानमयीं कृत्वा पश्येद्ब्रह्ममयं जगत् ।
सा दृष्टिः परमोदारा न नासाग्रावलोकिनी ॥ ११६॥

116. சாதகன் தன்னுடைய பார்வையை ஞானமயமாக வைத்திருக்க வேண்டும், நானே பிரம்மன், அனைத்தும்

பிரம்மம் என்று மாற்றியமைத்து, இந்த ஜகத்தை பிரம்மமயமாக பார்க்க வேண்டும். இந்த நிலையில் இருக்கும் போது உலகத்திலுள்ள எதுவும் பயத்தையோ, மோகத்தையோ, மன சஞ்சலத்தையோ கொடுக்காது. இந்தப்பார்வையில், அவன் இந்த உலகத்தை வெற்றுப் பார்வையில், சாக்ஷியாகப் பார்ப்பதுதான் மிக உயர்ந்த நிலையாகும். அதைவிடுத்து, இந்த கண்களால் மூக்கினுடைய நுனியை பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற நியமமெல்லாம் கிடையவே கிடையாது. அஞ்ஞானிகள் மூக்கின் நுனியைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

த்ரஷ்ட்ரு தர்ஸந த்ருஸ்யாநாம் விராமோ யத்ர வா பவேத் |
த்ருஷ்டிஸ் தத்ரைவ கர்த்தவ்யா ந நாஸாக்ராவலோகிநீ || 117 ||

द्रष्टृदर्शनदृश्यानां विरामो यत्र वा भवेत् ।
दृष्टिस्तत्रैव कर्तव्या न नासाग्रावलोकिनी ॥ ११७॥

117. பார்ப்பவன், பார்ப்பவன் பயன்படுத்தும் கருவி, பார்க்கப்படும் பொருள் இவை மூன்றும் இல்லாமல் அகப்பார்வையால் மனம் பிரம்மனிடத்தில் நிலைத்து இருக்கின்றதோ அந்த பிரம்மனையே நம்முடைய புறப்பார்வையில் பார்த்தபடி இருக்க வேண்டும். இதைத் தவிர மூக்கின் நுனியை பார்ப்பதல்ல.

சித்தாதி ஸர்வம் பாவேஷு ப்ரஹ்மத்வேநைவ பாவநாத: |
நிரோத: ஸர்வ வ்ருத்தீநாம் ப்ராணாயாம: ஸ உச்யதே || 118 ||

चित्तादिसर्वभावेषु ब्रह्मत्वेनैव भावनात् ।
निरोधः सर्ववृत्तीनां प्राणायामः स उच्यते ॥ ११८॥

118. பிராணனை அமைதிப்படுத்தினால் மனமும் அமைதியாகிவிடும். சித்தம், மனம், புத்தி, அகங்காரம் ஆகிய எல்லாவற்றையும் பிரம்மமாகவே பாவித்து எல்லா எண்ணங்களையும் நெறிப்படுத்ததலே "**பிராணாயாமம்**" என்று சொல்லப்படுகிறது.

நிஷேதநம் ப்ரபஞ்சஸ்ய ரேசகாக்ய: ஸமீரண: |
ப்ரஹ்மைவா ஸ்மீதியா வ்ருத்தி: பூரகோ வாயு ரீரித: || 119 ||

निषेधनं प्रपञ्चस्य रेचकाख्यः समीरणः ।
ब्रह्मैवास्मीति या वृत्तिः पूरको वायुरीरितः ॥ ११९॥

119. இந்த பிரபஞ்சத்தை தோன்றி மறையக்கூடிய பொய்யென்று விலக்கி விடுவதே ரேசக பிராணாயாமம் என்ற பெயருடையது. நானே பிரம்மனாக இருக்கிறேன் என்ற எண்ணமே பூரக பிரணாயாமம் என்ற பெயருடையது.

ததஸ் தத்வ்ருத்திநை ஸ்சல்யம் கும்பக: ப்ராணசம்யம: |
அயம்சாபி ப்ரத்தா நாமஞ்ஞாநாம் க்ராணபீடநம் || 120 ||

ततस्तद्वृत्तिनैश्चल्यं कुंभकः प्राणसंयमः ।
अयं चापि प्रबुद्धानामज्ञानां घ्राणपीडनम् ॥ १२० ॥

120. பிறகு நானே பிரம்மன் என்ற எண்ணத்தை உறுதியாக பிடித்து வைத்திருத்தலே கும்பக பிராணாயாமம் என்று புரிந்துக் கொள்ள வேண்டும். இவைகளெல்லாம் ஞானி செய்கின்ற பிராணாயாம மாகும். அக்ஞானிகளுடைய பிராணாயாமம் மூச்சுக் காற்றை கஷ்டப்படுத்தி உடலை வருத்தி நெறிப்படுத்துவதாகும்.

விஷயேஷ்வாத்மதாம் த்ருஷ்ட்வா மநஸஸ்சிதி மஜ்ஜநம் |
ப்ரத்யாஹார: ஸ விஞ்ஞேயோ(அ)ப்யஸநீயோ முமுக்ஷுபி: || 121 ||

विषयेष्वात्मतां दृष्ट्वा मनसश्चिति मज्जनम् ।
प्रत्याहारः स विज्ञेयोऽभ्यसनीयो मुमुक्षुभिः ॥ १२१ ॥

121. அனுபவிக்கப்படும் பொருட்களிடத்தில் எல்லாம் உண்டாகும் அனுபவம் என்பது, தன்னிடத்தில் இருக்கின்ற சைதன்ய ஸ்வரூபமான சித்தின் மூலமே தோன்றியுள்ளது என்ற புரிதலுடன் அதிலேயே மூழ்கி இருந்துவிட வேண்டும். இதையே **"பிரத்யாஹாரம்"** என்று அறிந்து கொள்ள வேண்டும். இதுப்போன்ற

வேதாந்த சாஸ்திரத்தை நாடி மோக்ஷத்தை அடைய விரும்பும் முமுக்ஷுக்கள் இதையே முயற்சி செய்து அடைய வேண்டும்.

யத்ர யத்ர மனோ யாதி ப்ரஹ்மனஸ்தத்ர தர்ஸநாத் |
மநஸோ தாரணம் சைவ தாரணா ஸா பரா மதா || 122 ||

यत्र यत्र मनो याति ब्रह्मणस्तत्र दर्शनात् ।
मनसो धारणं चैव धारणा सा परा मता ॥ १२२॥

122. எங்கேயெல்லாம் மனம் செல்கின்றதோ அங்கேயெல்லாம் பிரம்மனையே பார்ப்பாயாக. இதுதான் மனதை ஒருமுகப்படுத்தி சிந்தித்தலாகும். இப்படிபட்ட தாரணைதான் மிகவும் மேலான சாதனமாகும்.

ப்ரஹ்மைவாஸ்மீதி சத்வ்ருத்தயா நிராலம் பதயா ஸ்திதி: |
த்யாநஸப்தேந விக்யாதா பரமாநந்த தாயிநீ || 123 ||

ब्रह्मैवास्मीति सद्वृत्त्या निरालम्बतया स्थितिः ।
ध्यानशब्देन विख्याता परमानन्ददायिनी ॥ १२३॥

123. நான் பிரம்மனாக மட்டும்தான் இருக்கிறேன் என்ற உண்மையான எண்ணத்துடன் இருத்தலே தியானம் என்ற சொல்லால் கூறப்படுகிறது. இந்த தியானத்திற்கு

எந்த ஆலம்பனமும் கிடையாது. எந்த ஆலம்பனத்தின் துணையும் இந்த தியானத்திற்கு அவசியமில்லை.

இந்த நிலையில் இருக்கும்போது மேலான ஆனந்தமானது அனுபவிக்கப்படுகிறது. (இந்த எண்ணத்தை தவிர மற்ற அனைத்து எண்ணங்களும் பொய்யானவை {அஸத்} என்று இந்த இடத்தில் புரிந்துக் கொள்ள வேண்டும். இந்த உண்மையான நிகழ்கால எண்ணத்தை வேறெந்த பிரமாணத்தாலும் நீக்க முடியாது.)

நிர்விகாரதயா வ்ருத்தயா ப்ரஹ்மாகாரதயா புந: |
வ்ருத்தி விஸ்மரணம் ஸம்யக்ஸமாதிர்ஞான ஸஞ்ஞக: || 124 ||

निर्विकारतया वृत्त्या ब्रह्माकारतया पुनः ।
वृत्तिविस्मरणं सम्यक्समाधिर्ज्ञानसंज्ञकः ॥ १२४॥

124. சமாதி என்பது தியானத்தின் முதிர்ந்த நிலையே என்பது பதஞ்சலியின் அர்த்தமாகும். மாறாத பிரம்மத்தை விஷயமாகக் கொண்ட எண்ணத்தில் மீண்டும் மீண்டும் நிலைத்து இருந்து கொண்டு நான் தியானிக்கிறேன் என்ற எண்ணமே முழுவதுமாக இருந்து கொண்டிருக்கும் நிலையே "**சமாதி**" என்ற கூறப்படுகிறது. சமாதி என்றால், சமம் + ஆதி என்ற

நிலையில் அந்த பிரம்ம ஞானத்திலேயே பிரம்மமாக சம நிலை பெற்றிருப்பான்.

ஏவம் சாக்ருத்ரிமாநந்தம் தாவத்ஸாது ஸமப்யஸேத் |
வஸ்யோ யாவத் க்ஷணாத்பும்ஸ: ப்ரயுக்த: ஸந் பவேத்ஸ்வயம் || 125||

एवञ्चाकृत्रिमानन्दं तावत्साधु समभ्यसेत् ।
वश्यो यावत्क्षणात्पुंसः प्रयुक्तः सन् भवेत्स्वयम् ॥ १२५॥

125. நிதித்யாஸனம் எதுவரை செய்ய வேண்டும் என்ற கேள்விக்கான பதிலாக இந்த ஸ்லோகத்தில் கூறப்படுகிறது. நிதித்யாஸனத்தை செய்கின்ற சாதகனுக்கு ஞானத்தினுடைய பலனை அனுபவத்திற்கு கொண்டு வரும் போது உடனடியாக எப்போது ஞான விருத்தியானது பலனைக் கொடுக்கின்றதோ அதுவரை இந்த நிதித்யாஸன சாதனத்தை நன்கு முயற்சியுடன் செய்து கொண்டு வர வேண்டும்.

தத ஸாதநநிர்முக்த: ஸித்தோ பவதி யோகிராட் |
தத்ஸ்வரூபம் ந சைகஸ்ய விஷயோ மநஸோ கிராம் || 126 ||

ततः साधननिर्मुक्तः सिद्धो भवति योगिराट् ।
तत्स्वरूपं न चैकस्य विषयो मनसो गिराम् ॥ १२६॥

126. ஞான நிஷ்டைக்காக நிதித்யாஸன சாதகன் அதன் பலனை அடைந்து விட்ட பிறகு அதிலிருந்து விடுபட்டு

விடுகிறான். இந்த சாதனத்தின் மூலம் முக்தனாக உயர்கின்றான். இந்த ஞானியினுடைய நிலையை சொல்லால் விளக்க முடியாது. மனதாலும் புரிந்து கொள்ள முடியாது.

ஸமாதௌ க்ரியமாணே து விக்நாந்யாயாந்திவை பலாத் |
அநுஸந்தாந ராஹித்ய மாலஸ்யம் போகலாலஸம் || 127 ||

समाधौ क्रियमाणे तु विघ्नान्यायान्ति वै बलात् ।
अनुसन्धानराहित्यमालस्यं भोगलालसम् ॥ १२७॥

127. தியானம் போன்ற சாதனங்களை மேற்கொள்ளும்போது பலமான தடைகள் பல தானாகவே வரும். அந்த தடைகளாவது,

அனுஸந்தான ராஹித்யம் – தொடர்ந்து செய்யாமல் இடையிலே விட்டுவிடுதல்.

ஆலஸ்யம் – சோம்பல் வந்து விடலாம்.

போ4க3லாலஸம் – போகத்தில் உள்ள பற்று, இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை.

லயஸ் தமஸ்ச விக்ஷேபோ ரஸாஸ்வாதஸ்ச சூன்யதா |
ஏவம் யத்விக்நபாஹுல்யம் த்யாஜ்யம் ப்ரஹ்மவிதா ஸநை: || 128 ||

लयस्तमश्च विक्षेपो रसास्वादश्च शून्यता ।
एवं यद्विघ्नबाहुल्यं त्याज्यं ब्रह्मविदा शनैः ॥ १२८॥

128. லயஸ் – தூக்கம்.

தமஸ்ச – செய்யலாம், வேண்டாம் என்ற மனக்குழப்பம்.

விக்ஷேபம் – தியானத்திற்கு எதிரான தேவையற்ற எண்ண ஓட்டங்கள்.

ரஸாஸ்வாதஸ்ச – தியானத்தின் பலனை அடைவதற்கு முன்னரே, தியானம் செய்யும்போதே வருகின்ற சுகத்தை அனுபவித்தல்.

ஸூன்யதா – காரணம் இல்லாமல் மனசோர்வடைதல், மன இறுக்கம் ஏற்படுதல். இத்தகைய தடைகளை சாதகன் ஒவ்வொன்றாக மெதுவாக நீக்கிக் கொள்ள வேண்டும்.

பாவ வ்ருத்தயா ஹி பாவத்வம் சூன்ய வ்ருத்யா ஹி சூன்யதா |
ப்ரஹ்ம வ்ருத்தயா ஹி பூர்ணத்வம் ததாபூர்ணத்வ மப்ய ஸேத் || 129 ||

भाववृत्त्या हि भावत्वं शून्यवृत्त्या हि शून्यता ।
ब्रह्मवृत्त्या हि पूर्णत्वं तथा पूर्णत्वमभ्यसेत् ॥ १२९॥

129. இருத்தல் என்று எண்ணிவிட்டால் அது இருக்கின்றது. அதேபோல இல்லை என்று எண்ணிவிட்டால் அது இல்லையென்றாகி விடுகிறது. நான் பிரம்மன் என்ற எண்ணத்தினால் பூரண நிலைய அடைந்து விடுவான். ஆகவே, இந்த பூரணமாக இருக்கும் தன்மையை அடைவதற்கு இந்த ஒரே எண்ணத்தையே தியானம் செய்துக் கொண்டிருக்க வேண்டும்.

யே ஹி வ்ருத்திம் ஜஹத் யேநாம் ப்ரஹ்மாக்யாம் பாவநீம் பராம் |
வ்ருத்தைவ தே து ஜீவந்தி பசுபிஸ் ஸமா நரா: || 130 ||

ये हि वृत्तिं जहत्येनां ब्रह्माख्यां पावनीं पराम् ।
वृथैव ते तु जीवन्ति पशुभिश्च समा नराः ॥ १३०॥

130. யார் தன்னை தூய்மைபடுத்துகின்ற இந்த எண்ணத்தை விட்டுவிடுகிறார்களோ? அதாவது, நானே பிரம்மன் என்கின்ற மேலானதும், வேறெந்த பிரமாணத்தாலும் நீக்க முடியாததுமான இந்த எண்ணத்தை விட்டுவிடுகிறார்களோ அவர்கள்

வாழ்க்கையை பயனற்ற முறையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் விலங்குகளுக்கு சமமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

யே ஹி வ்ருத்திம் விஜாநந்தி ஞ்ஞாத்வாபி வர்தயந்தி யே |
தே வை ஸத் புருஷா தந்யா வந்த்யாஸ்தே புவநத்ரயே || 131 ||

ये हि वृत्तिं विजानन्ति ज्ञात्वापि वर्धयन्ति ये ।
ते वै सत्पुरुषा धन्या वन्द्यास्ते भुवनत्रये ॥ १३१॥

131. யார் இந்த பிரம்மம் என்ற எண்ணத்தை அடைகிறார்களோ? பிறகு அதிலேயே நிலைபெற்று இருக்கிறார்களோ? அதில் உறுதிபடுத்திக் கொள்கி றார்களோ? அவர்களே உண்மையில் மேன்மையான மனிதர்கள், உயரிய பேறு பெற்றவர்கள், இவர்களே முவ்வுலகிலும் மற்றவர்களால் வணங்கத்தக்கவர்களாக இருப்பார்கள்.

யேஷாம் வ்ருத்தி: ஸமா வ்ருத்தா பரிபக்வா ச ஸா புந: |
தே வை ஸத் ப்ரஹ்மதாம் ப்ராப்தா நேதரே ஸப்தவாதிந: || 132 ||

येषां वृत्तिः समावृद्धा परिपक्वा च सा पुनः ।
ते वै सद्ब्रह्मतां प्राप्ता नेतरे शब्दवादिनः ॥ १३२॥

132. நான் பிரம்மன் என்ற இந்த எண்ணமானது எல்லா நேரத்திலும் இருந்துக் கொண்டு இருக்க வேண்டும். விதவிதமான எண்ணங்கள் வந்தாலும், இந்த ஒரே எண்ணம் மட்டும் மனதில் எப்போதும் ஓடிக் கொண்டே இருக்கவேண்டும்.

இந்த எண்ணம் உறுதியாக மனதில் இருக்க வேண்டும். மேலும், அந்த எண்ணமானது இயல்பாக, சுபாவமாக மனதில் வர வேண்டும். இத்தகையவர்கள்தான் பிரம்ம ஞானத்தை அடைந்து, ஜீவன் முக்தி நிலையை அடைகிறார்கள். வெறும் சப்தத்தினால் மட்டும் இந்த எண்ணத்தை உடையவர்களால் முக்தனாக முடியவே முடியாது.

குஸலா ப்ரஹ்மவார்தாயாம் வ்ருத்தி ஹீநா: சுராகிண: |
தே (அ)ப்யஞாநதயா நூநம் புநராயாந்தி யாந்தி ச || 133 ||

कुशला ब्रह्मवार्तायां वृत्तिहीनाः सुरागिणः ।
तेऽप्यज्ञानतया नूनं पुनरायान्ति यान्ति च ॥ १३३॥

133. பிரம்மத்தை பற்றி பேசுவதில், உரையாற்றுவதில் திறமையானவர்களாக இருந்தாலும், உறுதியான, இயல்பான, ஞானமற்றவர்கள் அதிகமான உலக பற்றுடையவர்களாக இருப்பார்கள். அவர்களும்

அக்ஞானிகளாகத்தான் இருக்கிறார்கள். கண்டிப்பாக அவர்கள் மரணத்திற்கு பிறகு மீண்டும் பிறப்பார்கள். பிறப்பு–இறப்புக்கு உட்பட்டவர்களாக இருப்பார்கள்.

நிமேஷார்தம் ந திஷ்டந்தி வ்ருத்திம் ப்ரஹ்மமயீம் விநா |
யதா திஷ்டந்தி ப்ரஹ்மாத்யா: ஸநகாத்யா: ஶுகாதய: || 134 ||

निमेषार्धं न तिष्ठन्ति वृत्तिं ब्रह्ममयीं विना ।
यथा तिष्ठन्ति ब्रह्माद्याः सनकाद्याः शुकादयः ॥ १३४॥

134. நான் பிரம்மன் என்ற எண்ணமின்றி ஒரு கணப்பொழுதும் அவர்கள் இருந்தது இல்லை. பிரம்மதேவர், சனகாதி முனிவர்கள், சுகர் போன்றவர்கள். இந்த நிலையில் மட்டும்தான் எப்பொழுதுமே இருந்துக் கொண்டு இருந்தார்கள்.

கார்யே காரணதாயாதா காரணே ந ஹி கார்யதா |
காரணத்வம் ஸ்வதோ கச்சேத் கார்யாபாவே விசாரத: || 135 ||

कार्ये कारणताऽऽयाता कारणे न हि कार्यता ।
कारणत्वं स्वतो गच्छेत्कार्याभावे विचारतः ॥ १३५॥

135. இதில் காரிய–காரணம் விசாரம் செய்யப்படுகிறது.

1. காரியம் அஸ்தி – காரியத்தின் இருத்தல் – நாம, ரூபங்களைக் கொண்டது.

2. காரணம் அஸ்தி – காரணம் இருத்தல் – காரியங்களுக்கு மூலக் காரணமாக ஒன்று மட்டும் இருத்தல்.

3. காரிய நிஷேதம் – காரியத்தை நீக்கி விடுதல் – காரணம் மட்டும் இருத்தல்.

4. காரண நிஷேதம் – காரணத்தை நீக்கி விடுதல் – காரியமே இல்லையென்ற போது, காரணமும் இல்லையென்று நீக்கிவிடப்படுகிறது.

இந்த நான்கு படிகளிலிருந்து அடையும் அறிவானது காரியமாக தெரிகின்ற **ஜகத் மித்யா** என்பதாகும். காரியத்தில் அதற்கு காரணத்தின் தன்மைதான் உள்ளது. பானையில் அதற்கு காரணமாக களிமண்ணின் தன்மைதான் இருக்கிறது. காரணத்தில் காரியம் இருக்காது. காரியத்தை சாராமல் காரணம் இருக்கிறது. பானையைச் சார்ந்து களிமண் இல்லை. காரியத்தில் இருக்கின்ற காரணம் என்ற தத்துவமும் சென்று விடும். காரியம் என்பது இல்லையென்றால், காரணமும் கிடையாது. விசாரத்தின் மூலமாகதான் இதை அறிய முடியும்.

அத சுத்தம் பவேத்வஸ்து யத்வை வாசா மகோசரம் |
த்ரஷ்டவ்யம் ம்ருதடேநைவ திருஷ்டாந்தேந புந: புந: || 136 ||

अथ शुद्धं भवेद्वस्तु यद्वै वाचामगोचरम् ।
द्रष्टव्यं मृद्घटेनैव दृष्टान्तेन पुनः पुनः ॥ १३६॥

136. பானை–களிமண் உதாரணத்தின் மூலமாக மீண்டும், மீண்டும் விசாரித்து பார்க்க வேண்டும். இறுதியில் தூய்மையான வஸ்து ஒன்று மட்டும் எஞ்சி இருக்கும். இதை வாக்கால் கிரகிக்க முடியாது.

அநே நைவ ப்ரகாரேண வ்ருத்திர் ப்ரஹ்மாத்மிகா பவேத் |
உதேதி சுத்த சித்தாநாம் வ்ருத்தி ஞானம் தத: பரம் || 137 ||

अनेनैव प्रकारेण वृत्तिर्ब्रह्मात्मिका भवेत् ।
उदेति शुद्धचित्तानां वृत्तिज्ञानं ततः परम् ॥ १३७॥

137. நுட்பமான ஒன்றைப் புரிந்துக் கொண்டு அறிவை அடைவதற்கு அதேமாதிரியான நுட்பமான கருவி களைத்தான் உபயோகிக்க வேண்டும்.

உபநிஷத் வகுத்துக் கொடுத்திருக்கின்ற முறையினால் தான், தூய்மையான மனதை அடைந்தவர்களுக்குத்தான் ஆத்ம ஞானமானது அடையப்படுகிறது. அதன்பிறகு அடைந்த ஞானத்தின் அப்படியே நிலைப்பெற வேண்டும்.

காரணம் வ்யதிரேகேண புமாநாதௌ விலோகயேத் |
அந்வயேந புநஸ்தத்தி கார்யே நித்யம் ப்ரபஸ்யதி || 138 ||

कारणं व्यतिरेकेण पुमानादौ विलोकयेत् ।
अन्वयेन पुनस्तद्धि कार्ये नित्यं प्रपश्यति ॥ १३८॥

138. முதலில் ஒரு சாதகன் காரணத்தை உன்னிப்பாக கவனித்து பார்க்க வேண்டும். வியதிரேகம் என்பது காரியம் இல்லாத போதும், காரணத்தை பார்த்தலாகும். எப்பொழுதெல்லாம் காரியத்தை பார்க்கின்றோமோ? அப்போதெல்லாம் அதற்கு ஆதாரமான அந்தக் காரணத்தைப் பார்க்க வேண்டும்.

கார்யே ஹி காரனம் பஸ்யேத்பஸ் சாத்கார்யம் விஸர்ஜயேத் |
காரணத்வம் ஸ்வதோ நஸ்யேத வசிஷ்டம் பவேந்முநி: || 139 ||

कार्ये हि कारणं पश्येत्पश्चात्कार्यं विसर्जयेत् ।
कारणत्वं स्वतो नश्येदवशिष्टं भवेन्मुनिः ॥ १३९॥

139. இந்தக் காரியத்தில் காரணத்தைப் பார்க்க வேண்டும். பிறகு காரியத்தை விட்டுவிட வேண்டும். அதனால், இந்த காரணம் என்கின்ற தன்மையும் சென்று விடும். இறுதியில் பரம்பொருளான பிரம்மமே எஞ்சி நிற்கும்.

பாவிதம் தீவ்ரவேகேந யத்வஸ்து நிஸ்சயாத்மநா |
புமாம் ஸ்தத்தி பவேச் சீக்ரம் ஞேயம் ப்ரமரகீடவத் || 140 ||

भावितं तीव्रवेगेन यद्वस्तु निश्चयात्मना ।
पुमांस्तद्धि भवेच्छीघ्रं ज्ञेयं भ्रमरकीटवत् ॥ १४०॥

140. எந்தப் பொருளைப்பற்றிய உண்மையான அறிவுடன் தொடர்ந்து முழு முயற்சியுடன் தீவிரமாக பாவித்துக் கொண்டு தியானிக்கின்றானோ? அதனால், நிச்சயமாக விரைவில் அந்தப்பொருளாகவே ஆகி விடுவான். எப்படி குளவியானது ஒரு புழுவை கொட்டி கொட்டியே குளவியாகவே மாற்றுகிறதோ? அதுப்போன்று இந்த நிலையை அடையலாம்.

அத்த்ருஸ்யம் பாவரூபஞ்ச ஸர்வமேதத் சிதாத்மகம் |
ஸாவதாநதயா நித்யம் ஸ்வாத்மாநம் பாவயேத் புத: || 141 ||

अदृश्यं भावरूपञ्च सर्वमेतत् चिदात्मकम् ।
सावधानतया नित्यं स्वात्मानं भावयेद्बुधः ॥ १४१॥

141. ஞானத்தை அடைந்தவன் எந்தமாதிரி தியானிக்க வேண்டும். எதைத் தியானிக்க வேண்டும் என்பது இதில் கூறப்பட்டிருக்கின்றது. ஞானியானவன் தொடர்ந்து அதிக காலம் மிக கவனத்துடனும், பொறுமையுடனும் தன்னையே (ஆத்மாவையே) தியானிக்க வேண்டும்.

பார்க்கின்றவைகளையும், பார்க்காதவைகள் எல்லாம் ஆத்ம ஸ்வரூபமாகவும் உலகத்திலுள்ள அனைத்தும் ஆத்ம

ஸ்வரூபமாகவும், நானே அனைத்துமாகவும் இருக்கின்றேன் என்றும் தியானிக்க வேண்டும்.

த்ருஷ்யம் ஹ்யத்ருஸ்யதாம் நீத்வா ப்ரஹ்மாகாரேண சிந்தயேத் |
வித்வாந் நித்ய சுகே திஷ்டடேத்தியா சித்ரஸபூர்ணயா || 142 ||

दृश्यं ह्यदृश्यतां नीत्वा ब्रह्माकारेण चिन्तयेत् ।
विद्वान्नित्यसुखे तिष्ठेद्धिया चिद्रसपूर्णया ॥ १४२॥

142. இந்த ஞானி பார்க்கப்படுவதை உண்மையற்றதாக எண்ணி, அவைகளை மித்யாவாக அறிந்து அவனுடைய பிரம்ம ஸ்வரூப எண்ணத்தில் எப்பொழுதும் இருந்து கொண்டிருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஞானியே ஆத்ம ஞானத்துடன் சைதன்யத்தை மனதில் நிறைத்தவனாக என்றும் ஆனந்த ஸ்வரூபமான பிரம்மனாகவே இருக்கின்றான்.

ஏபிரங்கை: ஸமாயுக்தோ ராஜயோக உதா ஹ்ருத: |
கிஞ்சித் பக்வ கஷாயாணாம் ஹடயோகேந ஸ்ம்யுத: || 143 ||

एभिरङ्गैः समायुक्तो राजयोग उदाहृतः ।
किञ्चित्पक्वकषायाणां हठयोगेन संयुतः ॥ १४३॥

143. இந்த பதினைந்து அங்கங்களுடன் கூடியுள்ள **ராஜயோகம்** ஸ்ரீ சங்கரர் ஆகிய என்னால் கூறப்பட்டது. மனத்தூய்மை மிகக்குறைவாக உள்ளவர்கள் இதை

பின்பற்றக் கூடாது. அவர்கள் ஸ்ரீ பதஞ்சலி முனிவர் கூறியுள்ள ஹடயோகத்தை பின்பற்ற வேண்டும்.

பரிபக்வம் மநோ யேஷாம் கேவலோ(அ)யம் ச ஸித்தித: |
குருதைவத பக்தாநாம் ஸர்வேஷாம் சுலபோ ஜவாத்: ‖ 144 ‖

परिपक्वं मनो येषां केवलोऽयं च सिद्धिदः ।
गुरुदैवतभक्तानां सर्वेषां सुलभो जवात् ॥ १४४॥

144. இங்கு கூறப்பட்ட ராஜயோகமானது தூய்மை யாக்கப்பட்ட, பக்குவப்படுத்தப்பட்ட மனதுடன் கூடியவர்களுக்கு மட்டுமே பலனைக் கொடுக்கும். குருவிடத்திலும், இறைவனி டத்திலும் பக்தியுடனும், சிரத்தையுடனும் இருப்பவர்களுக்கு மிக எளிதாகவும், உடனடியாகவும் இது பலன் கொடுக்கும்.

இதி ஸ்ரீமத் சங்கராச்சார்ய விரஷிதா அபரோக்ஷானுபூதி: ஸ்மாப்தா

॥ इति श्रीमद्शङ्कराचार्यविरचिता अपरोक्षानुभूतिः समाप्ता ॥

இத்துடன் ஸ்ரீமத் சங்கராச்சார்யர் இயற்றிய
அபரோக்ஷானுபூதி நிறைவடைந்தது.

--- ooOOOoo ---

அபரோக்ஷ அனுபூதி

(ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)

அபரோக்ஷ அனுபூதியில் விரிவாக விளக்கப்படும் தலைப்பு நிதித்யாசனம் அல்லது தியானம்.

அதாவது, ஒரு நிதித்யாசகன் எவ்வாறு இந்த உலகம் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று விளக்கப்படுகிறது.

ஸ்ரீ வித்யாரண்யர் என்ற ஞானி இந்த அபரோக்ஷ அனுபூதிக்கு "வித்யாரண்ய தீபிகா" என்ற பெயரில் மிகவும் தெளிவாக விளக்கம் எழுதியுள்ளார்.

அனுபூதி என்ற சொல்லுக்கு ஞானம், உணர்தல் அல்லது அனுபவித்தல் என்று பொருள்.

அனுபூதி என்றால், அனுபவம் என்றும், அபரோக்ஷம் என்றால் நேரடியாக என்றும் பொருள் கொண்டு “நேரடி அனுபவம்” என்று அழைக்கப்படுகின்றது.

அபரோக்ஷ அனுபூதி என்றால், சுயமாக பிரகாசிக்கின்ற அனுபவம். அல்லது ஆத்மாவை நேரிடையாக அனுபவித்தல் என்று பெயர்.